வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 317 | வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 24, வியாழன் 10.10.2013



மழைக்கான சாத்தியம் உண்டு.

27°C 26°C


# மஹிந்தவுக்குத் தலையசைத்து குர்ஷித் தமிழருக்கு துரோகம்

## இந்தியாவின் கையாலாகாத்தனம் இது என்றும் ராமதாஸ் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.10
அதிகாரப் பகிர்வுக்கு இலங்கையைப் பணிய வைக்காமல் ராஜபக்ஷ கூறியதற்குத் தலையாட்டிவிட்டு வந்திருக்கிறார் குர்ஷித். இதன் மூலம் ஈழத் தமிழர்களுக்கு மட்டுமன்றி, இந்தியாவின் இறையாண்மைக்கும் அவர் துரோகம் இழைத்துள்ளார் என பா.ம.க. நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

" இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் இலங்கைப் பயணம் ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் பெற்றுத் தரும் என்று உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்கள் நம்பிக்கொண்டிருந்த நிலையில், அனைவருக்கும் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது." என்றும் ராமதாஸ் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:
இலங்கை அரசு போரை நடத்தியபோது அதை முடிவுக்கு கொண்டுவந்து ஈழத் தமிழர்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்று சர்வதேசம் வலியுறுத்தியது. ஜனாதிபதி



“ 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் நேரடியாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இலங்கையைக் குர்ஷித் பணிய வைத்திருக்க வேண்டும்.

மஹிந்த போர் முடிந்து 6 மாதங்களில் தமிழர்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார்.
ஆயினும் போர் முடிந்து நான்கரை வருடங்கள் முடிந்துள்ள போதும், வடக்கு மாகாண சபைத் தேர் தல் முடிவுற்றுள்ள நிலையி லும், காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்காமல் இந்திய - இலங்கை ஒப்பந் தத்தை அவமதிக்கிறது இலங்கை அரசு.
இவ்வாறானதொரு நிலையில், இலங்கைக்குச் சுற்றுப் பயணம்

21

குர்ஷித்தை பதவி விலக்குங்கள் 06
சீண்டுகின்றது அமெரிக்கா 07
சண்டிலிப்பாய் இந்துவை வீழ்த்தி கிண்ணம் வென்றது சோமஸ்கந்தா!! 22
தென்னாபிரிக்காவுக்கு இந்தியா அழைப்பு 23

# டில்லியின் நிலைப்பாட்டில் உடன் மாற்றம் அவசியம்

## தெரிவுக்குழு கதை சாத்தியமாகாது என்கிறது கூட்டமைப்பு

கொழும்பு, ஒக்.10
தமிழர்கள் ஏற்றுக்கொள் ளக்கூடியதொரு தீர்வை முன்வைப்பதற்கு இலங்கை அரசு தயாராக இல்லை. எனவே, இலங்கை தொடர்பான தனது கொள்கையில் இந்தியா உடன் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளது.
நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்றால் மட்டுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என்று ஜனாதிபதி மஹிந்த கூறுவது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
இலங்கைக்கான உத்தியோக பூர்வபயணத்தை மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது, 13 ஆவது திருத்தத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்

21


# இந்தியத் தலையீடு ஏற்கவே முடியாது

## ஹெல உறுமய சீற்றம்

கொழும்பு, ஒக்.10
அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தொடர்பில் இந்தியாவின் தலையீட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜாதிக ஹெல உறுமயவின் சட்ட ஆலோசகர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
இந்திய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித்தின் இலங்கைப் பயணம் குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்ட அதே ஆண்டிலேயே அது மீறப்பட்டு விட்டது. விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைந்து மக்க ளுக்குப் பாதுகாப்பு வழங்குவதாகக் கூறிய இந்தியா, தனது அந்த வாக்குறுதியை நிறை

21

# கடமைகளை நேற்று பொறுப்பேற்றார் விக்கி



யாழ்ப்பாணம், ஒக்.10
வடக்கு மாகாண சபை முதலமைச்சராகப் பதவியேற்ற க.வி.விக்னேஸ்வரன், தனது கடமைகளை நேற்றுப் புதன்கிழமை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
நல்லூர் கோயில் பின் வீதியிலுள்ள முதலமைச்சரின் உத்தியோக பூர்வ இல்லத்திலேயே இந்த நிகழ்வு இடம்பெற்றது.
முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்ட விக்னேஸ்வரன், இந்த மாதம் முதலாம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் நியமனக் கடிதத்தைப் பெற்றிருந்தார்.
இதன் பின்னர் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் மாகாண முதலமைச்சராகச் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றிருந்தார்.
இந்த நிலையில் வடக்கு மாகாண சபையின் கடமைகளை நேற்றுக்காலை 9.30 மணியளவில் கையெழுத்திட்டு உத்தியோக பூர் வமாக ஏற்றுக்கொண்டார்.

21

# கனடாவின் முடிவு தன்னிச்சையானது

## அமைச்சர் பீரிஸ் காட்டம்

கொழும்பு, ஒக்.10
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கனேடிய பிரதமர் கலந்து கொள்ளாதது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத் தாது என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.
பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று கனேடிய பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் எடுத்த முடிவு தன்னிச்சையான முடிவு என்றும் அவர் கூறியுள்ளார்.
அண்மையில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த ஆஸ்திரேலியாப் பிரதமர் உட்பட பல பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள், மாநாட்டில் கலந்து கொள்வதாக உறுதி

21

# வடமாகாண உறுப்பினர்கள் பதவியேற்பு நாளை காலை

யாழ்ப்பாணம், ஒக்.10
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் பதவியேற்பு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பெரு வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

21

# இணுவிலில் டெங்கு நோயாளி

வலி.வடக்கு, ஒக்.10
இணுவில் பகுதியில் பெண் டெங்கு நோயாளி ஒருவர் நேற்று இனங்காணப்பட்டார்.
தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்குக் காய்ச்சலுக்காகச் சிகிச்சை பெறச் சென்ற வேளை யிலேயே அவருக்கு டெங்குத் தாக்கம் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.
இணுவில் துரை வீதியைச் சேர்ந்த தினேஸ் உஷா என்பவரே டெங்குத் தாக்கத்துக்கு உள்ளாகியமை உறுதிப்படுத் தப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
இவர் வசிக்கும் வீட்டில் பழைய ரயர்கள் கிழித்தெடுப்பதற்காக இருந்ததாகவும் அவ்வாறு இருந்த 30 க்கும் மேற்பட்ட ரயர்களுக்குள் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதாகவும் அவை உடனடியாக அழிக்

21

# டில்லி தலையிட்டால் ஆயுதம் ஏந்துவோம்

## பொதுபல சேனா எச்சரிக்கை

கொழும்பு, ஒக்.10
13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் செல்லும் அதிகாரப் பகிர்வுக்கு இலங்கை அரசைத் தாம் தொடர்ந்தும் வலியுறுத்துவோம் என இந்தியா தெரிவித்துள்ள நிலையில், இந்தியாவின் கைப்பாவையாக அரசு செயற்பட் டால் நாமும் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய அபாய நிலை ஏற்படும் என பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் வண. கலபொட அத்தே ஞானசார தேரர் எச்சரிக்கை விடுத்தார்.
இந்தியாவின் பேச்சைக் கேட்டு அரசு முட்டாள்தனமாக செயற்


21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை அலுவலகங்கள் விரைவில் ஒரே கூரையின் கீழ்

## வடக்கு முதல்வரின் முதல் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.10
வடக்கு மாகாண சபையின் அலுவலகங்களை ஒரே கூரையின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கையை முதலில் முன்னெடுக்கவுள்ளதாக, வடக்கு மாகாண சபை முதலமைச்சராகக் கடமையேற்றுக் கொண்டுள்ள க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண முதலமைச்சராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர், சபையின் கடமைகளை நேற்றுப் பொறுப்பெடுத்துக் கொண்டார் விக்னேஸ்வரன்.
இதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் கடமைகளை பொறுப்பெடுப்பதற்கான ஆவணத்தில் கையெழுத்திட்டுள்ளதாகவும், அதன் பின்னர் தன்னோடு பணியாற்றப் போகின்ற செயலாளர்கள் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் அலுவலகங்களை ஒரே கூரையின் கீழ் கொண்டு வருவது தொடர்பில் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.
இதன் பின்பு வடக்கு மாகாண சபை முதலமைச்சரின் அலுவலகமாக இயங்கவுள்ள கட்டடத்தை சென்று பார்வையிட்டதுடன், வட மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்துக்கும் பயணம் மேற்கொண்டார். (த-5)



## பேராசிரியர் இடைநிறுத்தம்

யாழ்பபாணம், ஒக்.10
யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் செ.இளங்குமரன் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.
இவருக்கு எதிராக யாழ்.பல்கலைக்கழக மாணவிகளால் பல தடவைகள் வாய் மூலம் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் எழுத்து மூலமும் முறையிடப்பட்டது. அத்துடன் அவருக்கு எதிராக மாணவர்களால் பல போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.
இந்த நிலையில் அவரைப் பல்கலைக்கழக செயற்பாடுகளில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அறிவிக்கப்பட்டது.
அவருக்கு எதிரான விசாரணைகள் தொடரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## கணித, விஞ்ஞான முன்னோடிக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஒக். 10
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் பள்ளிக்கூடம் செயற்றிட்டத்துடன் இணைந்து நடத்தும் ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான முன்னோடிக் கருத்தரங்குகள் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள தமிழ் மாணவர்களின் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை முன்னேற்றும் முகமாகவே இந்தக் கருத்தரங்குகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இதனடிப்படையில் இந்தக் கருத்தரங்கின் ஆரம்பக் கட்டம் இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் இடம்பெறவுள்ளது.
செங்குந்தா இந்துக் கல்லூரி, நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை மற்றும் நல்லூர் மங்கையற்கரசி மகா வித்தியாலயப் பாடசாலைகளுக்கு செங்குந்தா இந்துக் கல்லூரியிலும், வைத்தீஸ்வரா கல்லூரி மற்றும் வண்ணார் பண்ணை நாவலர் வித்தியாலயப் பாடசாலைகளுக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் முன்னோடிக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. (த-5)

## பொலிஸாருக்கு வாள் வெட்டு; சந்தேகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக்.10
மானிப்பாய் பொலிஸார் மீது வாளால் வெட்டிய சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இரண்டு பேரைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்.மடத்தடி மற்றும் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த இருவரையே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.
சுமார் 25 வயதுடைய இருவரும் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
ஆனைக்கோட்டையில் கடந்த 2ஆம் திகதி இரவு ரோந்தில் ஈடுபட்டிருந்த மானிப்பாய் பொலிஸார் ஒருவரை இலக்கத் தகடற்ற மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாதவர்கள் வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றிருந்தனர்.
இதனையடுத்து பொலிஸார் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 6 பேரை சந்தேகத்தில் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியிருந்தனர். எனினும் அவர்களுக்கும் சம்பவத்துக்கும் தொடர்பில்லை என்பது தெரியவந்தமையால் அவர்கள் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## வடக்கு அமைச்சுப் பட்டியல் முதல்வரால் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.10
வடக்கு மாகாண சபையின் அமைச்சுப் பட்டியல் இன்று முதலமைச்சரால் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மாகாண சபைக்குரிய அமைச்சுக்களைப் பங்கீடு செய்வதில் அங்கத்துவக் கட்சிகளிடையே கடந்த இரு வார காலமாகக் கலந்துரையாடல் நடத்தி வந்தது.
இந்த நிலையில் வடக்கு மாகாண அமைச்சுப் பங்கீடு தொடர்பான இழுபறி கடந்த திங்கட்கிழமையுடன் முடிவுக்கு வந்தது.
வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சராக த.குருகுலராஜாவும், சுகாதார அமைச்சராக பி.சத்தியலிங்கமும், விவசாயம் மற்றும் கால்நடை நன்னீர் மீன்பிடி அமைச்சராக பொ.ஐங்கரநேசனும், உள்ளூராட்சி மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சராக ப.டெனீஸ்வரனும் நியமிக்கப்படவுள்ளனர்.
இது தொடர்பிலான உத்தியோக பூர்வ அறிவிப்பு இன்று வியாழக்கிழமை வடக்கு மாகாண முதலமைச்சரால் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## மேல் மாகாண உறுப்பினர் கைது

கொழும்பு.ஒக் 10
ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் துசார இந்துனில் கிரிஉல்ல பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.
தனது சகோதரர் மற்றும் சகோதரி ஆகியோரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார். (த)

## சந்தேக நபர் விடுதலை

யாழ்பபாணம், ஒக்.10
பொலிஸாரின் சாட்சியங்கள் முரணாக இருந்தமையால் சந்தேக நபர் மீதான குற்றச் சாட்டு நிரூபிக்கப்படவில்லை. இதனால் அவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார்.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.
வேலணையைச் சேர்ந்த ஒருவர் சட்ட விரோதமாக மது விற்பனை செய்தார் என்று குற்றஞ்சாட்டிப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.
அது தொடர்பான விசாரணையின் போதே பொலிஸாரின் சாட்சியங்கள் ஒன்றுக்கொன்று முரணாக இருந்தன. இதனால் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாமையால் சந்தேக நபர் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். (த-4)

# கடும் தொனியிலான செய்தியுடனேயே கொழும்பு வருகிறார் பிரிட்டிஷ் பிரதமர்

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், தமது இலங்கை விஜயத்தின் போது கர்ண கடூரமான செய்தியொன்றை இலங்கைத் தலைமைத் துவத்துக்கு விடுக்கவுள்ளார்.
நவம்பரில் கொழும்பில் நடைபெற விருக்கும் பொதுநலவாய அமைப்பு நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் இலங்கை வருகின்றார். அச்சமயம் அவர் காட்டமான இச் செய்தியை விடுப்பார் என 'த ரைம்ஸ்' நாளிதழ் தெரிவித்துள்ளது.
உத்தேச உச்சிமாநாடு தொடர்பாக கனடா கடும் நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இதன் தாக்கம் பிரிட்டனையும் கடும்போக்குக்கு நிர்ப்பந்தித்துள்ளது என்றும் மேற்படி நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.
அதேவேளை, இலங்கையில் இந்த உச்சிமாநாட்டை நடத்துவதற்கான முடிவு, நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே முன்னைய அரசால் எடுக்கப்பட்டது. சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு முடிவு அல்ல என வெளிவிவகாரத்துக்கும், பொதுநலவாய செயலகத்துக்குமான பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இந்த மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் கலந்துகொள்வார். அதேவேளை, கடுமையான செய்தியொன்றையும் இலங்கைத் தலைமைத்துவத்துக்கு விடுப்பார். பொதுநல வாய அமைப்புக்கான பிரிட்டனின் பலத்த ஆதரவையும் அவர் வலியுறுத்துவார் என்றும் இப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
பிரச்சினையிலிருந்து ஒதுங்கி விடுவதே இலங்கையில் அபிவிருத்தியைக் கொண்டுவருவதற்குச் சரியான வழி என நாங்கள் நினைக்கவில்லை.

> பிரச்சினையிலிருந்து ஒதுங்கி விடுவதே இலங்கையில் அபிவிருத்தியைக் கொண்டுவருவதற்குச் சரியான வழி என நாங்கள் நினைக்கவில்லை.



வாதித்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு பரிந்துரை செய்யவேண்டிய அவசியமும் கிடையாது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.
அதேவேளை, இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அதிருப்தி தெரிவித்துள்ள கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் உச்சிமாநாட்டைப் பகிஷ்கரிக்க முடிவுசெய்துள்ளார்.
கொழும்பில் உச்சிமாநாட்டை நடத்துவதற்கான முடிவை ஆட்சேபித்துள்ள ஹார்பர், பொதுநலவாய அமைப்புக்கு கனடா வழங்கும் நிதி குறித்து மீள் பரிசீலனை செய்யுமாறும் வெளிவிவகார அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார்.
அரசியல் தலைவர்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எதிரான அச்சுறுத்தல்கள், அவர்களை சிறைவைத்தல், சிறுபான்மையினருக்கு எதிரான கெடுபிடிகள், காணாமற்போகச்செய்தல், நீதிக்குப் புறம்பான படுகொலைகள் ஆகியவை தொடர்பான முறையீடுகள் தமக்கு அதிர்ச்சியளிக்கின்றன என்றும் ஹார்பர் குறிப்பிட்டுள்ளார்.
கொழும்பில் நவம்பர் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை நடைபெறும் பொதுநல அமைப்பு நாடுகளின் தலைமைகளுக்கான உச்சிமாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன், இளவரசர் சாள்ஸ், அமைப்பில் அங்கம் வகிக்கும் 53 நாடுகளின் தலைவர்களில் பெரும்பாலானோர் இம்மாநாட்டில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப் படுகிறது.

## உலகத் தலைவர்களுக்கு நாட்டில் எதைக் காட்டப்போகிறது அரசு?

### விக்கிரமபாகு கருணாரட்ன கேள்வி

கொழும்பு. ஒக்.10
பொதுநலவாய மாநாட்டையொட்டி வீதி அபிவிருத்தியை மட்டும் செய்தால் போதாது, நாட்டு மக்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் நவசமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன.
அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"பொதுநலவாய மாநாட்டை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ள அரசு, அந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ள உலகத் தலைவர்களுக்கு எதை காண்பிக்கப்போகின்றது? சர்வதேச தரத்தில் காண்பிக்க நாட்டில் என்னவுள்ளது?
போர் நடைபெற்ற இடங்கள், அதனால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், வீடுகள், நாட்டில் அதிகரித்து வருகின்ற கடத்தல்கள் மற்றும் அரசியல் கைதிகள் ஆகியவற்றையா அரசு காண்பிக்கப்போகின்றது? - என்றார். (சி)

## கனடாவின் தீர்மானத்துக்கு பொதுநலவாயம் கவலை

கொழும்பு.ஒக் 10
அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் மிகக் குறைந்த மட்டத்தில் பங்குபற்றப் போவதாகக் கனடா தீர்மானித்ததையிட்டு பொது நலவாயச் செயலகம் கவலை தெரிவித்துள்ளது.
எந்த மட்டத்தில் பங்குபெறுவது எனத் தீர்மானிப்பது அந்தந்த நாட்டைப் பொறுத்த விடயமாகும் எனச் செயலகத்தின் பேச்சாளர் றிச்சாட் உக்கு தெரிவித்துள்ளார்.
கனடா, பொதுநலவாயக் குடும்பத்தின் மதிப்புமிக்க அங்கத்தவர். அதன் பங்களிப்பு வேறு அங்கத்துவ நாடுகளுக்குப் பெருமளவு நன்மைகளைக் கொடுத்து வருகின்றது என்றும் அவர் கூறினார்.
இலங்கையில் ஆட்சிமுறைமை, நல்லிணக்கம், மனித உரிமைகளை மதித்தல் ஆகிய துறைகளில் முன்னேற்றம் ஏற்படுவதை உறுதி செய்ய பொதுநலவாயச் செயலகம் இலங்கையுடன் நெருக்கமாக வேலை செய்வதாக றிச்சாட் உக்கு கூறினார். (த)

> கனடா, பொதுநலவாயக் குடும்பத்தின் மதிப்புமிக்க அங்கத்தவர்.

## கரையொதுங்கிய மீனவர் நீதிமன்றப் பாதுகாப்பில்

யாழ்ப்பாணம், ஒக்.10
படகு பழுதடைந்தமையால் நெடுந்தீவில் கரையொதுங்கி சரணடைந்த இராமேஸ்வரம் மீனவர்கள் நால்வரும் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.
சட்ட மா அதிபரின் அறிக்கை கிடைத்ததும் இவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி நீதிமன்றுக்கு அழைத்து வருமாறும் அது வரை யாழ். சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாப்பில் வைக்குமாறும் ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.
நான்கு மீனவர்களும் கடந்த வியாழக்கிழமை படகுடன் நெடுந்தீவுக் கரையில் ஒதுங்கினர். பொதுமக்களின் உதவியுடன் அவர்கள் பொலிஸில் சரணடைந்தனர். அவர்கள் தொடர்பில் பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.
இதனையடுத்து அவர்கள் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (த-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தர நியமனம் கோரி

# தபாலகத்தில் நேற்று பணிப்புறக்கணிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 10
யாழ்ப்பாணம் தபாலகத்தில் தற்காலிக அடிப்படையில் 10 வருடங்களாகப் பணியாற்றி வரும் ஊழியர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தமது பிரச்சினை தொடர்பில் 2 மாதங்களுக்குள் தீர்வு தருவதாக வடமாகாணப் பிரதி தபால்மா அதிபர் என்.ரட்ணசிங்கம் உறுதியளித்ததையடுத்து 2 மணித்தியால பணிப்புறக்கணிப்பின் பின்னர் ஊழியர்கள் பணிக்குத் திரும்புவதாக அகில இலங்கை தந்தித் தொடர்பாடல் சேவை அமைப்பின் யாழ். கிளைத் தலைவர் ஆ.சுபாகரன் தெரிவித்தார்.

தற்போது இங்கு 13 வெற்றிடங்கள் உள்ளன. அவற்றை நிரப்புமாறு கோரப்பட்ட போதும் இன்றுவரை அந்த வெற்றிடங்களுக்கு ஆள்கள் நியமிக்கப்படவில்லை. இவ்வாறிருக்க வெற்றிடம் எதுவும் இல்லை என்று தபால்மா அதிபர் தவறாகக் கருத்து வெளியிட்டுள்ளார். எனவே அந்த வெற்றிடத்தை நிரப்பி நியமனத்தை வழங்குமாறு கோரியே பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

தபால் பிரிவில் உள்ள மூன்று வெற்றிடத்தையும், தந்திச் சேவை பிரிவில் உள்ள ஒன்பது வெற்றிடத்தையும் நிரப்புமாறு உத்தரவிட்டு 2011 ஆம் ஆண்டு கொழும்பு தலைமையகத்திலிருந்து கடிதம்மூலமாக யாழ்.தபால் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. அந்த வெற்றிடங்களில் மூன்று மட்டுமே நிரப்பப்பட்டுள்ளது. தவிர ஏனைய பிரிவில் 4 பேர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளனர். அந்த வெற்றிடமாக தற்போது 13 வெற்றிடங்கள் உள்ளன என்று ஊழியர்கள் தெரிவித்திருந்தனர். பணிப் புறக்கணிப்புமுடிவுக்குக்கொண்டு வரப்பட்டதையடுத்து ஊழியர்கள் தமது பணியைத் தொடர்ந்தனர். (வ-4)



நேற்றையதினம் உத்தியோகபூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்ற வடமாகாண சபை முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் மாகாண சபை பிரதிநிதிகளுடன்.... (வ-21)

# 26,000 பேர்

## யாழ்.மாவட்டத்தில் நீக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.10
இந்த வருடத்துக்குரிய வாக்காளர் பெயர்ப்பட்டியலிலிருந்து யாழ்.தேர்தல் மாவட்டத்தில் நீக்கப்படும் 26 ஆயிரம் பேருக்கும் தனித்தனியாகத் தேர்தல் திணைக்களத்தால் கடிதம் அனுப்புவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2013 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜூன் மாதத்திலிருந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராம சேவையாளர் ஊடாக பி.சி. படிவம் வீடு வீடாக விநியோகிக்கப்பட்டு மீளப்பெறப்பட்டுள்ளது. தற்போது இதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பெயர் இருந்து தற்போது விண்ணப்பிக்காதவர்கள் அனைவரும் நீக்கப்பட்டுள்ளனர். 26 ஆயிரம் பேர் வரை இவ்வாறு நீக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நீக்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் கிராம சேவையாளர் அலுவலகம், பிரதேச சபை, மாவட்டச் செயலக தேர்தல் திணைக்களத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

பெயர் நீக்கம் செய்யப்பட்டவர்கள் இதுவரையில் வாக்காளர் பெயர்ப் பதிவு செய்யாதவர்களும் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் கிராம சேவையாளரிடம் உரிமைக் கோரிக்கைப் படிவத்தை பெற்று சமர்ப்பிக்க முடியும்.

இதேவேளை பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்படுவோருக்குத் தனித்தனியாக யாழ்.மாவட்ட தேர்தல் திணைக்களத்தால் கடிதம் அனுப்பப்படுகின்றது. அதனுடன் உரிமைக் கோரிக்கைப் படிவமும் அனுப்பப்படுகின்றது.

இதனைப் பூரணப்படுத்தி சமர்ப்பித்து வாக்காளராக இணைத்துக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

டெங்கு ஒழிப்பு வாரத்தையொட்டிய

# விழிப்புணர்வுப் பேரணிகள்

யாழ்ப்பாணம்.ஒக்.10
டெங்கு ஒழிப்பு வாரத்தின் மூன்றாவது நாளான நேற்று புதன்கிழமை யாழ்.மாநகர சபை சுகாதாரப் பகுதியினரால் டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றது.

யாழ்.சன்மார்க்க வித்தியாலயத்தில் காலை 8 மணிக்கு ஆரம்பமான ஊர்வலத்தில் யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்களுடன் பாடசாலை மாணவர்கள், மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதியூடாக மீண்டும் சன்மார்க்க வித்தியாலயத்தைச் சென்றடைந்தது. யாழ்.மாநகர சுகாதாரப் பரிசோதகர்கள் தலைமையில் நடைபெற்ற ஊர்வலத்தில் டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தாமல் சுகாதாரத்தைப் பேணும் வகையில் பொது மக்கள் விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் கூறும் பதாகைகளும் காணப்பட்டன.

இதேவேளை பாடசாலை மாணவர்களின் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு எழுச்சி ஊர்வலம் ஒன்று நேற்றுமுன்தினம் அரியாலையில் இடம்பெற்றது.

**கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கு சபையில் கழிவகற்றும் வாகனங்களுடன் தனியார் வாகனங்களும் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளன.**




நல்லூரில்.....

யாழ்.மாநகர சபை ஏற்பாட்டில் அரியாலை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.கிஷோக்குமார் தலைமையில் எழுச்சி ஊர்வலம் இடம்பெற்றது. குறித்த ஊர்வலம் யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் இருந்து ஆரம்பமாகி அரியாலை பிரதேசத்தின் சகல இடங்களிலும் இடம்பெற்றது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உதவியாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள், பாடசாலை ஆசிரியர்கள் போன்றோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

[illegible] நடவடிக்கைக்கு பிரதேச மக்கள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

டெங்கு ஒழிப்பு வாரத்தில் பிரதேசத்தில் தேங்கி இருக்கும் குப்பைகள் மற்றும் கழிவுப் பொருள்கள் என்பனவற்றை அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கழிவுப் பொருள்களை அகற்றுவதற்குச் சபையில் கழிவகற்றும் வாகனங்களுடன் தனியார் வாகனங்களும் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளன.

அத்துடன் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மக்களின் குடியிருப்பு சுற்றாடல்களை பார்வையிடல் டெங்கு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-என்றார். (வ-7-17)



அரியாலையில்......

அரியாலை டெங்கு ஒழிப்பில்

# 1,256 வீடுகள் சோதனைக்கு

யாழ்ப்பாணம், ஒக். 10
அரியாலை பிரதேசத்தில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு செயற்பாட்டின் போது அந்தப் பகுதியில் ஆயிரத்து 256 வீடுகள் சோதனைக்குட்படுத்தப்பட்டதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.கிஷோக்குமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த செவ்வாய்க்கிழமை அந்தப் பகுதியில் இடம்பெற்ற டெங்கு தொடர்பான விழிப்புணர்வு மற்றும் அது தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த நடவடிக்கையின் போது இந்தப் பிரதேசத்தில் உள்ள 1,256 வீடுகளின் சுற்றாடல்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது 2 குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அதனைவிட 86 குடியிருப்பாளர்களின் சுற்றாடல்கள் நுளம்பு பெருகும் நிலையில் காணப்பட்டன.

இத்தகைய சுற்றாடல்கள் உடனடியாகவே கவனத்துக்கு எடுக்கப்பட்டு அவை சீர்செய்யப்பட்டன.

டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையின் போது நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு தரப்பட்ட உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர்.

இதேவேளை குறித்த பிரதேசத்தில் டெங்கு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் தொடர்ந்து வாரத்தில் செவ்வாய்க்கிழமைகளில் நடத்தவும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (வ-17)

# உண்ணாவிரதத்தை இழிவாக்கவே வழக்கு

விஜயகாந்த் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.10
தமது அகிம்சை வழியிலான உண்ணாவிரதத்தை இழிவாக்கும் வகையிலேயே யாழ்.மாநகர சபையினர் தனக்கு எதிராக யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர் என்று யாழ்.மாநகர சபை உறுப்பி னரும் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.விஜயகாந்த் தெரிவித்தார்.

தானும் மாநகர தற்காலிக தொழிலாளர்களும் உண்ணாவிரதத்தில் ஈடுபடுவதால் வீதிப் போக்குவரத்துக்கோ, மக்கள் சேவைகளுக்கோ, உத்தியோகத்தருக்கோ இடையூறு ஏற்படுத்தவில்லை என்று அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார். (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு விற்பனைக்கு**

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில் கஸ்தூரியார் வீதியில் வீடு விற்பனைக்குண்டு. 0770869315

**பிறிச் விற்பனைக்கு**

SISIL . DOUBLE DOOR
பிறிச் விற்பனைக்குண்டு.
0779689691

# மரண அறிவித்தல்கள்

## நல்லையா புவனேந்திரன் (S.L.A.S)

(முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், ஓய்வுபெற்ற பிரதேச செயலாளரும்)



யாழ்பாணம் உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், கல்முனையை வசிப் பிடமாகவும் கொண்ட நல்லையா புவனேந்திரன் கடந்த (06.10. 2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா-இரத்தினகாந்தி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சாமித்தம்பி -இராசமணி தம்பதியரின் அன்பு மருமக னும், செல்வநாயகியின் அன்புக் கணவரும், மதுரா (தாதிய உத்தியோகத்தர், கல்முனை), ஜினேந்திரா (இந்து-அமெரிக்கா), அனுரா (பிரான்ஸ்), சுரேந்திரா (தாதிய உத்தியோகத்தர், வடினாகல) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற துரைராஜசிங்கம், காலஞ்சென்ற ஐயக் கோன், மகரசிங்கம், பாக் கியராசா, தவமலர், சாந்தநாயகி, கமலநாயகி, தெய்வநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செல்வநாயகம், நவரெத்தினம், ஜீவநாயகம்(கனடா), தேவதேவி, சுசிலாதேவி, யசோதரா தேவி, கோகிலசுந்தரி, செல்வரஞ்சித நாயகி, கலைச்செல்வி, காலஞ்சென்ற ஈஸ்வரபாதம், வெள்ளைச்சாமி, நெல்லிநாதன், காலஞ்சென்ற ரஞ்சநாதன் ஆகியோரின் மைத்துனரும், தேவராசா, சந்திரிகா, ஜீவமலர், சுதர்சினி(கனடா) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், சுமித்ரா(தாதிய உத்தியோகத்தர், கல்முனை), ஜீவராணி (அமெரிக்கா), முரளீதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், கிருஷ்ணசைதன்ஜன்(கித்து), அஜய்பிரசாத்(பிரான்ஸ்), ஹர்ஷவர்த்தனன், சூரியவர்சன் ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் நல்லடக்கத்துக்காக கல்முனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

[illegible]முனை-01, தொலைபேசி-0672220128 தகவல்: குடும்பத்தினர்.

## சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் (மணியம்)



ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலசுப்பிரமணியம் நேற்று (09.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் கனகாம்பிகை, ஞானரஞ்சிதம், தேவராசா, மனோரஞ்சிதம், மோகனரஞ்சிதன் (சந்திரன் பந்தல் சேவை), மோகனாம்பாள் ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2013) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.68, ஸ்ரேசன் றோட்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (32590-23-14)

தகவல்:
சந்திரன் (சந்திரன் பந்தல் சேவை)

## தம்பு மயில்வாகனம்



மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு மயில்வாகனம் 09.10.2013 புதன்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மீசாலை கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பு-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சின்னப்பா-கற்பகம் தம்பதியரின் மருமகனும், பாக்கியவதியின் அன்புக் கணவரும் தமயந்தி (நோர்வே), கமலேஸ்வரன் (சுவிஸ்),கிருபாகரன் (ஆசிரியர்), துவா கரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாலன் (நோர்வே), சிவசக்தி (சுவிஸ்), இராஜவதனி (ஆசிரியர், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி), விஜயரதி (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், துளசிகா, கிருத்திகா, ராகவி,ராகுல், பானுஜா,பிரவீன், அபிரோஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் சோமசுந்தரம், காலஞ்சென்ற பொன்னம்மா ஆகியோரின் சகோதரனும் வேலுப்பிள்ளையின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.10.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மத்திய வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை. (ரி 12693) (7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே : 021 227 0734

## திருமதி சரஸ்வதி நாகராசா



செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நாகராசா(சின்னக்கா) 08.10.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு- பொன்னுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற மாணிக்கம் நாகராசாவின் அன்பு மனைவியும், அம்பிகாவின் அன்புத் தாயும், பேரம்பலம் அவர்களின் அன்பு மாமியாரும், கோசலன், அபிராமி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சிவக்கொழுந்து, காலஞ்சென்ற மகா தேவன் மற்றும் பகவதி, சோதிப்பிள்ளை, யோகேந்திரி ஆகியோரின் பாசமிகு சகோதரி யும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, சோமசுந்தரம்(மட்டுவில்), சண்முகநாதன் மற்றும் கிருஸ்ணபிள்ளை(மட்டுவில்), சீதாலட்சுமி, காலஞ்சென்ற வரதராசா மற்றும் புனிதவதியார், காலஞ்சென்ற முருகையா, செல்லப்பா, காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், சிவராசா மற்றும் சரஸ்வதி,இராஜதிலகேஸ்வரி, சாந்தநாயகி, பரராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு பொரளை லங்கா மலர்ச்சாலையில் (09.10.2013) அன்று மு.ப.11.00 தொடக்கம் பி.ப.1.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு செட்டிகுறிச்சி, பண்டத்தரிப்பிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (10.10.2013) வியாழக் கிழமை ந.ப. 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, சம்பில்துறை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு (32574)(5.6.3)

தகவல்:
மணிமாஸ்ரர்.

# யாழில் சாதனை படைத்த முஸ்லிம்களுக்கு கௌரவம்

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்துறைகளிலும் சாதனை படைத்த முஸ்லிம்கள் கௌர விக்கப்படவுள்ளனர்.

இதற்கான் விழா ஒன்றை எதிர்வரும் மாதங்களில் நடத்தவுள்ளதோடு அது தொடர்பான வரலாற்று நினைவுமலர் ஒன்றையும் வெளியிடவும் தீர்மானிக் கப்பட்டுள்ளது. யாழ்.முஸ்லிம் மறுமலர்ச்சி அமைப்பினருக்கும் அதன் ஆலோசகர்களுக்கும் இடையேயான கூட்டமொன்று கொழும்பில் இடம்பெற்றது. அதில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதாக அமைப்பின் தலைவர் எம்.சப்ரின் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறுகள் பதிவில் வைக் கப்பட வேண்டும். யாழ். முஸ்லிம்களுக்கிடையே தொன்று தொட்டு பிரகாசித்த வர்கள். வரலாறுகளில்இடம்பிடித்தவர்கள். தற்போதைய சமுதாயத்துக்கு தெரி யப்படுத்தப்பட வேண்டும். யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி யில் பயிலும் தரம் 10, தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கு கருத்தரங்கு கள் நடத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறான சாத னையாளர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

(வ-4)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் அதிபர்,அருட்சகோதரி

அழகேஸ்வரி செபஸ்ரியாம்பிள்ளை

அவர்களின் அன்புத் தாயார்

## அன்னம்மா செபஸ்ரியாம்பிள்ளை

கடந்த 07.10.2013 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதபாபங் களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
மா/மானிப்பாய் சென்ற்.ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை.

(32573)(15.2.0)

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி அப்புலிங்கம்



ஆனந்தா வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அப்புலிங்கம் நேற்று (09.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆனந்தா வீதி,
மானிப்பாய். (32591-23-14)

தகவல்:
முகுந்தன்
(குகன்- மகன்)

# 16 th Year Remembrance

Born 28 . 02 . 1928
Died 10 . 10 . 1997



**The Rt.ReV.Dr.David Jeyaratnam Ambalavanar**

(Second Bishop of Jaffna, Diocese of the Church of S.India)

You See that his faith and his actions were working together and his faith was made Complete by what he did
James 2:22

Fondly remembered by his family

(32297) (3.6.4)

**வாகனங்கள் விற்பனைக்குண்டு**

GZ-xxxx தொடரிலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள Toyota Regiaus இன வான் விற்பனைக்கு உண்டு.அத்துடன் LI- xxxx தொடரிலக்கமுடைய issuzu Boofer இன வாகனமும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 6682281, 021 2213331

**நெற் காணி விற்பனைக்கு**

உயர்தரமான நெற்காணி 30 பரப்பு காரை நகரில் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- விளம்பரஇல. 4471
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனை அல்லது ஒத்துமாறுதல்**

GS xxxx இலக்கம் கொண்ட "ஹைஏஸ்" வான் விற்பனைக்கு அல்லது மோட்டார் காருக்கு ஒத்து மாறுவதற்கு விருப்பமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 261 6970 (37556) (7.6.3)

# மரண அறிவித்தல்

## யோண்பிள்ளை ஜோட்ஸ் தவராசா

(இளைப்பாறிய அதிபர்)



இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவை நிரந்தர வதிவிடமாகவும், மன்னாரைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட யோண்பிள்ளை ஜோட்ஸ் தவராசா நேற்று (09.10.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கமிலஸ் யோண்பிள்ளை-தங்கமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிறகோரி- அக்கினசம்மா தாரிசம்மா தம்பதியரின் மருமகனும், மேரி மாகிறட் புஸ்பராணியின் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்) அன்புக் கணவரும், ஜெயக்குமார் (ஆசிரியர் மன்-அல்லஷார் ம.வி), ராஜகுமார் (ஆசிரியர் மன்-புனித லூசியா ம.வி) ஆகியோரின் அன்புத்தந்தையும், றியளினி (தேசிய சேமிப்பு வங்கி மன்னார்), லூட்ஸ் சாந்தினி (ஆசிரியர் மன்-புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்-பற்றிமா ம.ம.வி) ஆகியோரின் பாசமிகு மாமனும், செரோன் (புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி), வர்ஷா (புனித சவேரியார் பெண்கள் கல்லூரி), லறிஷன் (புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி), கோஷல்யன் ஆகியோரின் அன்புப் பேரனும், இரட்ணமாலா, ஜெசிமாலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மேரி கிறேஸ், ஜெயசிங்கம், இரட்ணதுரை, தங்கரத்தினம், செபஸ்தியாம்பிள்ளை, மேரி றோஸ்மலர், துரைரட்ணம், அக்கினஸ் குணமணி, தங்கத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் நாளை (11.10.2013) வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு இரணைப்பாலை புனித பற்றிமா மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் இரணைப்பாலை பற்றிமா மாதா சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரணைப்பாலை. (ரி/12695) (10,14)

தகவல்: குடும்பத்தனர்.
077 6032163

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழலைகளுக்கான இறை தரிசனம் அமைப்பு ஆரம்பம்




தென்மராட்சி.ஒக்.10
வடமாகாணத்தில் வசதிகளின்றி இயங்கும் முன்பள்ளிகளில் கற்கும் சிறார்களின் நலன் கருதி தென்மராட்சிப் பிரதேச மக்களால் 'மழலைகளுக்கான இறை தரிசனம்' என்னும் அமைப்பு நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் ஓய்வுநிலை கிராம அலுவலர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அமைப்பின் உருவப் படத்தை திரை நீக்கம் செய்து ஆரம்பித்து வைத்தார்.
தென்மராட்சிப் பிரதேச மத குருமார், பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட 15 பேர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டது.
முதல்கட்டமாக அமைப்பின் சேவையாக வன்னிப் பிரதேசத்தில் முன்பள்ளிகளில் கற்கும் 6 ஆயிரம் மாணவர்களுக்கு விளையாட்டுப் பொருள்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன. நிகழ்வில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவு முன்பள்ளிச் சிறார்களும் பெற்றோரும் தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி ர.நவரத்தினம் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (வ-9)


அமைப்பின் சேவையாக வன்னிப் பிரதேசத்தில் முன் பள்ளிகளில் கற்கும் 6 ஆயிரம் மாணவர்களுக்கு விளையாட்டுப் பொருள்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

## வாழைத் தோட்டங்களில் சல்லடை போட்டுத் தேடுதல்

யாழ்ப்பாணம், ஒக்.10
வலி.கிழக்குப் பிரதேசத்தில் உள்ள வாழைத் தோட்டங்கள் சுகாதாரப் பகுதியினரால் சல்லடைபோட்டுச் சோதனை மேற்கொள்ளப்படுகின்றது.



தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டுச் சுகாதாரப் பகுதியினர் வாழைத் தோட்டங்களில் இருந்து நுளம்பு பெருகும் சூழலுக்கு ஏதுவான காரணிகளின் அடிப்படையில் சந்தேகத்தில் சோதனைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.
குறிப்பாக வாழைத் தோட்டங்களில் குலைகள் வெட்டப்பட்ட வாழை மரங்களை அடியுடன் வெட்டி அகற்ற வேண்டும் எனவும் அகற்றப்பட்ட வாழை மரங்கள், தண்டுகள் என்பனவற்றை உடனடியாக நிலத்தில் வெட்டிப் புதைக்குமாறும் சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர்.
வாழை மரங்களில் குலைகளை வெட்டுவதற்காக வாழைகள் வெட்டப்பட்ட பின்னர் அதில் இருந்து சுரக்கும் நீரில் நுளம்புக் குடம்பிகள் பெருகுவதாகச் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.
இதன் காரணத்தால்தான் அகற்றப்படும் வாழையை உடனடியாக நிலத்தில் வெட்டிப் புதைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.
நீர்வேலி, கோப்பாய், புத்தூர், சிறுப்பிட்டி போன்ற பகுதிகளில் உள்ள வாழைத்தோட்டங்களில் சுகாதாரப் பகுதியினர் இவ்வாறு சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-17)



யாழ்.நகர் மின்சார நிலைய வீதியில் உள்ள வடிகால் கழிவு நீர் வடிந்தோட முடியாத நிலையில் கழிவுப் பொருள்கள் தேங்கி நின்றதால் தடைப்பட்டிருந்தது. இதனால் கடுமையான துர்நாற்றம் வீசியது. அதனையடுத்து மாநகர சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் வடிகாலைச் சீர் செய்து கழிவு நீர் வழிந்தோட வழி ஏற்படுத்தினர். (வ-17)

## அபராதம்

தென்மராட்சி, ஒக்.10
மது போதையில் காப்புறுதி மற்றும் வாகனவரி என்பவை இன்றி வாகனம் செலுத்திய நபருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் 12 ஆயிரத்து, 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து மூன்று குற்றங்களுக்குமாக 12 ஆயிரத்து, 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## பெயர் மாற்ற விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு

தென்மராட்சி, ஒக். 10
சாவகச்சேரி நகர சபையின் கடை அறைகள் பெயர் மாற்றம் தொடர்பாகக் கிடைத்த விண்ணப்பங்கள் நகர சபையால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.
பரிசீலனை செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டு தற்போது கடை நடத்துபவருடன் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.
தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட சபை பொறுப்பேற்பதற்கு முன்னர் கைமாறிய கடைத் தொகுதிகளின் பெயர் மாற்றம் தொடர்பாகச் சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது.
அதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சபையால் நியமிக்கப்பட்ட குழவினரால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. (வ-9)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.10
பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை பகல் 1.30 மணிக்குப் பாடசாலை அதிபர் எஸ்.கணேசதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ். சந்திரராஜா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (வ-10)



## சட்டவிரோதமாகப் பசு வெட்டியோர் மாட்டினர்

யாழ்ப்பாணம், ஒக்.10
யாழ்.மடத்தடி வீதியில் சட்டவிரோதமாக இறைச்சிக்காக பசுமாட்டை வெட்டிய நபர்கள் கையும் மெய்யுமாக மாட்டிக் கொண்டனர்.
அரியாலை பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். கிஷோக்குமார் தலைமையில் சென்ற குழுவினர் பசுமாட்டை வெட்டிய நபர்களைப் பிடித்துப் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
சின்னக்கடை பகுதியில் உள்ள இறைச்சிக்கடை ஒன்றில் வைத்து விற்பதற்காக குறித்த பசுமாடு சட்டத்துக்கு மாறாக வெட்டப்பட்டது. சட்டவிரோதமாக மாட்டை வெட்டிய நபர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.
அத்துடன் குறித்த மாட்டிறைச்சி உடனடியாக நிலத்தில் வெட்டிப் புதைக்கப்பட்டதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கிஷோக்குமார் தெரிவித்தார். (வ-17)

## வாழ்வெழுச்சித் திட்டத்தின் 5 ஆம் கட்டப் பணி நாளை ஆரம்பம்

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் ஐந்தாம் கட்டமாக பழ மரக் கன்றுகள் மற்றும் விதைகள் வழங்கும் நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை இலங்கை முழுவதிலும் உள்ள பிரதேச செயலகங்களில் இடம்பெற வுள்ளது.
பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் மேற்கொள்ளப்படும் குறித்த அபிவிருத்தி செயற்றிட்டம் பொது மக்கள் நல்ல தரமான உரப் பாவனையற்ற உணவுப் பொருள்களைப் பெறும் வகையிலும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தும் வகையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இம்முறை ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் நூறு குடும்பங்கள் தெரிவு செய்யப் பட்டு விதைகள் பைக் கற்றுகளுடன் பழ மரக் கன்றுகளும் வழங்கப்படவுள்ளன.
நாளை வெள்ளிக்கிழமை சம்பிரதாயபூர்வமாக வடக்கு முகம் நோக்கி பழ மரக்கன்றுகளை நடும் பிரதேச மட்டத்திலான நிகழ்வுகள் பிரதேச செயலர்களால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. கிராம அலுவலர் பிரிவுகளிலும் இந்தச் செயற்பாடுகள் பரவலாக இடம்பெறவுள்ளன.
பலா, தேசி, தோடை, ஈரப் பலா, மா, ஜம்பு, பசன் புரூட் ஆகிய மரக்கன்றுகள் உட்பட மற்றும் பல வகையான மரக் கன்றுகளும் வழங்கப்படவுள்ளன. (வ-86)

## பழங்களுடன் சாராயமும் சாவகச்சேரியில் விற்பனை

### வியாபாரிக்கு தண்டம் விதிப்பு

**அனுமதிப் பத்திர மின்றி அரச சாரயம் விற்பனை செய்த பழ வியாபாரிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.**

சாவகச்சேரி பொதுச் சந்தைக்குள் அனுமதிப் பத்திரமின்றி அரச சாரயம் விற்பனை செய்த பழ வியாபாரிக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
கடந்த 3 ஆம் திகதி மது ஒழிப்புத் தினத்தன்று மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்பட்டிருந்த வேளையில் சந்தையின் பழ வகைகள் விற்பனை நிலையத்தில் அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனை செய்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
இதேவேளை குறித்த பழ வகைகள் விற்பனை நிலையத்தில் அன்றைய தினம் சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் நடத்திய திடீர்ப் பரிசோதனையில் பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 200 இற்கு மேற்பட்ட அரச சாராயப் போத்தல்கள் (1/4 போத்தல்) கைப்பற்றப்பட்டு வியாபாரத்தில் [illegible] நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)



மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலையில் நோயாளர் நலன்புரி சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மரம் நடும் நிகழ்வில் வைத்தியசாலையின் புதிய பொறுப்பதிகாரி மருத்துவர் ஆறுமுகம் காந்தநேசன் தென்னைமரக் கன்றை நடுகின்றார். அருகில் வைத்தியசாலை முன்னைய பொறுப்பதிகாரி மருத்துவர் நடராசா, சுகாதார பரிசோதகர், நலன்புரி சங்கத்தினர், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் நிற்கின்றனர். (வ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பா.ஜ.கவில் இணைந்தார் எஸ்.வி.சேகர்

சென்னை, ஒக்.10

நடிகரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.வி.சேக பா.ஜ. கட்சியில் இணைந்து கொண்டார்.

அ.தி.மு.கவில் சேர்ந்து மயிலாப்பூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் எஸ்வி சேகர். பின்பு காங்கிரஸில் இணைந்து விலகினார். இடையே சில காலம் தி.மு.க. அனுதாபியாகவும் இருந்தார்.

சில மாதங்கள் எந்தக் கட்சியையும் சாராமலும் இயங்கி வந்த எஸ்.வி. சேகர் அண்மையில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடியைச் சந்தித்து அவரிடம் வாழ்த்தும், வாழ்த்துக் கடிதமும் பெற்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மோடியின் ஆசியுடன் பாஜகவில் இணைந்துள்ளார்.

இதுகுறித்து எஸ்வி சேகர் கூறுகையில், "நரேந்திர மோடியின் ஆசியுடன்தான் பா.ஜ.க வில் சேருகிறேன்.

கட்சியின் தமிழ் மாநில தலைவர் பொன் ராதாகிருஷ்ணன் எனக்கு உறுப்பினர் அட்டை வழங்கினார்.

எனக்கு எந்த எதிர்ப்பார்ப்புமில்லை. இருக்கும் இடத்துக்கு என்னால் என்றுமே நன்மை தான் உண்டாகுமே தவிர கெட்ட பெயரை உண்டாக்க மாட்டேன். இதுவரை நான் இருந்த கட்சிகளில் எனக்கு யார் மீதும் வருத்தமில்லை" எனவும் கூறியுள்ளார். (ற)



டெல்லியில் 150 ஆண்டுகள் பழமையான மூன்று அடுக்கு கட்டிடம் இடிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர். வடக்கு டெல்லியில் அமைந்துள்ள பாரா இந்து பகுதியில் நேற்றுக்காலை இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. இடிபாடுகளில் சிக்கிய 2 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பலனின்றி அவர்கள் உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## தமிழகக் கடற்கரை பகுதிகளில் புயல் அபாயம்

அந்தமான் தீவுக்கு வடக்கே வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுநிலையால் தமிழகத்தின் கரையோரப் பகுதிகளில் புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தமான் தீவுக்கு வடக்கே ஏற்பட்ட இந்தத் தாழ்வமுக்கம் காற்றின் போக்கு சாதகமாக இருப்பதால் மேலும் வலுப்பெற்று புயலாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தற்போது அந்த புயல் விசாகப்பட்டினத்தில் இருந்து கிழக்கு மற்றும் தென் கிழக்கே 1500 கிமீ தொலைவில் மையம் கொண்டுள்ளது.

கடந்த முறை உருவான மகாசன் புயலுக்கு இலங்கை பெயர் சூட்டியிருந்தது. இப்போது உருவாகியுள்ள புயலுக்கு தாய்லாந்து 'பைலின்' என்று பெயர் சூட்டியுள்ளது. 32 பெயர்களில் இதுதான் கடைசிப் பெயர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## குர்ஷித்தை பதவி விலக்குங்கள்

### இந்தியப் பிரதமரை வலியுறுத்துகின்றார் திருமா

சென்னை, ஒக்.10

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பேன் என்று கூறியுள்ள சல்மான் குர்ஷி த்தை அமைச்சர் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:



பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன. இந்த நிலையில் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளப் போகின்றேன் என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார்.

ஒட்டுமொத்த தமிழகத்தின் உணர்வுகளுக்கு மாறாகவும், தனது அதிகார வரம்பை மீறியும் கருத்துத் தெரிவித்துள்ள சல்மான் குர்ஷித்தை வெளியுறவுத் துறை அமைச்சர் பொறுப்பிலிருந்து பிரதமர் மன்மோகன் சிங் நீக்க வேண் டும்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட சல்மான் குர்ஷித் அங்கே சிறைகளில் வாடிக் கொண்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார் என்றும். இலங்கை அரசால் கைப் பற்றப்பட்டிருக்கும் தமிழக மீனவர்களின் படகுகளை மீட்டுத் தருவார் என்றும் எதிர்பார்ப்பு நிலவியது.

ஆனால் சல்மான் குர்ஷித் இலங்கையோடு கூட்டு சேர்ந்து தொடங்கவுள்ள அனல் மின் நிலையத்துக்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கே அங்கு போயிருக்கிறார் என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் பிரதமரோ சல்மான் குர்ஷித்தோ பங் கேற்றால் தமிழக மக்கள் கொதித்து எழுவர்" என்று கூறப்பட்டுள்ளது. (ற)

**நல்லூர் பிரதேச சபை கோக்குவில் உப அலுவலகம்**

**ஆதனப் பெயர் மாற்றம்**

**வட்டாரம் - 01, காங்கேசன்துறை வீதி,**

**ஆதன இலக்கங்கள்: 124, 124A , 126.**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் உபஅலுவலக வட்டாரம் - 01, காங்கேசன்துறை வீதி, 124, 124A , 126 என்ற இலக்கங்களைக் கொண்ட ஆதனம் S. இராசு பெண் S.R. நாகரத்தினம் எனும் பெயரில் எமது ஆதன பதிவேட்டில் காணப் படுகின்றது.

இவ் ஆதனத்தை நடராசா அருணாசலம் என்பவர் நொத்தாரிசு இ.த.விக்னராசா முகதாவில் 1014 ஆம் இலக்க 25.08.1992 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனது பெயருக்கு வெளிப்படுத்தல் செய்து, நொத்தாரிசு இ.த.விக்னராசா முகதாவில் 1015 ஆம் இலக்க 25.08.1992 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் அருணாசலம் பெண் பத்மநிதிக்கு நன்கொடை வழங்கியுள்ளார். மீண்டும் நடராசா அருணாசலமும் பெண் பத்மநிதியும் ஆகி யோரால் நொத்தாரிசு செ. ந.விஸ்வலிங்கம் முகதா வில் 1664 ஆம் இலக்க 11.06.1999 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் அருணாசலம் கிருபாகரனுக்கு விற்றுள்ளா னர்.

தற்போது இவ்வானத்தை அருணாசலம் கிருபாகரன் என்பவர் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து, குறித்த ஆதனமானது அருணாசலம் கிருபாகரன் எனும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள் கின்றோம்.

ப.வசந்தகுமார்,
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை. (சி/12689) (45.6.3)

**வாகனம் விற்பனைக்கு**

PR-xxxx தொடரிலக்கமுடைய நல்லநிலையிலுள்ள Mahendra Pick up விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 217 3187 (32577) (3.4.6)

**வயல் காணி விற்பனைக்கு**

நாவற்குழி தச்சன் தோப்புநெணியன் வயல் பரப்பில் வைரவர் கோயிலுக்கு முன்பாக நல்லூர் கந்தசுவாமி கோயில் வயலுக்கு அருகில் வயல் காணி 30பரப்பு விற்பனைக்கு உண்டு.

(32575) (3.4.6)

தொடர்பு: 078 523 5899

**தேவை**

*கணினி தட்டெழுத்தாளர் (பெண்) (தமிழ், ஆங்கிலம்)முன் அனுபவம் விரும்பத்தக்கது.

*நிழற்படப் பிரதியாக்க உதவியாளர் (போட்டோப்பிரதி-ஆண்/பெண்) ஆங்கில அறிவு, கணினி அறிவு விரும்பத்தக்கது.

(கொமஷல் வங்கி அருகில்) (32576) (3.4.6)

**JOHN KEELLS FOUNDATION**

மற்றும்

**GATEWAY LANGUAGE CENTRE**

GATEWAY Language Centre இணைந்து வழங்கும் ஆங்கில புலமைப்பரிசில் JOHN KEELLS FOUNDATION

**அனுமதி - 2013/14**

*John Keells* நிறுவனத்தின் சமூக பொறுப்பாண்மை செயற்றிட்டத்தின் கீழ் *Gateway* மொழிகள் மற்றும் தகவல் தொடர்பாடல் கற்கைகள் நிலையத்தினால் பாடசாலை மாணவர்களுக்காக வருடாந்தம் வழங்கப் படும் ஆங்கில மொழிக் கல்விக்கான புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தெரிவுப் பரீட்சைத் திகதி மற்றும் தகவல்களுக்கு அயலில் உள்ள 'கேற்வே'யுடன் தொடர்பு கொள்ளுங்கள்:

**GATEWAY LANGUAGE CENTRE**

| | |
|---|---|
| #347, Kasthuriyar Road, Jaffna. 021 567 5555 | #1, New Market Building, Chavakacheri. 021 227 0323 |
| #55, Point Pedro Road, Nelliady. 021 226 2395 | Karadippokku Junction, A9 Road, Kilinochchi. 021 228 0065 |

(C/12690) x 10.6)

**மாபெரும் ஏல விற்பனை**

உங்களுக்கு ஏற்ற விலையில் வாகனத்தை கொள்வனவு செய்யுங்கள்

ஒக்ரோபர் 17ஆம் திகதி

LOLC வாகன நிலையத்தில்

இல. 62/40 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



LOLC மைக்ரோ கிறெடிட்

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்

0776 506 839 - மயூரன்

0255 880 887 - 0115 289 435 - ப்ளோரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீண்டுகின்றது அமெரிக்கா

## போர் ஒத்திகைகள் மோதலையே உருவாக்கும்: சீறுகின்றது வடகொரியா



பியாங்யாங், ஒக்.10
தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணைந்து அமெரிக்கா நடத்தவிருக்கும் கடற்போர் ஒத்திகை வடகொரியாவைச் சீண்டும் ஒரு நடவடிக்கையாகும். அதன் காரணமாக போர் மூண்டால் அதற்கு அமெரிக்காவே பொறுப்பேற்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது வடகொரியா.
கடந்தவாரம் அமெரிக்காவும் தென் கொரியாவும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டிருந்தன. அதனடிப்படையில் கொரிய தீபகற்பத்துக்கு அருகில் தென் கொரியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் போர்க் கப்பல்களுடன் இணைந்து அமெரிக்காவின் அணுசக்தி விமானந் தாங்கிக் கப்பலும் கடற்போர் ஒத்திகைகளில் ஈடுபடவுள்ளன.
அதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே வடகொரியா இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுதொடர்பாக வடகொரியா விடுத்துள்ள அறிக்கையில்,
"இந்த நடவடிக்கைகள் கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளன. எதிர்பாராத விதமாக ஏற்படும் எந்தவொரு பேரழிவுக்கும் அமெரிக்காதான் பொறுப்பேற்க வேண்டும். எங்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட முயன்றால் அதற்குத் தக்க பதிலடி கொடுக்க வடகொரிய மக்களும், இராணுவத்தினரும் எப்போதும் தயார் நிலையில் இருக்கிறார்கள் என்பதை அமெரிக்கா புரிந்து கொள்ள வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அனால் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க - தென் கொரிய கூட்டுப் படைகளின் செய்தித் தொடர்பா ளர் "மீட்புப் பணிகளுக்காக ஆண்டுதோறும் வழக்கமாக நடைபெறும் சாதாரண ஒத்திகைதான் இது." என்று தெரிவித்துள்ளார். (ற)

## மலேரியா காய்ச்சலுக்கு வருகிறது தடுப்பு மருந்து

லண்டன். ஒக்.10
30 வருடகால ஆராய்ச்சியின் பின்னர் மலேரியா காய்ச்சலுக்கான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
பிரிட்டனை மையமாக கொண்ட பிரபல மருந்து தயாரிப்பு நிறுவனமான கிளாக்ஸோ ஸ்மித்க்லைன் என்ற நிறுவனமே இந்தத் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்துள்ளது.
சுமார் 7 நாடுகளை சேர்ந்த 15 ஆயிரத்து 500 குழந்தைகளுக்கு இந்த மருந்து வழங்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. அதில் பாதிக்கும் அதிக மானோரின் மலேரியா நோய் கட்டுபட்டது என்று ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டது.
தற்போது இந்த தடுப்பு மருந்துக்கு ஒழுங்குமுறை ஒப்புதல் வழங்கும்படி கோரப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்டவுடன் எதிர்வரும் 2015ஆம் ஆண்டுக்குள் இந்த மருந்தை சந்தைப்படுத்த அந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
மலேரியா காய்ச்சலால் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கின்றனர். இந்த நிலையில் 30 ஆண்டுகால ஆராய்ச்சிக்குப் பிறகு இந்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ற)

## ஐ.நா. நிபுணர் குழுவுக்கு காத்திருக்கிறது ஆபத்து

### பான் கீ-மூன் கூறுகின்றார்



நியூயோர்க், ஒக்.10
சிரியாவில் இரசாயன ஆயுதங்களை அழிக்கும் பணியில் ஈடுபடவுள்ள நிபுணர்கள் பல்வேறு ஆபத்துக்களை எதிர்கொள்ள நேரிடும் என்று கூறியுள்ளார் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன்.
எதிர்வரும் ஓராண்டு சிரியாவில் தங்கியிருக்கப்போகும் நிபுணர்கள் அந்தக் காலப் பகுதியில் அவர்கள் பல்வேறு தரப்பினரிடம் இருந்து எதிர்ப்புகளை எதிர்நோக்க நேரிடும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.
சிரியாவில் ரசாயன ஆயுத சோதனை மற்றும் அதனை அழிக்கும் பணியில் நிபுணர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.
இவர்களது எண்ணிக்கையை 100ஆக அதிகரிக்குமாறு பான் கி மூன் பரிந்துரை செய்துள்ளார். அது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## ஏழையா நீங்கள்?

### "ஆயுசு நூறு"

லண்டன், ஒக்.10
ஏழையாக இருந்தால் போதும் கண்டிப்பாக 90 வயது வரை வாழலாம் என்று கூறுகின்றது அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வொன்று.
பணம், வசதி இருந்தால் போதும் 90 வயது வரை வாழலாம் என்றுதான் இத்தனை ஆண்டு காலமாக நம்பப்பட்டு வந்தது. பணக்கார நாடாக இருந்தால் வாழ்நாளும் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டது.
இந்த நம்பிக்கையைத் தகர்த்துள்ளது இந்த ஆய்வு.
நெதர்லாந்தின் லேடன் பகுதியில் முதுமை, உயிர் வாழ்தல் தொடர்பான ஆராய்ச்சி நிலையம் உள்ளது. அந்த ஆராய்ச்சி நிலையம் கடந்த சில ஆண்டுகளாக தீவிரமாக ஒரு ஆய்வை மேற்கொண்டது. நீண்ட காலம் உயிர் வாழ பணம் காரணமா என்பதே அந்த ஆய்வு.
ஆனால் ஆய்வின் முடிவில் தலைகீழான முடிவே கிடைத்துள்ளது. வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் வயதானவர்களில் 80 வயதை நெருங்க முடியாமல் இறந்தவர்கள் எண்ணிக்கையை கணக்கிட்டால் பணக்காரர்கள் தான் அதிகம். அதே சமயம் ஏழைகள் பலரும் 90 வயதை தாண்டி வாழ்வதும் கண்டுபிடிக்கப்பட்டது.
1950ஆம் ஆண்டில் இருந்து 2008ஆம் ஆண்டு வரை அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, ஜப்பான் உட்பட 19 நாடுகளில் உள்ள இறப்பு 0.45 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இந்தியா போன்ற வளரும் நாடுகளில் இதே வயதினரின் இறப்பு சதவிகிதம் மிகவும் குறைவாக இருந்ததுமட்டுமல்லாமல், 90 வயது வரை வாழ்வோர் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது என்றும் அந்த ஆய்வு கூறுகின்றது. (ற)



## தீயில் சிக்கி 9 பேர் உயிரிழப்பு

### பங்களாதேஷ் ஆடைத் தொழிற்சாலையில் பரிதாபம்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பொதுமக்கள்

டாக்கா, ஒக்.10
பங்களாதேஷில் ஆயத்த ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர்.
பங்களாதேஷ் தலைநகர் டாக்காவின் புறநகர்ப்பகுதியான காசிப்பூரில் அமைந்துள்ள ஆயத்த ஆடைத்தொழிற்சாலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
"ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்துக் குறித்து எமக்கு அறிவிக்கப்பட்ட போது தீ பெருமளவு இடத்துக்குப் பரவியிருந்தது. 4 ஆவது மாடியில் அமைந் துள்ள அந்தத் தொழிற்சாலை யில் இருந்து இதுவரை 9 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள் ளன" என்று தீயணைப்புப் படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இந்த விபத்தை அடுத்து அந்தப் பகுதியில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் பொருள்களை வீதிகளில் குவித்துத் தீவைத்துப் போக்குவரத்தைத் தடை செய்தனர்.
பங்களாதேஷில் ஆடைத் தொழிற்சாலைகளில் விபத்துக்கள் சர்வசாதாரணமாகி வருகின்றன. போதிய பாதுகாப்பு வசதிகள் இன்றி தொழிற்சாலைகள் இயக்கப்படுகின்றமையே விபத்துகளுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. கடந்த ஏப்ரல் மாதம் ஆடைத் தொழிற்சாலை ஒன்று இடிந்து வீழ்ந்ததில் ஆயிரத்து 100 பேர் உயிரிழந்தனர். (ற)

## பாகிஸ்தானில் அமைகிறது பலஸ்தீனத்தின் தூதரகம்


இஸ்லாமாபாத், ஒக்.10
பலஸ்தீனம் தனது தூதரகம் ஒன்றை பாகிஸ்தானில் அமைக்கவுள்ளது. அந்தத் தூதரகத்துக்கான கட்டடத்தை அமைப்பதற்கு பாகிஸ்தான் அரசு நிதியுதவி வழங்கியுள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் வெளியுறவுத்துறைச் செயலர் ஜலீல் அப்பாஸ் கிலானி, "பலஸ்தீன பிரச்சினைகளில் பாகிஸ்தான் எப்போதுமே அந்த நாட்டுக்கு ஆதரவாக இருந்து வருகிறது. பலஸ்தீனத்துக்கு பாகிஸ்தான் வழங்கிவரும் பல்வேறு உதவிகளில் தற்போதைய நிதி உதவியும் ஒன்று" என்று தெரிவித்துள்ளார்.
கடந்த பெப்ரவரி மாதம் பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி ஜர்தாரி பலஸ்தீன தூதரகம் அமைப்பதற்கு நிதி உதவி அளிப்பதாக உறுதியளித்திருந்தார். (ற)

## எகிப்துக்கான இராணுவ உதவிகள் தொடரும் - அமெ.

வொஷிங்டன், ஒக்.10
எகிப்துக்கான இராணுவ உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது அமெரிக்கா.
எகிப்தில் தற்போது அரசியல் தளம்பல் நிலை காணப்படுகின்றது. ஜனாதிபதியாகப் பதவி வகித்த முகமது முர்ச்சிக்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்தி வந்த நிலையில், அவர் திடீரென அந்நாட்டு இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். அதையடுத்து அங்கு இடைக்கால அரசு உருவாக்கப்பட்டுள்ளது.
இடைக்கால அரசு உருவாக்கப்பட்டுள்ளபோதும் அங்கு முர்சியின் ஆதரவாளர்களுக்கும், பாதுகாப்புத் தரப்பினருக்கும் இடையே மோதல்கள் தொடர்கின்றன.
இந்த நிலையில், எகிப்துக்கு அமெரிக்கா வழங்கி வரும் இராணுவ உதவிகள் நிறுத்தப்படவுள்ளன என்று தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் தற்போது அந்தத் தகவல்களை மறுத்துள்ளது அமெரிக்கா.
இது குறித்து விளக்கம் அளித்த அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபையின் செய்தி தொடர்பாளர் கெய்ட்லின் ஹெய்டன், "எகிப்துக்கு இராணுவ உதவி நிறுத்தப்படும் என்ற தகவல் தவறானது. எதிர்காலத்தில் எந்த விதமான இராணுவ உதவிகள் செய்ய வேண்டும் என்று ஆலோசனை மட்டுமே நடந்து வருகிறது. எகிப்துக்கான இராணுவ உதவிகள் தொடரும் என்பதில் [illegible] ஒபாமா தெளிவாக இருக்கின்றார்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## அரசு இயங்க ஒத்துழையுங்கள்

### எதிர்க்கட்சியினரிடம் பராக் ஒபாமா கோரிக்கை



வொஷிங்டன், ஒக்.10
அமெரிக்க அரசு முழுமையாகச் செயற்பட குடியரசுக் கட்சியினர் ஒத்துழைக்க வேண்டும் என்று அந்நாட்டின் ஜனாதிபதி பராக் ஒபாமா கோரிக்கை விடுத்துள்ளார்.
வெள்ளை மாளிகையில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறும் போது,
"அமெரிக்க அரசின் செலவினங்களை ஈடு செய்ய கடன் உச்ச வரம்பை அதிகரிக்க ஒப்புதல் வழங்குங்கள். அதன்பின்னர் நிதிநிலை அறிக்கையின் பிற அம்சங்கள் குறித்துப் பேசலாம். [illegible] முழுமையாகச் செயற்பட குடியரசுக் கட்சியினர் ஒத்துழைக்க வேண்டும். அதேவேளை, குடியரசுக் கட்சியினரின் மிரட்டல்களுக்கு பணிந்து எதிர்கால அமெரிக்க ஜனாதிபதிகளுக்கு நான் மோசமான முன்னுதாரணமாக இருக்கப் போவதில்லை" என்று தெரிவித்துள்ளார்.
எனினும் ஒபாமாவின் கருத்தை குடியரசுக் கட்சி நிராகரித்துள்ளது. தாம் அமெரிக்க அரசை முடக்க முயற்சிக்கவில்லை என்று கூறியுள்ள குடியரசுக் கட்சி, கடந்த 40 ஆண்டுகளில் அரச செலவினங்களை ஈடுகட்ட கடன் உச்ச வரம்பை அதிகரிப்பதற்குப் பதிலாக சிக்கன நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று விளக்கம் அளித்துள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விற்பனைக்கு

வெள்ளை நிற TOYOTA ALLION (2012 மொடல்) கார் 850Km பாவனையுடன் விற்பனைக்கு.
தொ.பே. 077 711 1502

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




முள்ளியவளை
தமிழ் வித்தியாலயத்தில்
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
164 புள்ளிகளைப் பெற்று கொண்ட எமது
செல்வன் கோரேஸ் டிலான்
இறையின்பன் போல்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அத்துடன் இவரிற்குக் கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்தாமார், அண்ணா, தம்பிமார், மச்சான்மார், மச்சாள்மார், தங்கை பிரியா, அம்மா, அப்பா.

(சி/12677)(5.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2013இல் சிறந்த ஆசிரியருக்கான ஜனாதிபதி விருது பெற்ற எம் விஞ்ஞான ஆசிரியை
திருமதி சிவாசினி சாந்தகுமார் அவர்களை
உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.




அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்
ஆனைக்கோட்டை.

## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!
தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

### சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்)
(12666)(5.6.3)

## மெசின் மைண்டர் தேவை

கைதடி அஷ்டலஷ்மி பதிப்பகத்திற்கு KORS மெசின் மைண்டர் தேவை. கலர் வேலை செய்வதில் நன்கு அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். 0779130701 அல்லது நேரில் வரவும். வேலையில் திறமை பார்த்து சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(32490)(4.3.6)

## மலேசியா நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு(Six B work permit)

கீழ்க்காணும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாகக் காத்திருக்கின்றன.

* Advertising Company
* BHL Coral Service
* Net work Cable company
* Proton car company
* Transport Service
* Chocolate Company
* IDS ware house

போன்ற நிறுவனங்களில் உடனடி வேலை வாய்ப்பு, இரண்டு வருடம் (அதிஉயர் சம்பளம்), தங்குமிடம், மருத்துவம் இலவசம், இரண்டே வாரத்தில் பயணம், மலேசியா நாட்டு முகவர்களால் நேரடியாகவே உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. எதிர்வரும் 12.10.2013 சனிக்கிழமை காலை 9.00 - 4.00 மணிவரை இல. 33, ஆசிர்வாதம் ஒழுங்கை, வைத்தியசாலை வீதியில் உள்ள Green Grass Hotel இல் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(32546)(7.6.3) தொடர்புகளுக்கு: 077 294 7954

## பிரதம செயலாளர் செயலகம், வடக்கு மாகாணசபை

பிரதிப் பிரதம செயலாளர்
அலுவலகம் - ஆளணிப்பயிற்சி

### அரச ஊழியர்களுக்கு சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புக்கள்

தேசிய மொழிக் கல்வித் மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் வட மாகாண **முகாமைத்துவ அபிவிருத்தி** பயிற்சி நிறுவனம் **அரச ஊழியர்களுக்கான சிங்கள** மொழி மட்டம் II மற்றும் III பயிற்சி வகுப்புக்களை கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை சகல மாவட்டங்களிலும் ஆரம்பித்துள்ளது. இப் பயிற்சி வார இறுதி நாள்களில் காலை 9 மணி முதல் 12 மணிவரை நடைபெறும். இப்பயிற்சி வகுப்புக்களில் விண்ணப்பித்தோர் பங்குபற்ற முடியும் என நிறுவனம் தெரிவிக்கின்றது. இம்முறை வகுப்புக்களில் பங்கு பற்றுனர்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்தது 30 பேர் என வரையறை செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் மட்டம்III, II என்பனவும் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் மட்டம் III உம் அச்சுவேலி மத்திய கல்லூரியில் மட்டம் II உம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் மட்டம் III உம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் மட்டம் III உம் வவுனியாவில் தமிழ் மகா வித்தியாலயத்தில் மட்டம் III உம் மற்றும் மன்னாரில் ஆங்கில துணைவள நிலையத்தில் மட்டம் III, II என்பனவும் ஆரம்பமாகியுள்ளன.

189, இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
021 222 0840 (Gen)

பொ.வாகீசன்
பணிப்பாளர்,
(சி/12663)(3.6.45)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித்தருகின்றோம்,
அழையுங்கள். 077 908 6737
Computer Repair
GUNAA BEST PC52,Hospital Road, Jaffna.

## வீடு வாடகைக்கு

யாழ். பிறவுண் வீதியில் பல்கலைக்கழகம், தொழில்நுட்பக்கல்லூரி மற்றும் பிரபல பாடசாலைகளுக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்கள் அல்லது சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.)
(32565)(4.3.6)
தொடர்பு: 077 055 5173

## பெண் தையல் தொழிலாளர் தேவை

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் ஆடைத் தொழிற்சாலைக்கு அனுபவம் உள்ள பெண் தையல் தொழிலாளர்கள் தேவை.
மேலதிக விவரங்களுக்கு:-
(சி/12684)(4.6.3) 021 492 5912

## வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் வருடாந்த மஹோற்சவம் - 2013



இன்று ஏழாம் திருவிழா
(வெண்ணெய்த் தாழி சேவை)

மாதவா! கேசவா! மதுசூதனா! நாராயணா! தாமோதரா!
வேதங்கள் துதித்து நிற்கும் வேங்கடேசா! மாயக்கண்ணா!
பாத பங்கஜம் பணிந்தோம் பதமலர் தருவாய் பத்மநாபா!
கீதங்கள் பாடியே வீதிவலம் வந்தோம் கிருஷ்ணா சரணம்!

மாலை 7.30 தெய்வீகப் பேருரை
விடயம் :வெண்ணை அளைந்த பிரான்
பேருரையாற்றுபவர்: விரிவுரையாளர் **லலீசன்.**

விளம்பர அனுசரணை:
(த/10960)(5-6-3)
*Rupa Versatile Trades*
No. 104A, Stanley Road,
Jaffna. T.P.: 021 222 8330

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### பிரதீபா பிரபா விருது 2013




எதிர்கால சவால்களை எதிர்கொள்ளக்கூடிய தேர்ச்சிகள் நிறைந்த எம் பிள்ளைகளை நம் தேசத்தின் நற்பிரஜைகளாக சமூகத்திற்கு பெற்றுத்தந்து பள்ளியை வெற்றிப்பின்பால் இட்டுச்சென்று 05.10.2013 அன்று மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடம் இருந்து "பிரதீபா பிரபா" விருதினை பெற்றுக் கொண்ட கிளி/வன்னேரிக்குளம் ம.வி அதிபரையும், விஞ்ஞான ஆசிரியரையும் உளமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்




சிவபாலன் கமலவேந்தன்
(SLTS 3 - I, Dip in Science, Dip in Psychology)

தும்பு பிரபாகரன்
(SLTS 2 - II, B.Ed Dsm Dip in Psy)

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரி சங்கம்
கிளி / வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம்

(37554)(7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கிளி/வன்னேரிக்குளம் ம.வி
2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தசெல்வன்
**கமலதாசன் துசாந்தன்**




அவர்களையும் போதித்த ஆசிரியர் ப.குமாரகுலசிங்கம் அவர்களையும் சித்திப் புள்ளிகளைப் பெற்ற சு.இசையழகன், த.தமிழினி, செ.யாழினி, க.கயந்தா, ஜெ.துளசி, ந.பிரியங்கா, க.நிலவாணி ஆகியோர்களையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(37555)(4.6.3)
பாடசாலைச்சமூகம்

## உமாதவா கல்வி நிலையத்தின்

இவ்வருட ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை சாதனையாளர்களைப்

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

**இ. தவினுகன்**
190 புள்ளிகள் மாவட்ட நிலை 04.
தென்மராட்சி வலய நிலை 01





**மு.மிதுலன்**
193 புள்ளிகள் தேசிய நிலை (தமிழ்) 02
யாழ்.வலய நிலை 01

| தென்மராட்சியில் | | | | யாழ்நகரில் | |
|---|---|---|---|---|---|
| க. ஐங்கரன் | -187. | சி.கிருஷ்ணபிரியன் | -163 | யோ. சாரணி | -189 |
| க.சாம்பவி | -184 | த.தர்ஷன் | -161 | க.சஜீதா | -182 |
| ம.வீணஜா | -182 | மு.சவின்சன் | -160 | சி.லதுசன் | -181 |
| க.கவிசனா | -178 | ம.நிகேதன் | -159 | ஞா.கஜானன் | -181 |
| அ.பிரணவன் | -177 | வ.டுல்சன் | -157 | சூ. காயத்திரி | -180 |
| சி.துஷந்தி | -176 | கு.அபர்ணா | -157 | சு.சுவஸ்திகன் | -179 |
| மு.அஸ்விஜன் | -175 | இ.கஜனி | -157 | ந.அரவிந்தன் | -177 |
| கோ.யகீர்த்தா | -174 | கோ.சஞ்சிகா | -157 | க.பவனுஷா | -176 |
| கு.திசோதா | -172 | க.லக்மிகன் | -156 | வி.வித்தியாயினி | -173 |
| ஜெ.கஜானந்தன் | -171 | சு.லோசயன் | -156 | கு.தனுசாந் | -170 |
| ஜெ.கஜீவன் | -171 | உ.பிரதீசா | -156 | க.சஜீவன் | -169 |
| க.தபனியா | -169 | ஜெ.அனுராகன் | -156 | சி.ஜனகராஜ் | -168 |
| வி.துஷிராஜ் | -169 | சி.செருகா | -156 | ஜீ.பிரணவன் | -167 |
| த.ஹரிணி | -164 | ஜெ.சிவகேஸன் | -155 | ஜெ.கீர்திகா | -167 |
| த.தக்ஷியா | -164 | வி.ஹம்சிகா | -155 | ஞா.ஹரிஸன் | -160 |
| சி.ஜிருத்திகா | -163 | ஜீ.பவித்திரா | -154 | வ.அஜனா | -157 |
| க.யதுர்னன் | -163 | எ. திஸானா | -154 | | |

கல்வி நிலையத்தின் பெருமையினை சாதனையாக்கிய அனைத்து மாணவர்களையும் மேன்மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

உமாதவா கல்வி நிலையம்,
[illegible] யாழ்ப்பாணம்.
அல்லாரை வீதி, மீசாலை.

க.தவயோகராஜா
ஆசிரியர் - இயக்குநர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் பனங்களி சேமிப்பு

## பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 10
சேர்பொருள் ஊடாகப் பனங்களியைப் பதப்படுத்தி நீண்ட காலத்துக்குச் சேமித்து வைக்கும் திட்டத்தை பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருகிறது என்று அதன் தலைவர் பசுபதிசீவரத்தினம் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பனம்பழக் காலம் ஆரம்பித்துள்ளது.
இதன் ஊடாக பனைசார் உணவுப் பொருள்களைத் தயாரிக்க முடியும். ஆனால் நுகர்வோர் உடனடித் தேவைகளுக்கு மரத்தில் இருந்து நேரடியாக கீழே விழும் பழங்களையே பயன்படுத்தி உணவுப் பொருள்களைத் தயாரிக்கின்றனர். குறிப்பாகப் பனாட்டு, பனங்காய்ப் பணியாரம், மென்பானம் என்பவற்றைத் தயாரிக்கின்றனர்.
எனினும் பனம்பழப் பருவகாலம் முடிவடைந்தவுடன் பனங்களி கிடைப்பது அரிதாகக் காணப்படும். இதற்காகப் பனை அபிவிருத்திச் சபையின் ஆய்வு கூடப்பகுதி பனங்களியுடன் சேர்பொருளையும் சேர்த்து தயாரித்து அதனைப் பதப்படுத்தி போத்தல்களில் அடைத்து நீண்ட காலத்துக்குச் சேமித்து வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
உள்ளூர் நுகர்வோர் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் இதனை அனுப்பி வைக்கக் கூடியதான ஆய்வுகள் வெற்றியளித்துள்ளன.
வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர்களுக்கும் உள்ளூரில் இருந்து பனங்களியை அனுப்பி வைக்க முடியும்.
இதில் முதற் கட்டமாக 12 ஆயிரம் லீற்றர் வரையான பனங்களியைச் சேமித்து வைக்கப் பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது- என்றார். (வ-14-17)



**உள்ளூர் நுகர்வோர் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் இதனை அனுப்பி வைக்கக் கூடியதான ஆய்வுகள் வெற்றியளித்துள்ளன.**

## மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளையில் விசேட சீட்டிழுப்பு

தென்மராட்சி, ஒக். 10
சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளையினர் சிறுவர் சேமிப்பை ஊக்குவிக்க 'இசுறு உதான', 'சிசு உதான' சேமிப்புக் கணக்குகளை ஆரம்பிப்போருக்கு இடையே விசேட சீட்டிழுப்பை நடத்திப் பரிசில்களை வழங்கவுள்ளனர்.
சீட்டிழுப்பு எதிர்வரும் 26 ஆம் திகதி பி.பகல் 3 மணிக்குச் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.
சாவகச்சேரி கிளை மற்றும் கொடிகாமம், கைதடி ஆகிய சேவை நிலையங்களில் 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களின் பெயரில் 'இசுறு உதான', 'சிசு உதான' ஆகிய கணக்குகளில் ஆயிரம் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை வைப்புச்செய்பவர்களுக்கு விசேட சீட்டிழுப்புக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டு வழங்கப்படும். ஒவ்வொரு ஆயிரம் ரூபாவுக்கும் அதிர்ஷ்டலாபச் சீட்டு வழங்கப்படும்.
விசேட சீட்டிழுப்பில் 'இசுறு உதான', 'சிசு உதான' கணக்குகளில் அதிர்ஷ்டசாலிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு சிறுவர் சைக்கிள்களும், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்குப் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார். (வ-9)

## கைத்தொழில் அதிகார சபையினர் கண்காட்சிக்கு அழைப்பு

தென்மராட்சி,ஒக்.10
கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் ஊக்குவிப்பு அமைச்சின் வழிப்படுத்தலில் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையால் தேசிய கண்காட்சி மற்றும் வர்த்தக சந்தை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.
இதற்கான விண்ணப்பங்கள் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்கள், கைத்தொழில்துறையிலுள்ள சுயதொழில் முயற்சியாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.
கண்காட்சியில் மாவட்ட, மாகாண, தேசிய ரீதியில் போட்டிகள் நடத்தப்பட்டு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங் கப்படவுள்ளன. போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை அந்தந்த மாவட்டங்களில் இயங்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையிடமிருந்து பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)



கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழாவின் தேர்ப்பவனியின் போது அன்னை மரியாள் தேரில் வலம் வந்து அருள்புரியும் காட்சி. (வ-135)

சுகாதார ஆய்வுகளுக்காக

## ஆயுள்வேத வைத்தியர் விண்ணப்பிக்க முடியும்

யாழ்ப்பாணம், ஒக். 10
சுகாதாரம் சார் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு வடமாகாணத்தில் உள்ள நிபுணத்துவமுடைய ஆயுள்வேத வைத்தியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
மஹிந்த சிந்தனையின் கீழ் சுதேச மருத்துவம் சார் ஆய்வுகளை ஊக்குவித்து தேசிய சுகாதாரம் சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் திட்டத்தை சுதேச வைத்திய அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ள நிலையில் வடமாகாணத்திலும் அவ்வாறானதொரு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
நீரிழிவு, குருதிச் சுற்றோட்டம் தொடர்பான நோய்கள், சிறுநீரக நோய்கள், டெங்கு, புற்றுநோய் என்பன தொடர்பாக தேசிய ரீதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் சகல மட்டங்களிலும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதுடன் திறமையுடைய பாரம்பரிய வைத்தியர்களையும் உள்வாங்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
இதற்கமைவாக ஆற்றலுடைய பாரம்பரிய வைத்தியர்கள் தமது விவரங்களை ஆயுள்வேத சபைகள் ஊடாக வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கலாம் என்று மாகாண ஆணையாளர் வைத்தியர் திருமதி சி.துரைரட்ணம் தெரிவித்தார். (வ-14)

## மின் இணைப்புத் துண்டிப்பு சிறாரின் நிகழ்வுகள் இருளில்

தென்மராட்சி, ஒக். 10
மண்டபத்துக்கானமின்இணைப்பு துண்டிப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட முன்பள்ளிச் சிறார்களின் கலைநிகழ்வுகளை இருளில் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டதாகப் போட்டியில் கலந்து கொண்ட முன்பள்ளிச் சிறார்களின் பெற்றோர், பார்வையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் மழலைகளுக்கான இசைவு தரிசனம் அமைப்பின் ஆரம்ப நிகழ்வுடன் பிரதேச முன்பள்ளிகளின் கலை நிகழ்வுகளும் ஏற்பாடாகியிருந்தது.
நிகழ்வின் ஏற்பாட்டாளர் போதகர் ஏ.கே.செல்வநாயகத்தின் வேண்டுகோளின் பிரகாரம் நகரசபைத் தலைவரின் பணிப்பின் பேரில் மண்டபம் துப்புரவு செய்யப்பட்டது.
நேற்று முன்தினம் நிகழ்வுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இறுதி நேரத்திலேயே மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட விடயம் ஏற்பாட்டாளர்களுக்கு தெரிய வந்தது.
இந்த விடயம் நகர சபைத் தலைவருக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து நகர சபையின் மின் பிறப்பாக்கி மற்றும் ஒலி பெருக்கி ஆகியவை வழங்கப்பட்ட போதிலும் சிறார்களின் நிகழ்வுகள் நடத்தப்பட்ட மேடைக்கு வெளிச்சம் இல்லாததால் நிகழ்வுகள் பெருமளவில் சோபிக்கவில்லை. (வ-9)

## வீதி மின் விளக்குகள் பொருத்தப்படவில்லை

### இரவில் நடமாட மக்கள் அச்சம்

வலி.தென்மேற்கு.ஒக்.10
பண்டத்தரிப்பு பட்டினத்தில் பிரதான வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தப்படாததால் மக்கள் இரவு நேரங்களில் நடமாட அஞ்சுகின்றனர்.
அச்சுவேலியிலிருந்து பண்டத்தரிப்பு ஊடாக அராலிக்குச் செல்லும் மிக நீளமான வீதி காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ளது.
வீதி அகலிப்புப் பணிகளுக்காக ஏற்கனவே வீதியோரங்களில் நடப்பட்டிருந்த மின் கம்பங்கள் அகற்றப்பட்டு தற்போது மீண்டும் பின் நகர்த்தி நடப்பட்டுள்ளன.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பண்டத்தரிப்புப் பட்டினத்தில் பின்நோக்கி நடப்பட்ட மின்கம்பங்களில் மின் விளக்குகள் பொருத்தப்படாததால் இரவு நேரங்களில் மக்கள் நடமாட அஞ்சுகின்றனர்.
நாட்டில் தற்போது இடம்பெற்று வரும் வழிப்பறி, திருட்டு, கொள்ளை போன்ற குற்றச் சம்பவங்களால் அச்சத்துடன் வாழ்ந்து வரும் மக்கள் வீதிகளில் மின் விளக்குகள் பொருத்தப்படாததால் இரவு நேரங்களில் போக்குவரத்துச் செய்ய பயப்படுகின்றனர்.
இரவு நேரங்களில் பயணம் செய்யும் மக்களின் நன்மை கருதி பிரதான வீதிகளில் மின் விளக்குகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்களை பிரதேச சபை உறுப்பினர் குமணன் கோரியுள்ளார். (வ-115)

## மழையைக் கண்ட மக்கள் நெற் செய்கையில் ஆர்வம்

வலி.வடக்கு, ஒக். 10
யாழ்.மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையை அடுத்து நெற் செய்கைப் பணிகளில் விவசாயிகள் அதிக அக்கறையுடன் செயற்படத் தொடங்கியுள்ளனர். கடந்த மாதம் பெய்த மழையைத் தொடர்ந்து ஒரு பகுதியினர் விதைப் பணியை மேற்கொண்ட போதிலும் மற்றும் ஒரு பகுதியினர் மழையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.
நேற்று முன்தினம் இரவு பெய்த மழையைத் தொடர்ந்து நெற் செய்கையில் மழைக்காகக் காத்திருந்தவர்களும் கூட தமது வயல்களை உழுது பண்படுத்தும் பணியை ஆரம்பித்துள்ளனர்.
எனினும் நாட்டில் பருவ மழை தப்பியுள்ள நிலையில் விவசாயிகள் தமது நெற் செய்கையையிட்டு பலத்த சந்தேகத்தின் மத்தியிலேயே பயிரிடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86)



## விளுபளை கண்ணகை அம்பாள் வீதியை புனரமைப்பதற்கு ரூ.7 லட்சம் ஒதுக்கீடு

தென்மராட்சி, ஒக். 10
தென்மராட்சி கிழக்கு எழுதுமட்டுவாழ் தெற்கில் மக்கள் மீள் குடியமர்வின் பின்னர் அந்தப் பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற விளுபளை கண்ணகை அம்பாள் ஆலயத்துக்குச் செல்லும் வீதி சாவகச்சேரி பிரதேச சபையினால் புனரமைக்கப்படவுள்ளது.
எழுதுமட்டுவாழ்-நாகர்கோவில் வீதியிலிருந்து விளுபளை அம்மன் கோயிலுக்குச் செல்லும் ஒல்லாந்தர் (டச்சு) வீதியைச் சபையின் நிதியிலிருந்து தார் வீதியாக புனரமைப்பு செய்ய 7 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
படையினரின் நீண்டகாலப் பாவனையில் அதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வேளையில் கனரக வாகனங்களின் பாவனையினால் அனைத்து வீதிகளும் சேதமடைந்து காணப்படுகின்றன. இவற்றைத் தார் வீதிகளாக மாற்றித் தருமாறு பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை விடுத்த வேண்டுகோளை அடுத்து முதல் கட்டமாகப் பிரிவில் உள்ள விளுபளை அம்மன் கோயில் வீதி தார் வீதியாகப் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
பலத்த சேதங்களுக்கு இலக்கான விளுபளை கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு மீளக்குடியமர்ந்த மக்களால் அண்மையில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-9)

> " *படையினரின் நீண்டகாலப் பாவனையில் அதி உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்ட வேளையில் கனரக வாகனங் களின் பாவனையால் அனைத்து வீதிகளும் சேதமடைந்து காணப்படுகின்றன.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# டெங்குப் பரிசோதனை மட்டக்களப்பில் ஆரம்பம்



மட்டக்களப்பில் டெங்கு விழிப்புணர்வு வேலைத்திட்டம் மற்றும் டெங்குப் பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலைகள், பொது நிறுவனங்கள், வங்கிகள், வைத்திய சாலைகள் என்பவற்றில் டெங்குப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் டெங்கு நோய் குறித்து விழிப்புணர்வு பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த டெங்குப் பரிசோதனை காத்தான்குடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாரைக் கொண்ட நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டன.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி யு.எல்.நசிர்தீனின் மேற்பார்வையின் கீழ் டெங்கு விழிப்புணர்வு வேலைத் திட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. (ச)

# காணி அபகரிப்பை தடுக்க வேண்டும்

## கிழக்கு மாகாண முதல்வரிடம் கோரிக்கை

திருகோணமலை, ஒக்.10

திருகோணமலை,புல்மோட்டை கிராமத்தில் இராணுவ முகாமுக்கு முன்னால் உள்ள பொது மக்களுக்குச் சொந்தமான 60 ஏக்கர் காணியை இராணுவம் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதனைத் தடுத்து நிறுத்த முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு திருகோணமலை நகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சி.நந்தகுமார் கோரியுள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மக்களின் காணிகள் பறிபோவதைத் தடுப்பதற்குக் கிழக்கு மாகாண முதலமைச்சரால் நடவடிக்கை எடுக்க முடியும்.

புல்மோட்டை பிரதேச மக்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்த காணிகளும் அனுமதிப் பத்திரம் பெற்ற காணிகளும் தற்போது இயந்திரங்கள் கொண்டு துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு மக்களின் காணிகள் பறிபோவதைத் தடுப்பதற்கு கிழக்கு மாகாண முதலமைச்சரால் நடவடிக்கை எடுக்க முடியும்.

எனினும் காணி அபகரிப்பு விடயத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் தலையிட்டு தடுத்து நிறுத்தாவிட்டால், அவர் மாகாணத்தின் பெயரளவு நிர்வாகியாக மட்டுமே செயற்படுகின்றார் என்ற எண்ணம் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிடும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)



# வீசிய சுழல் காற்றால் மக்கள் இடம்பெயர்வு

அம்பாறை.ஒக்.10

அம்பாறை,பொத்துவில் பகுதியில் வீசிய சுழல் காற்றால் பாதிக்கப்பட்ட 200 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

பொத்துவில் பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணியிலிருந்து சுழல் காற்று வீசியுள்ளது என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

சுழல் காற்றினால் 50 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன என்று பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மக்கள் பொத்துவில் சிங்கள வித்தியாலயம், பொத்துவில் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தின் பாதுகாப்புப் பணிகளுக்காகப் பொலிஸ் குழுக்கள் சம்பவ இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)



செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 13 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் 5 மாவட்டங்களிலுமுள்ள செவிப்புலனற்றோருக்கான விளையாட்டு விழாவில் சைக்கிள் ஓட்டப்போட்டி சனிக்கிழமை மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது.....

# அதிர்வு குறித்து கண்காணிப்பு

அம்பாறை, பாணமவிலிருந்து சுமார் 400 கிலோ மீற்றர் ஆழ் கடலில் ஏற்பட்ட நில அதிர்வு குறித்து தொடர்ந்து நில அதிர்வு மையம் கண்காணித்து வருகிறது என்று புவியியல் மையத்தின் பிரதிப் பணிப்பாளர் பேர்னார்ட் பிரேம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்கில் தேவேந்திர முனையிலிருந்து 500 கிலோ மீற்றர் ஆழ் கடல் பகுதி, நில அதிர்வுக்கான செயற்பாட்டுப் பகுதியாக கருதப்படுகிறது.

இந்தப் பகுதியில் ஏற்படும் அதிர்வுகளின் அலைத் தாக்கமே பாணம கடல் பகுதியில் ஏற்பட்ட நில அதிர்வு.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இதே போன்று பாணம பகுதிக் கடலில் நில அதிர்வு உணரப்பட்டது. இந்த நில அதிர்வுகளையடுத்து இன்று வரை நீண்ட காலக் கண்காணிப்புப் பணிகளைப் புவியியல் மையம் நடத்தி வந்தது.

இந்த நில அதிர்வுகளால் பாதிப்புகள் எதுவும் ஏற்படாது. பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இதே போன்று மற்றுமொரு அதிர்வு உடனடியாக ஏற்படுமா என்பதைக் கூறமுடியாது.- என்றார்.

இதேவேளை, இலங்கைக்குரிய பூமிப் பிரதேசத்தில் தெற்குக் கடலில் ஏற்பட்டுவரும் வெடிப்பின் பிரதிபலிப்பாகவே பாணமவில் இடம்பெற்றுள்ள நில நடுக்கத்தைப் கணிக்க முடிகின்றது என்று புவியியல் துறைப் பேராசிரியர் சி. பி. திசாநாயக்க தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கிழக்கில் கடும் வறட்சி:

# குடிதண்ணீருக்காக அலையும் மக்கள்



மட்டக்களப்பு. ஒக்.10

கிழக்கில் தொடர்ந்து கடும் வறட்சி நிலவுவதால் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

ஏற்கெனவே பெய்யத் தொடங்கியிருக்க வேண்டிய பருவ மழை நீண்ட நாள்களாக இல்லாதிருப்பதே இந்த வறட்சிக்குக் காரணம் என்று மக்கள் கூறுகின்றனர். வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கறுக்காமுனை, பூநகர், பூமரத்தடிச்சேனை, ஈச்சிலம்பற்று, வட்டவன் உட்பட பல பகுதிகளிலுள்ள மக்கள் குடிதண்ணீருக்காக அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பொலிஸ் நிலையக் காணி அலிகார் தேசிய கல்லூரிக்கு

## ஏறாவூர் நகர பிதா தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்.10

மட்டக்களப்பு,ஏறாவூரில் பழைய பொலிஸ் நிலையம் அமைந்திருந்த காணி அலிகார் தேசியக் கல்லூரிக்குக் கிடைக்கவுள்ளது என்று ஏறாவூர் நகர பிதா அலிஸாஹிரா மௌலானா தெரிவித்தார்.



அலிகார் தேசியக் கல்லூரியுடன் ஒட்டியதாக உள்ள இந்தப் பழைய பொலிஸ் நிலையக் காணியை அலிகார் தேசியக் கல்லூரிக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

அலிகார் தேசியக் கல்லூரிக்கு காணி போதாமலிருப்பதாலும் இந்தத் தேசியக் கல்லூரிக்கு அருகில் பொலிஸ் நிலையம் அமைந்திருப்பது அசௌகரியத்தை ஏற்படுத்தும் என்ற நியாயமான காரணங்களின் அடிப்படையில் காணி தேசியக் கல்லூரிக்குப் பெற்றுக் கொடுக்கும் தமது முயற்சி வெற்றியளித்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# 5 ஆம் கட்டப் பணி நாளை ஆரம்பம்

அம்பாறை.ஒக்.10

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வாழ்வின் எழுச்சி தேசிய வேலைத்திட்டத்தின் 5ஆம் கட்டப் பணிகள் நாளை வெள்ளிக்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப் படவுள்ளன.

இதில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான பிரதான நிகழ்வு, வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பேத்தாழைக் கிராமத்தில் மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் மர நடுகை மேற்கொள்ளப்படவுள்ளதுடன், பயனாளிகளுக்கான பயிர் விதைகள், மரக்கன்றுகள் என்பன வழங்கப்படவுள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்தார். (ச)

# கூரையை விட்டு இறங்கினார் கைதி



மட்டக்களப்பு சிறைச்சாலை கூரையின் மேல் ஏறி சனிக்கிழமை காலை முதல் உண்ணாவிரதம் இருந்து வந்த கைதி ஞாயிற்றுக் கிழமை மாலை கூரையை விட்டு கீழே இறங்கியுள்ளார் என்று மட்டக்களப்பு சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த கைதி தம்மைப் பொலநறுவை சிறைச்சாலைக்கு இடமாற்றக் கூடாது என்று கூறியே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இந்தக் கைதிக்கு 10 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் அவரைப் பொலநறுவைச் சிறைச்சாலைக்கு இடமாற்றுமாறு நீதிமன்றம் தெரிவித்ததற்கிணங்க ஞாயிற்றுக்கிழமை காலை அவர் இடமாற்றம் செய்யப்படவிருந்தார்.

இந்த நிலையில் அவர் தம்மை இடமாற்றக்கூடாது என்று கோரி கூரையின் மேல் ஏறி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# போட்டோப் பிரதி இயந்திரம் கூட்டுறவுச் சங்கத்துக்கு

மட்டக்களப்பு. ஒக்.10

திருக்கோவில், தம்பிலுவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு போட்டோப் பிரதி இயந்திரம், கணினி ஆகியவற்றை வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

அதற்கான நிதியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், வரவு -செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து ஒரு லட்சத்து 50 ஆயி ரம் ரூபாவை வழங்கியிருந்தார்.

சங்கத் தலைவர் நாகமணி கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கலையரசன், கூட்டுறவு உதவி ஆணையாளர் பதூர்தீன், திருக்கோவில் பிரதேசசபை உப தவிசாளர் கிருஸ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு போட்டோப்பிரதி இயந்திரத்தையும் கணினியையும் வழங்கி வைத்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் - சிங்கள இனங்கள் தற்போது பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன

## கூறுகின்றார் வாசுதேவ



வடக்கு மாகாண முதலமைச்சராக, சீ.வி. விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையானது நீண்ட காலத்திற்குப் பிறகு தமிழ்த் தேசியமும் சிங்களத் தேசியமும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள சந்தர்ப்பமாகும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சந்தர்ப்பமானது பல காலத்திற்குப் பின்னர் இலங்கையில் நடைபெற்ற மங்களகரமான நிகழ்வாகும்.

நாட்டில் நீண்டகாலமாக நீடித்து வந்த கொள்கை ரீதியான முரண்பாட்டு வரலாற்றை இது ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதுடன் புதிய அத்தியாயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்துடன் எம்மிடையே இருக்கும் பல்வேறு விதமான கொள்கை முரண்பாடுகள் முடிவுக்கு வந்துவிட்டன என்று எண்ணிவிடக்கூடாது.

எனினும் அரச நிர்வாக கட்டமைப் புக்குள் பணியாற்ற அனைவரும் இணங்கியுள்ளனர். இவ்வாறு இணைந்து பணியாற்றிக் கொண்டு எமக்கிருக்கும் அரசியல் ரீதியான கருத்துக்களை வெளியிடவும் அதற்கு அமைவாக செயற்படவும் சுதந்திரம் உள்ளது.

இதனால் நாட்டின் பிரதான நபர் என்ற வகையில் ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் இந்த மாகாண சபையின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியும். இதனை ஒரு ஆரம்ப சந்தர்ப்பமாக கருத வேண்டும் - என்றார்.

# சியாம் கொலை வழக்கின் சாட்சிகள் மீது அச்சுறுத்தல்

## குற்றப்புலனாய்வு பிரிவு குற்றச்சாட்டு



கோடீஸ்வர வர்த்தகரான மொஹமட் சியாம் கொலை வழக்கின் சந்தேக நபரான வாஸ் குணவர்த்தன, அவரது மகன் ஆகியோரின் உறவினர்கள் அல்லது நண்பர்கள் என்று கூறப்படுபவர்களினால் சாட்சிகள் அச்சுறுத்தப்படுவதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் (சி.ஐ.டி) நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே குற்றப்புலனாய்வு பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகரான ஷாணி அபயசேகர மேற்கூறிய விவகாரத்தை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

அத்துடன் மொஹமட் ஷியாமின் பிரேத பரிசோதனை அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்த அவர் சந்தேக நபர்களைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து சந்தேக நபர்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதுமட்டுமன்றி சாட்சியங்கள் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகக் கூறப்படும் சந்தேகநபர்களையும் அவர்களது உறவினர்களையும் நீதிவான் எச்சரித்துள்ளார்.

# தொழில் பெற்றுத் தருவதாக ஏமாற்றியவர் கைது

மலேசியாவில் தொழில் வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி நபர் ஒருவரிடம் இரண்டு இலட்சம் ரூபா பண மோசடியில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிரிபுர, தெஹியத்த கண்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதான ஒருவரே கடந்த 7ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் திக்வெல்ல பொலிஸாரால் மாத்தறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேக நபரை இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் நீதிமன்று விடுதலை செய்துள்ளது.

சந்தேகநபர் எதிர்வரும் 11ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் ஆஜராகவேண்டும் என நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளில் திக்வெல்ல பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.



இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் இங்கு வந்த அவரது பாரியார் லூய்ஸி குர்ஷித்தும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவும் நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் சந்தித்தபோது

# மாத்தறை ஐ.தே.க குழு மோதல் இதுவரை 30 பேர் கைது



அண்மையில் மாத்தறை நகரில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி குழு மோதலுடன் தொடர்புடைய 30 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

மேலும் மோதலுடன் தொடர்புடையவர்கள் அடையாளம் காணப்படும் அனைவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

மாத்தறை மோதல் குறித்த விசாரணை தொடர்பில் பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்ககோன், தென் மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் பி.டி. விக்ரமரத்னவிற்கு ஆலோசனை வழங்கி வருகிறார்.

அதுமட்டுமல்லாது எழுத்து மூலமாக மூன்று ஆலோசனைக் கடிதங்களையும் பொலிஸ் மா அதிபர் அனுப்பி வைத்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் அழுத்தத்தினால் மாத்திரமே 13ஆவது திருத்தச் சட்டத்தை பாதுகாக்கலாம்

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை பாதுகாக்கவும் அதற்கு அப்பால் சென்று, அரசியல் அதிகாரங்களைப் பெறவும் இந்தியாவின் அழுத்தங்கள் அவசியமானவை என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்துப் பேசியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக இந்த அதிகாரங்கள் அவசியமானவை.

முஸ்லிம் மக்களின் அபிவிருத்திக்கு இந்தியாவின் உதவிகள் தேவைப்படுகின்றன என்றும் ஹக்கீம் இந்திய அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையை கொண்டு வந்து நிறைவேற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

# சவூதியில் சித்திரவதைக்குள்ளான தமிழ்ப் பெண் வைத்தியசாலையில்

சவூதி அரேபியாவிற்கு வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்று அங்கு பல இன்னல்களுக்கு முகங்கொடுத்த இலங்கைப் பணிப்பெண் ஒருவர் நாடு திரும்பி பலாங்கொடை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பலாங்கொட வேவல்வத்த பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயான பாப்பாத்தி என்ற பெண் 2012ஆம் ஆண்டு சவூதி அரேபியாவிற்குச் சென்றுள்ளார்.

தான் தொழிலுக்குச் சென்ற நாள் தொடக்கம் வீட்டு உரிமையாளரான பெண் தன்னை சித்திரவதை செய்ததாகப் பாப்பாத்தி தெரிவித்துள்ளார்.

இரண்டு வருடங்கள் துன்புறுத்தப்பட்ட தான் ஒருநாள் மயக்கமடைந்ததாகவும் அப்போது வீட்டு உரிமையாளரான பெண் தன்னை வீதியில் போட்டுச் சென்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்பின் சவூதியில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் தன்னை நாட்டுக்குத் திருப்பி அனுப்பியதாகவும் அவர் கூறியுள்ளார்.

# இலங்கையில் பகுதியாகவே இணைய சுதந்திரம்

## 'ப்ரீடம் ஹவுஸ்' அமைப்பு தெரிவிப்பு

இலங்கையில் பகுதியளவில் தான் இணைய சுதந்திரம் காணப்படுவதாக அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் ப்ரீடம் ஹவுஸ் அமைப்பு அறிவித்துள்ளது. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் பகுதியளவில் இணைய சுதந்திரம் காணப்படுவதாக அது தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான், சவூதி அரேபியா, ஈரான், மியன்மார் உள்ளிட்ட 14 நாடுகளில் முற்றுமுழுதாகவே இணைய சுதந்திரம் மறுக்கப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஐஸ்லாந்தில் பூரண இணைய சுதந்திரம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட 17 நாடுகளில் பூரண இணைய சுதந்திரம் காணப்படுவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புத்தளம் வாக்குச்சீட்டு வழக்கு முடிவடைந்தது



புத்தளத்தில் அண்மையில் மீட்கப்பட்ட வாக்குச்சீட்டுகள் தொடர்பிலான வழக்கு முடிவடைந்துள்ளது என்று நீதிவான் அறிவித்துள்ளார்.

வடமேல் மாகாண சபைக்காக அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் கணக்கெடுக்கப்பட்டதன் பின்னர் சென். அன்றூ வித்தியாலயத்தில் இரண்டு இடங்களிலிருந்து வாக்குச் சீட்டுகள் மீட்கப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணை முடிவடைந்துள்ளது என்று புத்தளம் பிரதான நீதிவான் ராங்க திஸாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பில் எவ்விதமான முறைகேடுகளும் இடம்பெறவில்லை என்று குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்திற்கு நேற்றுப் புதன்கிழமை கொண்டு வந்தனர். இதனையடுத்தே நீதிவான் மேற்கண்டவாறு அறிவித்தார்.

இந்நிலையில், மீட்கப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வைக்கப்பட்டுள்ள வாக்குச் சீட்டுக்களை புத்தளம் உதவி தேர்தல் அதிகாரியிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

புத்தளம் சென். அன்றூ வித்தியாலயத்திலிருந்து இரண்டு சந்தர்ப்பங்களில் மீட்கப்பட்ட வாக்குச்சீட்டுகள் அடங்கிய பொதியில் [illegible]386 வாக்குச் சீட்டுகள் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பொலிஸார் மீது பொது மக்கள் சுற்றிவளைத்துத் தாக்குதல்

## ரஜதலாவயில் சம்பவம்

பொலிஸ் சோதனைச் சாவடி பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவர் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ரஜதலாவ பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இரவுநேர பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரின் ஜீப் மீது ரஜதலாவ பகுதி மக்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அதன்பின் அவ்விடத்திற்குச் சென்ற பொலிஸ் சோதனைச்சாவடி பொறுப்பதிகாரி மற்றும் இரு சார்ஜன்கள் மீது பிரதேசவாசிகள் கூரிய ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொண்டனர்.

இதன்போது காயமடைந்த மூவரும் கம்பளை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் மோதலில் காயமடைந்த பிரதேசவாசி ஒருவர் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ் மக்களின் பிரிக்க முடியாத உரிமைகளை ஏப்பம் விடும் போக்கு

எந்தக் கொம்பன் எதனைக் கூறினாலும், எந்த வகை அழுத்தத்தைக் கொடுத்தாலும், இனப் பிரச்சினைக்கான தீர்வு எங்கள் நாட்டின் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலமே கண்டறியப்படும். மஹிந்த அரசின் இந்த நிலைப்பாட்டை, இந்தியா என்ன, வேறு எந்த வல்லரசென்ன, அழுத்தம் கொடுத்தாலும் அரசு அணுவளவேனும் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாது-

கடந்த சுமார் 65 ஆண்டுகளாக, இந்தச் சிறிய தீவில் புரையோடிப் புளித்துப் போய் இருக்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வை, வெளியார் எவரூடாகவும் திணிக்க இடம் தர முடியாது என்றவாறாக-

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் ஊடாக, அந்த நாட்டின் தலைமைத்துவத்துக்கு எமது நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு ஆழமான கிள்ளல் போட்டிருக்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்றால் மட்டுமே இனப் பிரச்சினைக்கு விரைவான தீர்வு காணலாம் என்று, இந்திய அமைச்சரிடம் நேருக்கு நேரே அறுத்து உறுத்துக் கூறியுள்ளார் ஜனாதிபதி.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தி, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வின் ஊடாக விரைவாக, இனப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும் என்று இந்திய அமைச்சர் கூறியதை, ஜனாதிபதி உள்வாங்கிக் கொண்டதாகக் கொள்ள முடியவில்லை.

தமது நிலைப்பாட்டை வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறி, இந்திய அரசின் முகத்தில் அறைந்தது போல், (அடிக்கும் பாங்கில் என வர்ணிப்பதும் பொருத்தம்) அனுப்பி வைத்திருக்கிறார் எனின், அது மிகைப்படுத்தப்பட்டதும் அன்று; தப்பும் அன்று.

இத்தகைய பிரச்சினைக்கு நாடாளுமன்றம் ஊடாகவே தீர்வு காண முடியும். நாடாளுமன்றத் தெரிவுக் குழுவைக் கூட்டி மக்களின் தேவையைக் கருத்திற் கொண்டு, பேச்சுக்கள் மூலம் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். அதுவே சிறந்த வழியாகும்-

ஆகையால், அரசு நியமித்த நாடாளுமன்றக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்; கலந்துரையாடி ஒரு தீர்வுக்கு வர வேண்டும். கூட்டமைப்பு இனியும் பங்கேற்க மறுக்குமானால், நாம் ஒன்றும் செய்ய இயலாது என்று ஜனாதிபதி வெட்டு ஒன்று துண்டு இரண்டாக, இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் அறுத்து உறுத்துக் கூறியிருக்கிறார்.

மொத்தத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்றத் தூதுக் குழுவில் பங்குபற்றாவிடில், தான் நினைக்கும், விரும்பும் தீர்வு ஒன்றை தமிழ் மக்கள் மீது அரசு திணிக்கும் என்று ஜனாதிபதி மறைபொருளாகச் செப்பியுள்ளார்.

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்துக்கும் அதிகமாக வழங்குவதற்கு, இந்திய அரசிடம் முன்னர் சம்மதம் தெரிவித்த ஜனாதிபதி, அதனைக் குப்பைக் கூடைக்குள் கொட்டுவதற்கு முடிவு செய்து விட்டார் என்பதனை, இந்திய வெளிவிவகார அமைச்சர் இப்போது புரிந்து கொண்டிருப்பார்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் மக்கள் தமது வாக்குகள் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கிய அதி அமோக ஆதரவை, அதன் பின்னாலான தாற்பரியத்தை அரசு சற்றும் கணக்கில் கொள்ளவில்லை என்பதனை அனைத்துலக நாடுகளும் இப்போது புரிந்து கொண்டிருக்கும் என்று கருதலாம்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை வகுப்பதற்கு முன்னோட்டமாக, கடந்த 2011 ஆம் ஆண்டில் ஆரம்பித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுமார் ஒரு வருட காலமாக பல தடவைகள் அரச தரப்புடன் பேச்சு நடத்தியதும்-

அது முழு மந்த நிலையை அடைந்து சென்று தொப்பெனக் கீழே விழுந்ததும்-கடந்த வருடத்தின் 2012 ஆம் ஆண்டில் காலத்தைக் கடத்திய அரச சதி எனக் கொள்ளத் தக்கது.

அப்போதும், இனப்பிரச்சினைக்கான உத்தேச தீர்வு எவ்வாறு அமையும் என்ற அடிப்படையைத் தானும் தெரிவிக்காமல், தமிழ் மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளை ஏய்க்காட்டிப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தது அரசு.

இந்த ஏமாற்று நாடகம் இந்திய அரசுக்குத் தெரியாமல் இருந்திருக்க முடியாது; அதற்கான வாய்ப்பில்லை.

அத்தகைய ஒரு அனுகூலமற்ற எண்ணக் கருவை மனதில் வைத்தே, அரசு மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை முன்னிறுத்தி, முழுப் பூசணிக் காயைச் சோற்றில் புதைக்கும் தந்திரத்தை முன்னெடுக்கும் முயற்சி முளைக்கிறது என்று கொள்ளலாம். காலத்தை வாங்கி-கடத்தி-தமிழ் மக்களுக்குரிய பிரிக்க முடியாத உரிமைகளை ஏப்பம் விடும் சதியின் ஓர் அங்கம் இது எனக் கொள்வதும் தப்பன்று.

# கனிந்துவரும் சூழலை பற்றிப்பிடிக்கும் நேரமிது

## சச்சரவுகளுக்கு இது தருணமல்ல

கந்தவனம் கோணேஸ்வரன்

வட மாகாணசபைத் தேர்தல் தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான ஜனநாயகப் போராகவே நிகழ்த்தப்பட்டு, இறுதியில் தமிழர்கள் தமக்கு இசைவான கட்சியை மாகாண சபையின் ஆளுந்தரப்பாக அதீதப் பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

### அரசுக்கு நெருக்கடி அதிகரிப்பு

இந்தத் தேர்தல் முடிவின்மூலம் அரசுக்கு நெருக்குவாரங்கள் அதிகரித்துள்ளன. தமிழர்களின் ஒரே பிரதிநிதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை தோன்றியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசித் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள் என்று உலக நாடுகள் இலங்கை அரசை வலியுறுத்தி வருவது சரியான நிலைப்பாடு என நிறுவப்பட்டிருக்கிறது.

வடமாகாண ஆட்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே கைப்பற்றுவார்கள் என்பது அரசுக்குத் தெரியாததல்ல. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியைக் குறைப்பதும், தமிழர்களைக் கவர்ந்து ஒரு பலமான எதிர்க்கட்சியையாவது நிறுவிவிடவேண்டும் என்ற திட்டம் அரசுக்கு இருந்தது. வடமாகாணத் தமிழர்கள் அத்தகையை ஒரு வாய்ப்பை அரசுக்கு வழங்குவதைத் தவிர்த்துக் கொண்டனர்.

### ஆட்டத்தை அடக்கிய தமிழர்கள்

பலமான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை வடபகுதி மக்கள் அரசுக்குக் கொடுத்திருப்பார்களேயானால் கணிசமான தமிழர்கள் தங்கள் பின்னே நிற்பதால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துகளைக் கேட்க வேண்டியதில்லை என அரசு கூறத் தொடங்கியிருக்கும். தம்மால் தமிழர் சம்பந்தமான தீர்மானங்களை எடுக்க முடியும் என அரசு தம்பட்டம் அடித்திருக்கும்.

தமிழர்களின் வாக்குகள் அரசுக்கு கணிசமாக இருந்திருப்பின் ஜெனிவாவில் இலங்கை மீதான இறுக்கம் தளர்வு கண்டிருக்கும். முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றது மக்கள் மீட்பு நடவடிக்கையே என அரசு சாதித்திருக்கும்

### உணர்த்தப்பட்ட உண்மை

ஆனால் தேர்தல் முடிவுகள்மூலம் இப்படி எதனையும் கூறமுடியாமல் அரசு தனித்து விடப்பட்டிருக்கிறது. தமிழர்கள் வேறு: இலங்கை அரசு வேறு என்ற உண்மை உணர்த்தப்பட்டிருக்கிறது. தங்கள் நிலத்தில் தங்கள் மொழியால் தங்களைத் தாங்களே ஆட்சி செய்வதைத்தான் தமிழர்கள் விரும்புகிறார்களேயொழிய அபி விருத்திகளையோ, அரச இராணுவத்தினரின் பிரசன்னத்தையோ அல்ல என்பது வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

### இனவாதிகளின் விதண்டாவாதம்

வடமாகாணசபை, அரசுக்குப் பணிந்து நடக்கா விட்டால் தமிழர்களுக்கு இன்னொரு பேரவலம் காத்திருக்கிறது என்ற தொனியில் தென்னிலங்கை இனவாதிகள் பேசி வருகிறார்கள்.

அரசு இவற்றைக் கண்டுகொள்வதாக இல்லை. கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் அரச ஆதரவாளர்களுக்கு எப்படியும் பேசலாம் என்பதற்கான அனுமதியை அரசே வழங்கியிருப்பது போல் தெரிகிறது. பொதுபலசேனா, இராவண பலய போன்ற இனவாத அமைப்புகளும் சம்பிக்கரணவக்க, விமல் வீரவன்ஸ போன்ற அமைச்சர்களும் பச்சையாகவே இனவாதத்தைக் கக்கி வருகிறார்கள்.

### ஜெனிவாவில் சிக்கல்

அரசுக்குச் சர்வதேச [illegible] இன்றைய நிலையில் சிறப்பாக இல்லை. ஜெனிவாவில் சிக்கல்கள் அதிகரித்திருக்கின்றன. அமெரிக்காவினதும் இந்தியாவினதும் கருத்துகள் இலங்கை அரசைச் சங்கடத்துக்கு உள்ளாக்கிவருகின்றன. ஐ.நா. செயலர் பான் கீ மூன் கூட ஐ.நா இலங்கை விடயத்தில் தோற்றுப்போய் விட்டது எனக் கூறிய வார்த்தைகள் ஆழமானவை மாத் திரமல்ல ஆபத்தானவையுங்கூட என்பதை அரசு புரிந்துகொள்ளாமல் இருக்க முடியாது. நவநீதம் பிள்ளை இலங்கை அரசுக்கு விதித்த காலக்கெடுவும் ஆரோக்கியத்துக்கான அறிகுறியல்ல.

### நிலைமை பாரதூரம்

இவற்றால் அரசு துவண்டுபோய் இருக்கிறது. உலகமன்றம் சிறியநாடுகளைக் கொடுமைப்படுத்துகின்றது. அவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதியே பேசும் அளவுக்கு நிலைமை பாரதூரமாக இருக்கிறது. மனித உரிமை விவகாரங்களை உலக நாடுகள் இலங்கை அரசுக்கு எதிரான ஆயுதமாகப் பயன்படுத்த முனைவது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல என்று வெளியுறவு அமைச்சர் தனது வெறுப்பை உமிழ்ந்திருக்கிறார்.

ஐ.நாவின் இரண்டு தீர்மானங்களை நாங்கள் ஏற்கனவே உதாசீனம் செய்து விட்டோம், எங்கள் விருப்பப்படிதான் எங்கள் நடவடிக்கைகள் அமையும் என்ற தொனியில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலர் கருணாதிலக அமுனுகம அறிக்கை விட்டிருக்கிறார்.

### ஐ.நா. துன்புறுத்தலா?

எனினும் தமிழர்கள் மீதான துன்புறுத்தல்களுக்கு நியாயம் வழங் குவதற்கான ஆலோசனைகளையே ஐ.நா. முன்வைத்திருக்கிறது. ஏற்கனவே இரண்டு தடவைகள் ஐ.நா. சபையால் வழங்கப்பட்ட ஆலோசனைகளை இலங்கை அக்கறையுடன் நிறைவேற்றவில்லை. மூன்றாவது தடவையாக அடுத்த வருடம் மார்ச் மாதத் துக்குள்ளாக அரசு இவ்விடயத்தில் போதிய முன்னேற்றத்தை காட்டவேண்டும் என்று அது கேட்டிருக்கிறது.

மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் 25 ஆவது மனித உரிமைகள் மாநாடு இலங்கைக்குக் கடுமையானதாக அமையும் என எதிர்பார்க்கலாம். இலங்கை அரசு நிறைவேற்றத் தவறிய பொறுப்புகளை ஐ.நா. சபை கையிலெடுத்துக் கொள்ளவுள்ளது என்ற அறிவிப்பும் கவனிக்கத் தக்கது. இந்த நிலைக்கும் இலங்கை தான் காரணம். ஐ.நாவின் பரிந்துரைகளையும், அரசால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்தினாலே பிரச்சினையின் பெரும்பகுதி தீர்ந்துவிட வாய்ப்புண்டு. ஆனால் அரசு இவ் விடயத்தில் பின்னடித்து வருகிறது.

### அதிகாரம் வழங்க மனமில்லாத அரசு

இந்த நிலையில் வடபகுதியில் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி அரசுக்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசு தனது சிந்தனைகளுக்கு முரணாகச் செயல்படவல்ல மாகாணசபையாக வடமாகாணசபையைப் பார்க்கிறது. காணி, பொலிஸ் அதிகாரங்கள் என மாகாண சபைகளுக்குச் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டிய அதிகாரங்களைத் தன்வசமே வைத்திருந்த அரசு அவற்றை மாகாண சபைகளுக்கு வழங்க மனமில்லாமல் தவிக்கிறது.

வடமாகாண சபை முற்றுமுழுதாகத் தமிழர்களின் மாகாணசபை என்பதாலும் தமது கட்சி ஆட்சியை நிறுவமுடியாத சபை என்பதாலும் அதிகாரங்கள் பற்றியெல்லாம் பேசப்படுகின்றன.

### தமிழர் பலத்தை உடைப்பதில் என்றுமே அரசு தீவிரம்

ஏற்கனவே தமிழர்களின் பலம் உடைக்கப்பட வேண்டும் என்பதற்காக இணைந்திருந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களை நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரிப்பதற்கான வாய்ப்பைப் பெற்று அதனை அரசு பயன்படுத்திக் கொண்டது. இப்போது மாகாணசபைக்குட்பட்ட காணி சம்பந்தமான அதிகாரம் மத்திய அரசிடமே இருக்கிறது என்றவாறான ஒரு நீதிமன்றத் தீர்ப்பையும் பெற்றிருக்கிறது. இதன் மூலம் மாகாணசபைக்குக் காணி அதிகாரம் கிடையவே கிடையாது என்று சாதிக்கவும் முயல்கிறது.

ஆனால் வடமாகாணசபை முதல்வரோ வடமாகாணத்திலிருந்து இராணுவத்தின் வெளியேற்றம், மாகாண சபைகளுக்குரிய காணி, பொலிஸ் அதிகார வழங்கல் என்பவற்றில் உறுதியான கருத்துகளைத் தெரிவித்து வருகிறார். ஜனாதிபதியும் அரசிலுள்ள சிங்கள இனவாத அமைச்சர்கள் சிலரும் இராணுவ வெளியேற்றத்தை நிராகரித்து வருவதோடு காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட மாட்டா எனவும் தெரிவித்து வருகிறார்கள்.

### அதிகாரம் வழங்கத் தயங்காதீர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ நீதிமன்றத் தீர்ப்புக்குத் தமது கோரிக்கை முரண்பட்டதல்ல, மாகாணசபைகள் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்களைத் தருவதற்கு அரசு தயங்கக் கூடாது. அவ்வாறு அரசு தயங்கினால் அவ்வதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள சர்வதேச உதவியைப் பெறவும் தயங்கமாட்டோம் என்ற வகையில் பதிலளித்துள்ளது.

### கிழக்கு தீர்மானமும் அரசின் இக்கட்டும்

இந்நிலையில் இந்த வாரம் கிழக்கு மாகாணசபையும், மாகாணசபைகள் சட்டத்தில் சொல்லப்பட்ட அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு முழுமையாகவே வழங்கப்படவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது அரசை இக்கட்டான நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது. வடக்கின் தைரியமான போராட்டத்துக்குக் கிழக்கும் துணை நிற்கலாம் என்ற அச்சம் அரசை நிலைகுலைய வைத்திருக்கிறது.

### அரசின் வறட்டுப் பிடிவாதமும் இந்தியாவின் அழுத்தமும்

எவ்வாறாயினும், அரசு தனது வறட்டுப் பிடிவாதத்தை தளர்த்த வேண்டும் என்ற செய்தி கிழக்கு மாகாணசபைத் தீர்மானத்தால் அரசுக்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இந் திய அரசும் மாகாணசபைகளின் அதிகாரங்கள் பதின்மூன்றாம் திருத்தச்சட்டத்தில் உள்ளவாறு வழங்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறது. வடமாகாண சபையுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி அதற்கூடாகத் தமிழர்களுக்கு உதவுகின்ற தன் விருப்பத்தையும் அது வெளிப்படுத்தியிருக்கிறது.

### கனவு கண்டால் அரசுக்கு ஆபத்து

ஐ.நாவின் நிலைப்பாடு, அமெரிக்காவின் கருத்து, இந்தியாவின் வலியுறுத்தல், கனடாவின் கரிசனை என்பவை இப்போது நேர் கோட்டில் பயணம் செய்யத் தொடங்கியிருக்கின்றன. இவற்றைச் சமாளித்து விடலாம் என்று இலங்கை அரசு கனவு காணுமானால் அது அரசுக்கு ஆபத்தாகவும் முடியலாம். சரியான நேரத்தில் சரியான முறையில் செயல்பட இலங்கை தவறுமாயின் அது நிச்சயம் பாரிய பின் விளைவுகளுக்கே வழிவகுக்கும். இதனை உணர்ந்து இலங்கைஅரசு தனது பாதையை மாற்றிக்கொள்ள முன்வர வேண்டும். ஐ.நா. சபையால் விதிக்கப்பட்ட காலக் கெடுவை உதாசீனம் செய்துவிடலாம் என்ற வீண்நம்பிக்கையைக் கைவிட்டு இப்போதே இசைவாகச் செயலாற்றத் தொடங்குவதுதான் இலங்கைக்கு உகந்தது. இல்லையேல் மார்ச் மாதத்தின் பின் அரசு கவலைப்படவும் நேரிடலாம்.

எவ்வாறாயினும், கனிந்துவரும் சூழ்நிலையைச் சரிவரப் பற்றிப்பிடிக்கத் தமிழர் தரப்பும் தயாராக வேண்டிய நேரம் இது. கிழக்கு மக்களும் வடக்கு மக்களும் தம்மைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் ஜனநாயக முறைப்படி தெளிவாகவே ஒப்படைத்திருக்கிறார்கள். செயற்பட வேண்டியவர்கள் தலைவர்கள்தாம்.

### பதவி பெரிதல்ல நிரூபிக்கும் சந்தர்ப்பம்

கட்சிகள் ஐந்தாக இருக்கலாம்; மாவட்டங்களும் ஐந்தாக இருக்கலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று வரும்போது நாம் ஒரே சிந்தனை கொண்டவர்கள்; தமிழ் மக்கள் என வரும்போது இலங் கைத் தமிழர்கள் அனைவரதும் ஆன்மாவானவர்கள் என்ற உண்மையை உணர்ந்து வட மாகாணசபை செயற்பட வேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோர் நலன் பேணல்

சி.யமுனானந்தா
மருத்துவர்




உலக உளநல தினம் ஆண்டு தோறும் ஒக்ரோபர் 10 ஆம் நாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் பொதுவான உளநோய்கள் பற்றிய விழிப்பினை இந்தத் தினத்தில் ஏற்படுத்துவது வழமை. உளப்பிளவை நோய், மனச்சோர்வு, சிறுவர் உளநலம், மெய்ப்பாட்டு நோய்கள் என பல தொனிப் பொருள்களில் உளநல தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவை உளநோய் தொடர்பான விழிப்பினையும் சமூக வடுவினை அகற்றும் தன்மையையும் கொண்டனவாக அமைந்திருந்தன. 'மானசஞ்சாரம்', 'மகிழ்வுடன் வாழ்வு' என பல பெயர்களில் உளநல தினம் கொண்டாடப்பட்டு வந்தது.

உளநலதினம் 2013 இன் தொனிப் பொருள் முதியோர் நலன் பேணல் என்பதாகும். உலகளாவிய ரீதியில் முதியோர் தொகை அதிகரித்துள்ளமையும், அவர்கள் தனிமையிலும் நோய் நிலையிலும் வாழ்வதனாலும், அவர்களுக்கான ஆதரவுக் கரங்கள் குறைந்தமையினாலும் முதியோருக்கு சமூகத்தில் முக்கிய இடம் கொடுக்க வேண்டும் என்பதற்காகவுமே உலக சுகாதார நிறுவனம் இந்த வருட உலக உளநல நாளினை முதியோர் உளநலம் தொடர்பான செயற்பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்குமொன்றாகப் பிரகடனப் படுத்தியுள்ளது.

முதுமை என்பது பற்றி ஆராய்வதற்கு எம்மைச் சூழ உள்ள வெளிகள் பற்றிய வியாபகத்தினை நாம் அறிந்திருத்தல் வேண்டும்.

முதலாவதாக;

**பௌதிக வெளி-**

இதனுள்ளேயே நாம் பிறந்து, வளர்ந்து, முதுமை அடைந்து இறக்கின்றோம். பூமி முதல் அகிலம் வரை இதன் வியாபகம் உள்ளது. பொதுவாக வாழ்வு, முதுமை என்பன இந்தப் பௌதிக வெளியின் சார்பில் அமைகின்றன.

இரண்டாவதாக;

**ஆன்மிக வெளி-**

இது அனுபவத்தினால் உய்த்து உணரப்படுவது. பௌதிக வெளியில் முதுமையடைபவர்கள் ஆன்மிக வெளியினை நோக்கக்கூடியவர்களாக அமைவர்.

மூன்றாவது:

**கணித வெளி-**

சாதாரணமாக எண் கணிதம், நீளம், அகலம், உயரம் என்பவற்றுக்கு அப்பால் முப்பரிமாணம், நாற்பரிமாணம் என பல தளங்களில் கணிதவெளி வியாபிக்கும். நுண்புலைமை உடையவர்களே கணித வெளியினை அனுபவிக்க முடியும்.

நான்காவதாக;

**கணினி வெளி-**

நவீன விஞ்ஞானத்தின் உச்சமாக இதனைக் கொள்ளலாம். கணினி வெளியில் முதுமையினை பூச்சிய நிலையிலேயே வைத்திருக்கலாம். ஆனால் முதுமையின் சமநிலையினை பௌதிக வெளியில் பேண ஆன்மிக வெளி மிகவும் இன்றி அமையாதது. முதிர்ச்சி அடைதலை நாம் பௌதிக வெளியில் உயிரியல் முதிர்ச்சி, உளவியல் முதிர்ச்சி, காலத்துடனான முதிர்ச்சி என மூன்றாக வகைப்படுத்தலாம். ஆன்மிக வெளியில் முதிர்ச்சி, பக்குவப்பட்ட ஆத்மா ஆக வெவ்வேறு சக்கர நிலைகளுக்கு மாற்றமடையும்.

உயிரியல் முதிர்ச்சி என்பது உடற்கலங்களில் ஏற்படும் அனுசேப மாற்றங்களால் ஏற்படுவது. இதில் எமது உணவுப் பழக்கவழக்கங்களும் செல்வாக்குச் செலுத்துகின்றன. மரக்கறி உணவுகள், பழங்கள், மஞ்சள், தக்காளி, வெங்காயம் என்பன உயிரியல் முதிர்ச்சியினை பிற்போடக் கூடியவை. பொரித்த உணவுகள், இறைச்சி,மீன் என்பன உயிரியல் முதிர்ச்சிக்கு ஏதுவாக அமையும். உள நெருக்கீடுகளும் உயிரியல் முதிர்ச்சியினை அதிகரிக்கும்.

2009 இல் வன்னியில் சுமார் 300,000 மக்கள் நச்சுப் புகைத் தாக்கத்துக்கு உட்பட்டு இருந்தனர். இதனால் அவர்களின் நுரையீரல்கள் நாள்பட்ட மென் அழற்சிக்கு உட்படலாயின. இதன் விளைவாக அவர்களது உடலில் மேலதிக அபசேப பதார்த்தங்கள் அதிகரித்து முதிர்ச்சியடைதலை விரைவுபடுத்தும் தன்மையினை ஏற்படுத்தி உள்ளன. எனவே வடபகுதியில் இயற்கையான முதிர்ச்சியடைதலுக்கு மேலாக 10 வருட விரைவு முதிர்ச்சியடையும் மக்கள் தொகையும் மேலதிக சுமையாக அமையும். அடுத்து உளவியல் முதிர்ச்சியும் அழிவுகளின் போது மிகவும் அதிகமாகக் காணப்படும். ஆனால் பெரிய அழிவுகள் உள்ள சமூகத்தில், ஆன்மிக சமூகத்தில் ஆன்மிக முதிர்ச்சி குறைவாகவே காணப்படும். எனவே எமது சமூகத்தில் ஆன்மிக முதிர்ச்சியினை ஏற்படுத்த தமிழ் வளம் மிக்க திருவாசகம், திருப்புகழ், திருமந்திரம், பெரியபுராணம் என்பனவற்றை நாம் கற்க வேண்டும். மேலும் முதியவர்கள் தங்கள் தனிமையினைத் தவிர்க்கவும் முதுமையினை அகற்றவும் புறநானூறு, அகநானூறு, திருக்குறள் என்பனவற்றைக் கற்று இளையோருக்கு புகட்டல் வேண்டும். முதுமையினை ஆரோக்கியமாக எதிர்கொள்ள தனிநபர் குடும்பம், அயல், சமூகம் என ஒன்றித்து வாழல் வேண்டும். வெறுமனே நானும் எனது குடும்பமும் என வாழ் வோரிலேயே முதுமை வெறுமையாக அமையும் நம்பிக்கைகள் நம்பிக்கையறும் நம்பிக்கைகளாக மாறும். மாறாக நாம் இளமையில் இருந்தே சமூகப் பணியில் ஈடுபடும் போது முதுமை எப்போதும் இளமை யாகவே அமையும்.

விஞ்ஞானத்தின் திட்டமிடாத செயற்பாடுகள், குறிப்பாக குடும்பக் கட்டுப்பாடு, பெண்கள் உரிமைகள் பற்றிய மேலதிக விழிப்புக்கள் எமது சமூகத்தின் கூட்டுக்குடும்ப வாழ்வை மாற்றி அமைத்து விட்டன. அடுத்து, தொழில்நுட்ப விருத்தி புலம்பெயர் வாழ்வினையும் சாதாரணமாக அமைத்துவிட்டது. இதனால் பிள்ளைகளால் கைவிடப்பட்ட முதியோர்கள் அதிகம். அடுத்து, போர்ச் சூழலில் தமது பிள்ளைகளை இழந்த முதியவர்களும் ஆதரவு அற்ற சூழலில் வாழ்கின்றனர். எனவே முதியோருக்கு உதவும் கரங்களாக நாம் எம் கரங்களை மாற்றுவது மிகப் பெரிய சமூகப் பொறுப்பாகும்.

## முதுமையில் உள நலம்

1. உள நலமே உடல் நலமாம்
உடல் நலமே உள நலமாம்
கவலைகளை ஆற்றுப்படுத்துவோம் - அச்சத்தின்
அவலங்களை அகற்றிடுவோம்.

2. இறப்புக்களைக் கண்டோம் - எம்
உறவுகளைக் காணிலோம் - எம்
உறவுகள் உறக்கத்தை இழந்தமையோ எத்தனை ?
இரவுகள் விடியலைத் தேடியமையோ எத்தனை ?

3.நரையுடன் வாழ்தல் கூடாதென்று - கருங்
கறையடித்து வாழ்ந்தாலும் முதுமையில்
பறைந்திடச் சுற்றம் இன்றில் வாட்டிடுமே
மறையறிந்தும் ஒழுகிடா மக்களெனின்

4. விரிவான மருத்துவச் சேவை உண்டு - இன்று
விரைவான மருத்துவச் சேவை உண்டு - ஆனால்
சுமுக வாழ்வு வாழ இன்றிங்கு வேண்டும்
சமூக ஆற்றுப்படுத்தல் கண்டீர்.

5. மருந்துகளினால் கட்டிடலாம் மனதை
விருந்துகளினால் கட்டிடலாம் உலகை - ஆனால்
இழவுகளுக்கு நிவர்த்தி உண்டோ எப்போதும்
உழவின்றிய வயலானதே எம் தேசம்

மருத்துவர் சி. யமுனானந்தா.

# காலத்துக்குப் பொருத்தமான நற்பணிக்கு முன்னுதாரணம்

காரை எம்.பி. அருளானந்தம்



புங்குடுதீவில் கொடிய வறட்சி நிலவும் காலத்தில் தாகத்துக்குக் குடிதண்ணீர் கிட்டாது. நாளாந்தம் எத்தனையோ கால்நடைகள், குறிப்பாக பசுக்கள் இறக்கும் நிலை ஏற்பட்டதுண்டு. அந்த நிலையை மாற்றி வாய் பேசா ஜீவன்களான கால்நடைகளைக் காப்பாற்ற மனம்கொண்டு தர்மப் பணியை அந்தப் பகுதியைச் சேர்ந்த குருநாதசிவம் என்ற பெரியார் ஏற்படுத்தி உதவியிருக்கிறார்.

புங்குடுதீவு என்றால் சர்வோதயம் தான் நினைவுக்கு வரும். சர்வோதயம் நிறைவேற்றி வரும் பணிகள் அளப்பரியன. சர்வோதய காவலர் திருநாவுக்கரசு போன்ற ஆன்மிகவாதிகள், அறிஞர்கள், கல்விமான்கள், பேராசிரியர்கள், கலைஞர்கள், சமூக சேவையாளர்கள் வாழ்ந்த புனித பூமிதான் புங்கைநகர். அவர்கள் ஊருக்கும் சமூகத்துக்கும் ஆற்றிய, ஆற்றிவரும் புனிதப் பணிகள் எண்ணிலடங்காதவை. அத்தகு புனிதப் பணியொன்றினை சர்வோதயம் ஆற்ற விளைந்தவேளை பொருத்தமான ஒருவரை அதற்குத் தெரிவு செய்தது. அவரே வர்த்தகத் துறை முதல்வர் குருநாதசிவம். மறக்க வொண்ணா மகத்துவப் பணியால் கால்நடை களின் தாகம் தீர்த்த கண்ணிய வான். சர்வோதயத்தின் வேண்டு தலை ஏற்று வளமான திருப்பணி செய்த சிவசீலர்.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்ற முதுமொழியை[illegible] படுத்தி நிற்கும் ஆனினம[illegible] உடலெங்கும் தெய்வங்களை பொருந்திய பூஜை வழிபாட்டுக்குரிய பசுவாகவும், பூஜைக்கு வேண்டிய பூஜைத் திரவியங்களை நல்கி, பாலுணவினையும், இயற்கைப் பசளையையும் வாழ்நாள் முழுவதும் வழங்கும் தேவலோக காமதேனுவின் பூலோக சந்ததியாக விளங்கும் பசுக்களைக் குறிக்கும்.

இருக்கு வேதத்தில் பூலோகத்தில் [illegible] பட்டவை. அவற்றில் புல்லை உண்டு, நீரைப் பருகி சிவ பூசைக்கும், மானிடருக்கும் வேண்டிய பஞ்ச கௌவியங்களையும் (பால், தயிர், நெய், கோசலம், கோமயம்) நல்கி கன்றுகளுடனும், காளைகளுடனும் பொலிவீர்களாக என்று பூலோகத்து பசுக்களுக்குரிய நிலை குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு பசுக்களின் மற்றும் கால்நடைகளுக்கான தாக சாந்தி நிலையங்கள், தண்ணீர்த் தொட்டிகள், நீர் நிலைகள் போன்றன பண்டு தொட்டு அமைக்கப்பட்டு வந்தன. தற்கால கட்டத்தில் அத்தகைய அறப் பணிகள் அற்றுப்போய் விட்டனவோ என ஏங்கும் வேளையில் இறைவன் அந்தப் பணியைப் பேணிக் காக்க சமூக ஜோதி குருநாதசிவத்தை வழங்கியுள்ளார்.

பசு தர்மக் கைங்கரியம் சிறப்புற வேண்டும். அப்பொழுதுதான் மண்ணும் மக்களும் சிறப்பாக வாழ முடியும் என்ற கருத்தை செயலில் காட்ட முன்வந்தவர்தான் புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் கால் நடைகளுக்கான நீரருந்தும் தொட்டியை நிறுவியுள்ள குருநாதசிவம்.

> இருக்கு
> வேதத்தில்
> பூலோகத்தில்
> உள்ள புற்றரை
> களும், நீர் நிலை
> களும் உங்களுக்
> காகவே படைக்கப்
> பட்டவை.

தமது அத்தகு தர்மப் பணி மூலம் அன்று அவனியெங்கும் பசு தர்மப் பணியை பேணிய அரசர்கள், அந்தணர்கள், அறவோர்கள், சமூக ஞானிகள் வரிசையில் இடம் பிடித்திருப்பவர் குருநாதசிவம்.

தீவக பிரதேசமெங்கும் வருடா வருடம் வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் வறட்சி தொடங்கி விடும். அவ்வாறு வறட்சி ஏற்படும் வேளையில் தர்மவான்களது நற்பணிகள் தொடர்ந்து வந்தன.

இன்று அந்தத் திருப்பணியால் ஆயிரக்கணக்கான ஆநிரைகள், கால்நடைகள் பயன் பெறுகின்றன. இந்த சமூக நலன்சார் கைங்கரியத்தை நிறைவேற்றி வருபவர் குருநாதசிவம். இவரது தர்மப் பணி ஆரம்பமாவதற்கு முன்னர் (இடைக் காலத்தில்) கால்நடைகளுக்கான தேவையை நிறைவேற்ற நன்னீர் பவுசர்கள் வரவழைக்கப்பட்டு அந்த தாக சாந்தி நிறைவேற்றும் தொண்டு நடைபெற்றது. ஆகவே அவர் ஆரம்பித்து வைத்துள்ள அறப்பணி நற்பணியாக தீவகமெங்கும் விரிய வேண்டும். இதனால் புங்குடுதீவு மக்கள் மற்றும் தீவகம், யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயிகளும் இலங்கை வாழ் கால்நடை வளர்ப்போரும் இத்தகு நற் பணியால் பெரும் பயனடைவர் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பு

என்னிடம் இருந்த ஒரு இதயத்தையும்
பறித்துக் கொண்டது காதல்!
எனக்காக ஒரு இதயத்தையே
பரிசளித்தது நட்பு!


கஷ்ரங்களை யோசித்தது காதல்!
யோசிக்காமல் கை கொடுத்தது நட்பு!
துயரங்களை நோக்கி இழுத்துச் சென்றது காதல்!
உயரங்களை நோக்கி அழைத்துச் சென்றது நட்பு!

கட்டுப்பாடுகளை தளர்த்த முயற்சித்தது காதல்!
கடமைகளை உணர்த்த முயற்சித்தது நட்பு!
என் இலட்சியங்களைக் கனவாக்கியது காதல்!
என் கனவுகளை இலட்சியமாக்கியது நட்பு!

காயம் தரும் காதல் என்றும் வேண்டாம்!
நலன் பல தரும் நட்பை கொடு இறைவா!

இரத்தினதாசன் கார்த்திகா
அல்வாய்

# அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது பெண்களே



இன்றைய நவீன உலகில் பல பெண்கள் பல்வேறு நாடுகளில் அரசியல் பிரவேசத்தில் ஈடுபடுகின்றார்கள். திறமை, அனுபவம், ஆளுமை வளர்ச்சி, தலைமைத்துவப் பண்பு போன்ற பல காரணிகளினால் இன்றும் சில நாடுகளில் அரசியலில் பெண்கள் ஆதிக்கம் செலுத்துவதைக் காணலாம்.

பல நாடுகளில் பெண்கள் அரசியலில் ஈடுபட்டு ஜனாதிபதியாகவும், பிரதமராகவும், கட்சித் தலைவர்களாகவும் எதிர்க்கட்சித் தலைவர்களாகவும் பதவி வகித்ததையும் தற்போதும் வகிப்பதையும் காணலாம். இதற்குக் காரணம் பெண்களின் அரசியல் பிரவேசத்தில் காணப்பட்ட ஆதிக்கமே ஆகும். இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற ஆசிய நாடுகளில் பெண்கள் நாட்டின் அதி உயர் பதவியாகிய ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் இருந்துள்ளார்கள். கீழைத்தேய நாடுகளில் மட்டுமன்றி வளர்ச்சியடைந்த மேலைத்தேய நாடுகளிலும் பெண்கள் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி இருந்துள்ளனர். ஜனநாயக நாடுகளில் அரசியல் பணிகளில் பெண்கள் ஈடுபடுவதற்கு எதுவித கட்டுப்பாடுகளும் இல்லை.

இந்த ஜனநாயக நாடுகளில் தேர்தலில் போட்டியிட்டு அரசியலில் ஈடுபட பெண்களுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி திறமையும், அனுபவமும் உள்ள பெண்கள் அரசியலில் ஆதிக்கம் செலுத்தினர்.

இந்தப் பெண் அரசியல் தலைவர்கள் நாட்டின் அபிவிருத்தியிலும், வளர்ச்சியிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியமை வரலாற்றில் பதிவாகியுள்ளன. சமூகத்தில் பெண்களுக்குரிய கௌரவம் இன்றும் பல நாடுகளில் உயர்ந்து காணப்படுகின்றது. சமூகத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களையும் மதிக்கின்ற பண்பு காணப்படுகின்றது. இந்தச் சமூக அந்தஸ்தைப் பயன்படுத்திப் பெண்கள் அரசியலில் ஆதிக்கம் செலுத்த முடியும். சமூகத்தில் பெண்கள் தலைமைத்துவப் பண்புகளை ஏற்க முன்வராமை காரணமாகப் பாதிக்கப்படுவது பெண்களே ஆகும். எனவே குடும்பம், சமூகம், நாடு என்ற ரீதியில் பெண்கள் தலைமைத்துவத்தை ஏற்கும் போது அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முடியும்.

அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்கு பெண்களுக்குச் சரியான வழிகாட்டல்களையும், ஒத்துழைப்புக்களையும் வழங்குதல் வேண்டும். ஆகவே பெண்களே சரியான தீர்மானம் எடுத்து பெண் அரசியல் தலைவர்களை உருவாக்க வழிவகை செய்தல் வேண் டும். இந்தச் சந்தர்ப்பத்தை பெண்கள் சரியாகப் பயன்படுத்தும் போது அரசியலில் பெண்களால் ஆதிக்கம் செலுத்த முடியும்.

தற்போது பல நாடுகளில் பெண்களின் அரசியல் ஆதிக்கம் முன்பு இருந்ததைவிட அதிகரித்து உள்ளதைக் காணலாம். இந்தச் சந்தர்ப்பத்தை அரசியலில் ஆதிக்கம் உள்ள பெண்கள் சரியாகப் பயன்படுத்தினால் பெண்களின் எதிர்கால அரசியல், சிறப்புற அமைய வேண்டும். தற்காலத்தில் பல நாடுகளில் பெண்களின் கல்வியறிவு வீதம் அதிகரித்துள்ளதைக் காணலாம். பெண்கள் அதிக அளவில் உயர் கல்வி வாய்ப்புக்களைப் பெற்று பல்கலைக்கழகங்களிலும், உயர் கல்வி நிறுவனங்களிலும் கல்வி கற்று வருகின்றார்கள். இவ் உயர் கல்வித் திறைமையை உரியவாறு அரசியலில் பயன்படுத்தும்போது பெண்கள் தங்களின் உரிமைகளைபெற்றுக்கொள்ளமுடியும். எனவே பெண்களுக்கு அரசியலில் உள்ள ஆதிக்கமே பெண்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு இன்றைய உலகு வழி வகை செய்துள்ளது.

க.கணேசதேவா,
மாதகல் கிழக்கு, மாதகல்.

**சமூகத்தில் பெண்கள் தலைமைத்துவப் பண்புகளை ஏற்க முன் வராமை காரணமாக பாதிக்கப்படுவது பெண்களே ஆகும். எனவே குடும்பம், சமூகம், நாடு என்ற ரீதியில் பெண்கள் தலைமைத்துவத்தை ஏற்கும் போது அரசியல் ஆதிக்கத்தை நிலைநிறுத்த முடியும்.**




# உள்ளங்களின் வலிமை

எத்தனையோ கற்பனைகள்
அடங்காத ஆசைகள்
புரியாத சோகங்கள்
படைப்பின் அர்த்தம் புரியுமா?
எமக்கு
புன்னகை இல்லாத உதடுகள்
நிம்மதி இல்லாத உள்ளங்கள்
வெறுப்பேறிப்போன மனிதம்
சூன்யமாகி விட்ட வாழ்வு

கண்களின் வேதனை
உணவுகளில் கஞ்சத்தனம்
பணத்தில் பற்றாக்குறை
எம் மனதின் வலியாய்

சுகங்களுக்காக ஏங்கி
சுமையாகிப் போனது எம் மனம்
எத்தனை வலி இருப்பினும்
வலிமையுடன் நிமிர்ந்து வாழ்வோம்!

சிந்து சிவதாஸ்,
ஜங்கரன் வீதி, சுதுமலை.



# வார்த்தைகள் கிடையாது

மாலை பொழுதினில்
மனதுக்கினிய நினைவுடன்
உலாவிய என்மனை
நெடு நேரம் அழைத்த
ரோஜா தொடுத்த வினா...?
ஒரு நாள் மட்டும் சிரிக்க
ஏன் படைத்தான் எம்மை
நான் வாடிய போது

துடித்த என் செடியின்
இதய வேதனை
யாருக்கு தெரியும்...?
கல்லறையை அலங்கரிக்கும் பூக்கள்
செடியை விட்டுப்

போகிற போது
பூவினை எண்ணி
அதன் காம்புகள்
அழுத சோகத்தைச் சொல்ல
வார்த்தைகள் கிடையாது.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................

முகவரி :-..........................................

..........................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது

**ஆண்களா? பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் காய்ச்சலால் 60 பேர் மன்னாரில் பாதிப்பு

மன்னார்,ஒக்.10
மன்னார் மாவட்டத்தில் இந்த வருடம் டெங்கு காய்ச்சலால் 60 பேர் பாதிக்கப்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.பரீட் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையிலான காலப் பகுதியிலேயே இந்த 60 பேரும் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.



இதே வேளை கடந்த வருடம் டெங்குக் காய்ச்சலால் 175 பேர் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்ற இடங்களில் சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததன் காரணத்தினாலேயே டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து நோயைப் பரப்புகின்றன.

தற்போது தேசிய டெங்கு ஒழிப்பு வாரம் மன்னார் மாவட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்டு பல்வேறு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் மக்கள் ஒருமித்து நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (எ-12)

# பாடசாலைக் காணியை வழங்குமாறு ஆர்ப்பாட்டம்



அக்கராயன், ஒக்.10
கிளிநொச்சி பூநகரியின் முக்கொம்பன் பாடசாலையின் மாணவர்கள், பெற்றோர்கள் பூநகரி பிரதேச செயலருக்கெதிராக கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பாடசாலைக்கென ஒதுக்கப்பட்ட 10 ஏக்கர் காணியில் 5 ஏக்கர் காணியை மட்டும் வழங்க பூநகரி பிரதேச செயலகம் காணி அளவீடு செய்துள்ளமைக்கு எதிராக மாணவர்கள், பெற்றோர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலைக்கென ஒதுக்கப்பட்ட 10 ஏக்கர் காணியை வழங்குமாறும் பாடசாலைக்குரிய காணியில் நிரந்தர வீடுகள் அமைப்பதைத் தடுக்குமாறும் கோரியே மாணவர்களும் பெற்றோர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களையும், பெற்றோர்களையும் நேரில் சென்று சந்தித்த பூநகரி பிரதேச செயலர் கே.எஸ். வசந்தகுமார் கருத்துத் தெரிவிக்கும் போது 1992 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட ஒதுக்கீட்டின் படி 5 ஏக்கர் காணியை அளவீடு செய்தோம். மிகுதி 4 ½ ஏக்கர் காணியை வலயக்கல்விப் பணிமனையூடாக பாடசாலை சமூகம் கோரும் பட்சத்தில் பாடசாலைக்கு வழங்க முடிவெடுத்துள்ளோம் - என்றார். (எ-18)

# அடம்பனில் சட்டவிரோத மின் பெற்ற 24 பேருக்குப் பிணை

மன்னார்,ஒக்.10
சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட 24 பேரை யும் மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் சரீரப்பிணையில் விடுதலை செய்தார்.

குறித்த 24 பேரையும் ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்னம் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியபோது அவர் அவர்களைச் சரீரப்பிணையில் விடுதலை செய்துள்ளார்.

இதன்போது ஒவ்வொருவரும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட அடம்பன் இத்திக்கண்டல் கிராமத்தில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் 24 பேரையும் கடந்த சனிக்கிழமை விடத்தல்தீவு பொலிஸார் கைது செய்தனர்.

அடம்பன் இத்திக்கண்டல் கிராமத்தில் விடத்தல்தீவு பொலிஸாரும் இலங்கை மின்சார சபை அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்ட சோதனையின்போதே சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டின் பேரில் மேற்படி 24 பேரையும் கைதுசெய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (க-12)

# பண்டாரவன்னியனின் நினைவு தின ஏற்பாடு

மாவீரன் பண்டாரவன்னியனின் 202ஆவது ஆண்டு நினைவு தினத்தை எதிர்வரும் 31ஆம் திகதி வவுனியாவில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வவுனியா நகர சபையும், பண்டாரவன்னியன் நற்பணி மன்றமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

எதிர்வரும் 31ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் காலை 9.30 மணிவரை வவுனியா மாவட்டச் செயலகத்தில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம் பெறும். காலை 9.30 தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை கலை நிகழ்வுகளும் நினைவுப்பேருரைகளும் நகர சபை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. (எ)

## நுளம்பு ஒழிப்பு வாரம்

முல்லைத்தீவு,ஒக்.10
முல்லை மாவட்டத்தில் நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நுளம்புகளை அழிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பாடசாலை, ஆலய வளாகங்கள், வாழ்விடங்கள் போன்ற இடங்களில் துப்புரவுப் பணிகள் இடம்பெறுவதுடன் நுளம்புப் பெருக்கம் அதிகமுள்ள இடங்கள் இனம் காணப்பட்டு அவற்றை அழிக்கும் நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. குப்பை கூளங்களை எரியூட்டும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் சுகாதாரப் பகுதியினரால் உணவு நிலைய உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. (க-500)

## வீதியைப் புனரமைக்குமாறு இரு பகுதி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி முக்கொம்பன் கிராமத்துக்கும் கண்ணகைபுரம் கிராமத்துக்கும் இடையிலான 2 கிலோ மீற்றர் வீதியை புனரமைத்துத் தருமாறு இரு கிராமங்களின் மக்களும் இணைந்து வேண்டு கோள் விடுத்துள்ளனர்.

கரைச்சி, பூநகரி என இரு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்களும் பயன்படுத்தும் இந்த வீதியின் இருபுறமும் பெருங்காடாக உள்ளது. ஆரம்ப சுகாதார நிலையத்துக்குச் செல்லும் பெண்கள் தமது கைக்குழந்தைகளுடன் இந்த வீதியூடாக காட்டின் வழியே நடந்து செல்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மழை காலம் ஆரம்பிக்கவுள்ளதால் இந்த வீதியை புனரமைத்து பயணிகளின் போக்குவரத்தை இலகுபடுத்துமாறு இரு பகுதி மக்களும் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-18)

# முள்ளியவளை தபாலகத்துக்கு நிரந்தர கட்டடம் வேண்டும்

முல்லைத்தீவு,ஒக்.10
முல்லைத்தீவு, முள்ளியவளையிலுள்ள தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடமொன்றை அமைப்பதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 1952ஆம் ஆண்டில் இருந்து உப தபா லகமாக இருந்து, பின்னர் 1980 களில் தபாலகமாக தரமுயர்த்தப்பட்ட குறித்த தபாலகம் அன்றிலிருந்து இன்றுவரைக்கும் வாடகை வீடொன்றிலேயே இயங்கி வருகிறது.

தபாலகம் வாடகை வீட்டில் இயங்குவதனால் முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட சுமார் பத்து கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளுக்காக இங்கு வருகை தரும்போது இடப்பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை-ஒரு தபாலகத்துக்குத் தேவையான போதிய வளங்கள் முள்ளியவளை தபாலகத்தில் உள்ள போதிலும் அதனை உரிய முறையில் செயற்படுத்துவதற்கு உரிய இடவசதி இல்லாமையினால் தபாலக நடவடிக்கைகளை சரியான முறையில் முன்னெடுப்பதற்கு தபாலக நிர்வாகம் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றது.

எனவே, தரம் I தபாலகமாக உள்ள முள்ளியவளை தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடமொன்றை அமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தத் தபாலகத்துக்கு முள்ளியவளை, தண்ணீரூற்று, ஹிஜ்ராபுரம், நீராவிப்பிட்டி, முறிப்பு, குமுழமுனை, கேப்பாப்புலவு, மாமூலை, கனுக்கேணி, உள்ளிட்ட பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற வருகை தருகின் றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## முதியோர் தின விழா

மல்லாவியில் இயங்கி வரும் சமூக ஆதரவு மையத்தின் ஏற்பாட்டில் முதியோர் தின விழா சிறப்புடன் இடம்பெற்றுள்ளது.

துணுக்காய், மல்லாவி, யோகபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட அறுபது முதியோர்களைக் கௌரவிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வு கடந்த முதலாம் திகதி சமூக ஆதரவு மைய வளாகத்தில் உள வளத்துணையாளர் ஜே. டானியல் தலைமையில் இடம்பெற்றது.

சிறப்பு விருந்தினராக மருத்துவர் சிவதாஸ் கலந்து கொண்டார். (க-415)



அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத நிலையில் இயங்கி வரும் புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை. (க-6)

## இரு மாதங்களுக்கு மேலாக

# கிராம சேவகர் அலுவலகத்தில் இருந்த சமையல் உபகரணங்கள் மக்களுக்கு

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பன் கிராம அலுவலர் அலுவலகத்தில் இரு மாதங்களுக்கு மேலாக மக்களுக்கு வழங்கப்படாது வைக்கப்பட்டிருந்த சமையல் உபகரணங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

பூநகரி பிரதேச செயலருக்கு முக்கொம்பன் பிரதேச மக்கள் இந்த விடயம் தொடர்பாக அறிவித்ததையடுத்து பிரதேச செயலர் கிராம சேவகர் அலுவலகத்துக்குச் சென்றுபார்வையிட்டார். இதன்போது மக்களுக்கு வழங்குமாறு கிராம சேவகரிடம் வழங்கப்பட்ட சமையல் உபகரணங்கள் மக்களுக்கு வழங்கப்படாது வைக்கப்பட்டிருந்ததை காணமுடிந்தது. அதையடுத்து சமையல் உபகரணங் களை அப்பகுதி மக்களுக்கு வழங்குமாறு பிரதேச செயலர் கிராம சேவகருக்கு உத்தரவிட்டார். இதனை அடுத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சமையல் உபகரணங்கள் அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டன.

கிராம அலுவலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதன் காரணமாக வேறு பிரிவைச் சேர்ந்த கிராம அலுவலர், பிரதேச செயலர், ஊழியர்கள் சமையல்உபகரணங்களைமக்களுக்கு வழங்கியுள்ளனர்.

இதேவேளை ஒரு தொகுதி சமையல் உபகரணங்கள் விவசாய உபகரணங்கள், முட்கம்பி சுருள்கள் கிராம அலுவலரால் பிற இடமொன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் அந்தப் பகுதிமக்கள் பிரதேசசெயலரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (எ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக தரிசன நிறுவனத்தினால் மல்லாவியில் சமூக விழிப்புணர்வு



துணுக்காய், செப்.10
துணுக்காய் பிரதேசத்தில் மல்லாவியில் இயங்கி வரும் சமூக ஆதரவு நிறுவனமான உலக தரிசன நிறுவனம் சமூக விழிப்புணர்வு தொடர்பில் கிராம மக்களுக்குத் தெளிவுபடுத்தி வருகின்றது.
மல்லாவி 3ஆம் பிரிவில் இயங்கி வரும் இந்த நிறுவனத்தினர் தற்போதைய சூழலில் வழிதவறி சீரழிந்து சமூகத்தில் ஒன்று சேர முடியாதவாறு இருந்தவர்களுக்கு சமூக விழிப்புணர்வு குறித்து கடந்த 2ஆம் திகதி விளக்கங்களை அளித்தனர். இந்த நிறுவனத்தின் உளவளத் துணையாளர் ஜே.டானியல் சமூக விழிப்புணர்வு குறித்து விளக்கம் அளித்து வருகின்றார். (வ-415)

# பொது மண்டபம் அமைக்கும் பணிகளை தடுத்த பொலிஸார்

## தேவிபுரம் மக்கள் முறைப்பாடு

கிளிநொச்சி, ஒக்.10
தேவிபுரம் பகுதியில் பொது நோக்கு மண்டபம் அமைப்பதற்கெனப் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட காணியில், புதுக்குடியிருப்பு பொலிஸார் புகுந்து அடாவடித்தனம் புரிந்துள்ளதுடன், பொது மண்டபம் அமைக்கும் பணிகளையும் தடுத்து நிறுத்தி கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினரையும் அச்சுறுத்தியுள்ளனர்.
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தேவிபுரம் கிராம அலுவலர் பிரிவில் மக்கள் மீள்குடியேறியுள்ள நிலையில் குறித்த கிராமத்தின் உட்கட்டுமானப் பணிகள் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்த நிலையில் தேவிபுரம் கிராமத்தில் யு.என் கபிராட் நிறுவனத்தால் 25 லட்சம் ரூபா செலவில் பொது நோக்கு மண்டபம் ஒன்று அமைப்பதற்கான நிதி கிடைக்கப்பெற்ற நிலையில் அதற்கான பணியை மேற்கொள்ள கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகம் பிரதேச செயலகத்திடம் அனுமதி கோரியிருந்தது.
இந்த நிலையில் கடந்த ஒகஸ்ட் 29 ஆம் திகதியன்று குறித்த காணிக்கான உத்தியோகபூர்வ அனுமதியை பிரதேச செயலர் வழங்கியிருந்தார். கடந்த 30 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு பொது மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.
இதனையடுத்து அன்றிரவு அந்தக் காணிக்குள் அத்துமீறி நுழைந்த பொலிஸார் நிகழ்வுக்காக அங்கு போடப்பட்டிருந்த தகரக் கொட்டகை மற்றும் ஏனைய பொருள்களையும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு ஏற்றிச் சென்றிருந்தனர். அத்தோடு அந்தப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினரையும் அச்சுறுத்தி அவ்வாறு காணிக்குள் ஏதாவது நடவடிக்கை மேற்கொண்டால் கைது செய்யப்படுவர் எனவும் எச்சரிக்கை செய்துள்ளனர்.
இந்தச் சம்பவத்தையடுத்து குறித்த பிரதேச பொது அமைப்புக்கள், பொது மக்கள், பிரதேச செயலரிடம் முறையிட்டுள்ளதுடன் மேற்படி விடயத்தை முல்லைத்தீவு அரச அதிபரின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளனர். (வ-6)

## மானிப்பாய் பொதுச் சந்தையில் கட்டாக்காலி நாய்கள் தொல்லை

மானிப்பாய் மத்திய சந்தையில் கட்டாக்காலி நாய்களின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. இதனால் சந்தைக்குச் செல்லும் மக்கள் பயப்பீதியுடன் நடமாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பிரபல்யமான குறித்த சந்தைக்கு ஆண், பெண் உட்பட பல நூற்றுக் கணக்கான மக்கள் வந்து தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதில் ஈடுபட்டு வருகின்றனர்.
சந்தை வளாகத்தினுள் மரக்கறி விற்பனை நிலையத்துடன் கடலுணவு விற்பனை நிலையமும் அமைந்துள்ளது. கடலுணவுகளின் கழிவுகளை உண்பதற்காக வரும் நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதால் மக்கள் நடமாட அஞ்சுகின்றனர்.
விலங்கு விசர் நோய்க்கான தடுப்பூசி ஏற்றப்படாமல் வளாகத்தினுள் அலைந்து திரியும் கட்டாக்காலி நாய்கள் குறித்து விசனம் தெரிவித்துள்ள மக்கள் சம்பந்தப்பட்டவர்கள் இவ் விடயத்தில் தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-115)



கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வருடாந்த திருவிழாவையொட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை வீதிகள் தோறும் இடம்பெற்ற நற்கருணைப் பேரணியின் போது... (வ-135)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

நாளை
புரட்டாதி-25 வெள்ளிக்கிழமை 11.10.2013
திதி: ஸப்தமி மா.06.53 வரை
நட்சத்திரம்: மூலம் மு.ப.11.12 வரை
சுபநேரம்: 06.02 - 07.32 வரை
இராகுகாலம்: 10.32 - 12.02 வரை

**மேடம்:** ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளைப் பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற ஒரு பதற்றம் இருக்கும். யதார்த்தமாக நீங்கள் பேசுவதைக்கூட தவறாகப் புரிந்து கொள்வார்கள். முன்கோபத்தால் பகை உண்டாகும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளுடன் விவாதம் ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும்.

**மிதுனம்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**கடகம்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மன நிறைவு கிடைக்கும்.

**கன்னி:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**துலாம்:** மன நிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உறவுகளின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கிட்டும். அரசுப்பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரின் ஆதரவு கிடைக்கும். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**விருச்சிகம்:** அநாவசியப் பேச்சைத் தவிர்ப்பது நல்லது. அடுத்தவர்களைக் குறை கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக்கொள்ளப் பாருங்கள். நன்றி மறந்த சிலரை நினைத்து வருத்தமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் அதிருப்தி அடைவார்கள்.

**தனுசு:** வியாபாரத்தில் வேலையாள்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அலைச்சலுடன் ஆதாயம் ஏற்படும்.

**மகரம்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்.

**கும்பம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். புண்ணிய தலங்களுக்குச் சென்று வருவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மீனம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். [illegible] உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 5 | 4 | | | 8 | 6 | |
| 3 | 4 | | | 6 | | | | |
| | | 6 | 3 | | 5 | | | |
| 1 | 6 | | | 3 | | 2 | | |
| | 2 | | 8 | | 9 | | 5 | |
| | | 8 | 6 | 1 | | | 3 | 7 |
| | | | 9 | | 1 | 7 | | |
| | | | | 4 | | | 9 | 8 |
| | 9 | 2 | | | 6 | 3 | | 4 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 6 | 2 | 8 | 4 | 1 | 6 | 9 |
| 4 | 9 | 8 | 7 | 6 | 1 | 5 | 3 | 2 |
| 1 | 2 | 6 | 5 | 9 | 3 | 8 | 7 | 4 |
| 8 | 4 | 1 | 6 | 2 | 5 | 3 | 9 | 7 |
| 6 | 7 | 2 | 8 | 3 | 9 | 4 | 1 | 5 |
| 3 | 5 | 9 | 1 | 4 | 7 | 2 | 8 | 6 |
| 9 | 1 | 4 | 3 | 5 | 6 | 7 | 2 | 8 |
| 5 | 8 | 7 | 9 | 1 | 2 | 6 | 4 | 3 |
| 2 | 6 | 3 | 4 | 7 | 8 | 9 | 5 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

அச்சுவேலி, ஒக்.10
அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.
கல்லூரி அதிபர் வே.அரசகேசரி தலைமையில் நடை பெறும் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.வல யக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்விஅதி காரி ஏ.எஸ்.சற்குணராசா, யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் எஸ்.தயாளன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-11)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

**கண்ணீரில் கரைந்திட்ட நான்காண்டுகள்**

மலர்வு
15.04.1949
உதிர்வு
24.09.2009



அமரர்
**கந்தசாமி தங்கராசா**(பத்தர்)
திதி:10.10.2013

புன்னகை சிந்தும் உங்கள்
முகம் காண
நித்தம் நித்தம் ஏங்கித்
தவிக்கின்றோம் அப்பா

கண்ணன் ஒழுங்கை,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.
(32497)(6.4.3)

**14ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
22.12.1939
மறைவு
15.10.1999

திதி : பூர்வபக்க ஷஷ்டி
(10.10.2013)



அமரர் **ஆறுமுகம் கமலநாதன்**
முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாம வலயம்
B.A.Dip.in.Edu.S.L.P.S Grade 1 English

நீ வாழும் நாள் யாவும் மற்றவர்க்கு உதவி வந்தாய்
உற்றவரைப் பேணி உறவினரைப் பாராட்டி
ஊரவரை ஆதரித்து உத்தமனாய் வாழ்ந்தவனே
கல்விப்புலத்தில் நீ நடந்தபாதை நீண்ட நெடும் பாதை
என்றும் உங்கள் நினைவுடன்.

திருமதி ச.கமலநாதன்
ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு.

அன்பு மனைவி,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.
(32392) (7.6.3)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக்.10
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த முதலாம் திகதியன்று பரீட்சைத் திணைக் களத்தால் உத்தியோக பூர்வமாக வெளியிடப் பட்டன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர் களால் அனுப்பி வைக்கப்பட்ட பரீட்சைப் பெறு பேறுகளின் விவரம் வருமாறு:-

**வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்**
ர.கவிதன்-168.

**கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயம்**
ச.கிருஷ்ணவேள்-182, மு.அஸ்விஜன்-175, மு.பானுஜன் -164, உ.சிவப்பிரியன்-154.

**கொடிகாமம் அ.த.க.பாட சாலை**
ச.சுலக்ஸனா-169.

**இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை**
சு.யதுஷா-160.

**புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அச்சுவேலி**
தி.சுபானுஷா-176, கு.தேனுகன்-174, எ.றொனால்ட்-168, க.யசோபிகா-165, ஆ.கார்த்திகாயினி-165, தி.வினோஜன்-165, கா.டேவானி-165, க.நிதுஷன்-164, மா.வித்யா-163, பா.ஆரணி-158, கெ.நிதர்சன்-157, டொ.ஜெனற்சரா-158, சா.தக்ஷிகா-156, க.அனுஷ்ரன்-157, த.சுபகரன்- 154, இ.ஜனனி- 154, பு.கலைமேனன்-154. (வ-9)

## நவராத்திரி விழா

சுழிபுரம், ஒக்.10
தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாய சங்கத்தின் நவராத்திரிவிழா இன்று வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் தி.உதயசூரியன் தலைமையில் நடைபெறவுள்ளது. (வ-8)

## ஏடுகள் பெறலாம்

யாழ்ப்பாணம், ஒக்.10
மதுரம் மழலைகள் முன்பள்ளியினால் விஜயதசமியை முன்னிட்டு பாடசாலைகள், நிறுவனங்கள், ஆலயங்கள் என்பவற்றுக்கு ஏடு தொடக்குவதற்குரிய ஏடுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. ஏடுகளை கோப்பாயிலுள்ள மதுரம் மழலைகள் முன்பள்ளி, கிட்ஸ் முன்பள்ளி என்பவற்றில் பெற்றுக் கொள்ளலாம். (ந)

**மரண அறிவித்தல்**

**கந்தையா சுப்பிரமணியம்**



யாழ்.மட்டுவில் தெற்கு வாகையடியைப் பிறப்பிடமாகவும், யாழ்.நாச்சிமார் கோவிலடியைப் வதிவிடமாகவும் தற்போது பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் (06.10.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், அற்புதராணி (பிரான்ஸ்), மகேஸ்வரன்(கனடா), கிருபாராணி (பிரான்ஸ்), மனோகரன்(சுவிஸ்), மகேந்திரன்(பிரான்ஸ்), நவராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராமச்சந்திரன் (இலங்கை), சிவபாக்கியம்(இலங்கை), பரமேஸ்வரி(டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பவளராசா (பிரான்ஸ்), உதயா (கனடா), பரமதேவன் (பிரான்ஸ்), சாந்தமலர் (சுவிஸ்), மதிவதனா(பிரான்ஸ்), திருமால்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தவமணி (இலங்கை), சரவணமுத்து (இலங்கை), முத்துலிங்கம்(டென்மார்க்), காலஞ்சென்ற வல்லிபுரம், சிவபாக்கியம், நல்லையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரூபாகரன் கபிலா, முருகானந்தம் கவிதா, கஜிதா, கீர்த்தனன், தர்ஷனன், கார்த்திகன், கஜாந்தி, கஜினா (பிரான்ஸ்), துஷா,மதுரன்(கனடா),மிதுரன், மதுமிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும், றெபேக்கா, கிளோரா, விக்ரெறியா, கிறிஸ்,எர்வின், கெவின்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2013) வியாழக்கிழமை பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பரமதேவன்(வீ) - பிரான்ஸ்
33953516862, 33695933122
இந்து - பிரான்ஸ் 33660155433
பவளராசா - பிரான்ஸ் 33130334213
நவராணி - பிரான்ஸ் 33130630454
மகேஸ்வரன் - கனடா 16474049729
மனோகரன் - சுவிற்சலாந்து 41413209903
(32488) (7.6.3)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

**மரண அறிவித்தல்**

**கந்தசாமி கனகராஜா**



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கனகராஜா கடந்த (02.10.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், இரத்தினம்-காலஞ்சென்ற பவளரத் தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், நந்தினியின் அன்புக் கணவரும், நந்தா, நிஷாந்தி, நிரோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிகுமார், வசீகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சபேசன்,நிமலன், கமலன்(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், தனுஷா, சஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.10.2013) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். நீர்வேலியில் உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் துக்க அனுஷ்டிப்பு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சேர் லேன், நீர்வேலி வடக்கு
நீர்வேலி. தொடர்பு: 077 753 2508

தகவல்:- சு.இரத்தினம் குடும்பம், இ.சபேசன் (அப்பன்), கமலன்(பிரான்ஸ்)
(32478)(5.6.3)

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

செல்வி
**குலராஜன் அக்ஷஜா**



மலர்வு
20.08.2009
உதிர்வு
10.09.2013

இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டு
அவதரித்தாய் அம்மா -நீ
பிறந்த நாளே எங்கள் வீட்டில் இன்பம் அம்மா - நீ
தவளா விட்டாலும் தங்கமலர் போல்
பார்த்தோம் மலரே உனக்கு
சிறுகாயம் வந்தாலும் கூட எங்கள் மனம் துடிதுடிக்கும்
நீ எங்களுடன் இருக்கும் போது
இன்பம் மட்டுமே இருந்ததம்மா
அப்படிப்பட்ட எங்களை நீ விட்டுப் பிரிந்ததேனோ

என்றும் எம் மனதை விட்டு அகலாத
எங்கள் பாச மலரே- நீ
பிரிந்த நாளில் இன்பத்தை நிறுத்தி
உன் சாந்திக்காக பூசிக்கின்றோம்- நீ
எங்களை விட்டுப் பிரிந்தாலும்
நீங்காது எம் பாசம் ஆறாது எம் துயரம்
அக்ஷி அக்ஷி என்றழைத்து எம் வாயே ஓய்ந்ததம்மா

எங்கள் சிரிப்பின் வேராய் இருந்தாய் மலரே -நீ
இவ்வுலகில் நல்வாழ்வு போதுமென்று
இறைவன் தாள் அடைந்தாயோ
நீ எங்களை விட்டுப் பிரிந்த தினம்
நீராய் சுரந்ததம்மா எம் வீடு
நீ எங்களை விட்டுப் பிரிந்ததேனோ!

ஆண்டிச் செட்டியாவளவு, வல்வெட்டி.
(32556) (5.6.3)
குடும்பத்தினர்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை
*திருமதி ஞானரஞ்சிதம் கலாநிதி*
அவர்களின்
அன்புக் கணவரும் பாடசாலையில் ஆங்கிலக்
கல்வியின் மேம்பாட்டிற்கு அயராது
பங்காற்றியவருமான
**சிதம்பரப்பிள்ளை கலாநிதி**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள். (சி/2758)(7.6.3)
யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயம், சாவகச்சேரி.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
08*12*1988
மறைவு
21*09*2012



அமரர் **அம்பலவிமுருகன் நிர்மலன்**

எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்டாயே
உன் அழகிய முகத்தையும்
புன்சிரிப்பையும் பார்ப்பது எப்போ

கடந்த (21.09.2012) இல் சிவபதமடைந்த எங்கள் அருமை மகனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (10.10.2013) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடபெறும்.
இந்த நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன்கோயிலடி,
காரைநகர்.

நீங்காத நினைவுகளுடன்
ஆ.அம்பலவிமுருகன்
(ஆதீனகர்த்தா, காரைநகர் சிவன் கோயில், ஈழத்துச்சிதம்பரம்) அம்மா, தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவங்களுக்கெல்லாம் அடித்தளமாயிருப்பது எது?

எமது அனுபவங்களுக்கெல்லாம் அடித்தளமாயிருப்பது 'தான்' என்பதாகும். தான் என்பது உலகளாவியது. இந்தத் 'தான்' என்பதை மறந்து நாம் இந்த உலகமே எமக்கு எல்லாவித அனுபவங்கள், இன்பம், துன்பம், நயம், நட்டம், புகழ்ச்சி, இகழ்ச்சி ஆகியவற்றை தருகின்றதென எண்ணிக் கொள்கிறோம்.



நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது

சாயி சிந்தனை

# வீடு புகுந்து மிரட்டினார் என கணக்காளர் மீது அதிகாரி புகார்

யாழ்ப்பாணம், ஒக்.10

சாவகச்சேரியில் கணக்காளராகப் பணியாற்றி வரும் அரச அதிகாரி ஒருவர், வீடு புகுந்து மிரட்டியதால் உளவியல் ரீதியாகத் தான் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதே பகுதி அரச அலுவலகத்தில் பணியாற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த மாதம் தான் விடுப்பில் வீட்டில் நின்றிருந்த வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக முறைப்பாடு செய்துள்ள குறிப்பிட்ட ஊழியர் தெரிவித்துள்ளார். சம்பவ தினத்தன்று பி.ப. 2 மணியளவில் கணக்காளரும் அன்றைய தினம் விடுப்பில் நின் றிருந்த சக ஊழியரும், நகர சபை உறுப்பினர் ஒருவரும் கைத்தொலைபேசி மூலம் தன்னுடன் தொடர்பு கொண்டு கதைத்த பின்னர் வீடு தேடி வந்து மிரட்டினர் என்று முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நானும் எனது குடும்பத்தினரும் உளவியல் ரீதியாக பாதிப்படைந்துள்ளதால் அச்சமடைந்துள்ளோம்" என்று கூறும் முறைப்பாட்டாளர் தனது உரிமைகளை மீறியமைக்காக கணக்காளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பிரதேச செயலர் மற்றும் அரச அதிபரிடம் விளக்கம் கோரியிருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித் தார்.

குறித்த கணக்காளர் இது தொடர்பிலான தனது பக்கக் கருத்தைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

(உ-5)

## வீடு வாடகைக்கு



வளன்புரம், கொழும்புத்துறை, சுவாமியார் ஒழுங்கையில் இரண்டரைப் பரப்புக் காணியுடன், தளபாடங்களற்ற வீடு வாடகைக் குண்டு. நான்கு பெரிய படுக்கை அறைகளுடன், குசினி, STORE ROOM/PANTRY, OFFICE ROOM, STUDY ROOM, ATTACHED BATH ROOM, TWO HALLS, WATER TANK, கிணறு, SERVANT TOILET மற்றும் தென்னைகள், மாமரங்கள், கொய்யா, முருங்கை போன்ற பிரயோசனங்களுடன் வாடகைக்குண்டு.

தொடர்பு: 077 695 3776 (32494) (7.6.3)




## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளை, நெல்லண்டை அம்மன் கோயிலடியில் நல்ல நிலையிலுள்ள, பழைய வீடு(நிலம் நீங்கலாக) விற்பனைக்குண்டு.

அதிகூடிய கேள்விக்காரர் உடன் பணத்தைச் செலுத்தி 14 நாள்களுக்குள் வீட்டை முழுமையாக அகற்றிச் செல்லுதல் வேண்டும். வீட்டைப் பார்வையிடவும்.

மேலதிக விவரங்களுக்கு:
077 071 2542, 077 961 4300,
077 616 0310 (சி/12685) (5.6.3)

# இளைஞர் விருது வழங்கல் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.10

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட அலுவலகத்தால் நடத்தப்படும் மாவட்ட இளைஞர் விருது வழங்கல் போட்டி எதிர்வரும் 12, 13 ஆகிய தினங்களில் காலை 9 மணிக்கு சன்மார்க்க வித்தியாலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இந்தப் போட்டிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் அனைவரும் அன்றைய தினம் போட்டியில் தவறாது பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள் ளனர்.

(வ)

## மணமகள் தேவை

62 ஆம் ஆண்டு சுவாதி 2 இல் செவ்வாய் பாவம் 22 அரச தொழில் மணமகனிற்கு மணமகள் தேவை. துர்க்கா திருமண சேவை 370/3, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்

077 818 5978, 021 321 1814
(பதிவு இலவசம்) (32572) (4.6.3)

## காணி விற்பனை

நெடுங்குளம் வீதி, முதலாம் ஒழுங்கை, அரியாலை என்னும் முகவரியில் அமைந்துள்ள வீட்டுக்காணி 2¾ பரப்பு விற்பனைக்கு உள்ளது.

(A-9 வீதியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் உள்ளது) தொடர்பு: 077 870 6113 (32587) (7.6.3)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



பரன் கபித்தனன்
(யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி)

2013 தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் 176 புள்ளிகள் பெற்று தீவக வலயத்தில் 02ஆம் இடத்தினையும் பாடசாலையில் முதலாம் இடத்தினையும் பெற்று விசேட சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரைப் பயிற்றுவித்த அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

பல கலைகள் கற்று பட்டங்களைப் பெற்று உயர்வடைய இறைவன் ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: தாத்தா, அம்மம்மா, மாமாமார்கள், பெரியம்மாக்கள், சித்தி

(32570)(5.6.3)

## அரசாங்க அறிவித்தல்
## யாழ் மாவட்ட செயலக சுத்திகரிப்பு சேவைக்கான
## கேள்வி அறிவித்தல் -2014

யாழ் மாவட்ட செயலக வளவில் உள்ள சகல மலசலகூடங்களையும், சுற்றுப்புறங்களையும் மற்றும் கழிவுநீர் வழிந்தோடும் வாய்க்கால்களையும் துப்புரவு செய்வதற்கான கேள்விகள் பொருத்தமான சேவை வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. இது தொடர்பான மேலதிக தகவல்களையும், விண்ணப்பப்படிவத்தினையும் செயலக களஞ்சியநலன்புரிக்கிளையில் 2013.10.14 ஆந் திகதியிலிருந்து அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 2.30 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500.00 உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000.00 உம் செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம். செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விவரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ரூபா 5000.00 செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன், "தவிசாளர், பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரியிட்ட, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "யாழ் மாவட்ட செயலக சுத்திகரிப்பு சேவைக்கான கேள்வி அறிவித்தல் - 2014" என குறிப்பிட்டு 2013.10.30 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

சுந்தரம் அருமைநாயகம்
மாவட்ட செயலர்,
யாழ் மாவட்டம். (சி/12688) (7.6.3)

# டெயின்டி உற்பத்திகள்
## விநியோகிப்பதற்கு முகவர்கள் தேவை

SLS

Daintee

நாட்டின் முன்னோடி இனிப்புப் பண்ட உற்பத்தி நிறுவனமான டெயின்டி நிறுவனம் உற்பத்தி செய்து விநியோகிக்கும் டொபி, ஜெலி, சொக்லேட், ஸ்னெக்ஸ், வேபர்ஸ் பிஸ்கட், குரக்கன் கிரன்ச், கோன் பிலெக்ஸ், 40-கிரேன் பிலேக்ஸ், நூடில்ஸ், லொலிபொப், ஜம்போ பீநட்ஸ் மற்றும் ரோயல் பிலென்ட் தேயிலை போன்ற அபிமானமிக்க உற்பத்திகள் மற்றும சீனியற்ற புதிய உற்பத்திகள் பலவற்றை விநியோகிப்பதற்கு கீழ்வரும் மாவட்டங்களில் முகவர்கள் தேவை.

- யாழ்ப்பாணம்
- வவுனியா
- கிளிநொச்சி
- முல்லைத்தீவு
- மன்னார்
- மட்டக்களப்பு
- திருகோணமலை
- திகாமடுல்ல உட்பட
- கிழக்கு மாகாணம்

எமது நிறுவனத்தின் சிறப்புத்தன்மை

- இலங்கையில் SLS தரச் சான்றிதழ் பெற்றுள்ளமை
- ISO சர்வதேச தரச் சான்றிதழ் பெற்றுள்ளமை
- எமது உற்பத்திகள் நுகர்வோர் மத்தியில் அபிமானம் பெற்றுள்ளமை

உங்களிடம் நாம் எதிர்பார்ப்பது

- வங்கி பிணையொன்றை வைக்க முடிகின்றமை
- வாகன வசதிகள் மற்றும் களஞ்சிய வசதிகள் உள்ளமை
- அலுவலக மற்றும் தொலைபேசி வசதிகள்

எமது நிறுவனத்தின் உற்பத்திகளை விநியோகிப்பதனூடாக உங்களால் திருப்தியடைய முடிவதோடு அதன் மூலம் கவர்ச்சிகரமான வருமானத்தையும் பெறமுடியும்.

வர்த்தக உலகில் உயர் நிலையையடைய நீங்கள் விரும்பினால் இன்றே விநியோக முகவர்கள் என கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு 10 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

விற்பனை முகாமையாளர்
டெயின்டி மார்கடிங்
72 ஊ.கந்தவல வீதி,ரத்மலானை.பெ[illegible]

SLSI CERTIFIED SYSTEM ISO 9001

டெயின்டி நிறுவனம்- ISO மற்றும் SLS தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனமாகும்

# சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்
## KIDX PARK PRE SCHOOL & DAY CARE CENTRE

528, Palaly Road, Thirunelvely.



அன்பானவர்களே!

எனது குடும்பத்தைப் போல எமது முன்பள்ளியும் மிக அழகானது 'நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்' என்ற வகையில்......

* மகிழ்ச்சிகரமான, மிகப்பாதுகாப்பான வீட்டுச் சூழலுடன் ஓர் இலட்சிய முன்பள்ளிப் பாடசாலை அமைப்பு!
* ஆசிரியர்களாகிய நாம் பெற்றோர்களாகவே மாறி உங்கள் குழந்தைச் செல்வங்களை அரவணைத்து சுதந்திரமான விளையாட்டு மூலமாக கற்றல் அனுபவங்களை வழங்குகின்றோம்.

'களிமண் பிசைவிலிருந்து கணினிக் கற்கை வரை'

2+ Play Group, 3+ Montessori, 4+ Pre School

2014ஆம் ஆண்டு புதிய அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

திருமதி கர்ணி தனபாலன்
(பணிப்பாளர்)
Dip. in Pre School Ed. (Distinction)
PG-Guidance&Counselling 1st Class

14.10.2013 காலை 8.30 மணிக்கு விஜயதசமி அன்று ஏடு தொடக்கல் நிகழ்வு ஆரம்பம்.




'கல்விப் பணியே கடவுள் பணி'

நிபுணத்துவ ஆலோசகர்: பாலசுப்பிரமணியம் தனபாலன்
BA(Cey), PGDE(merit), Dip. in Pre School Ed.(Distinction)
M.Phill in Pre School Education, Dip in Psy 1st Class.
Cert in Vocational Guidance (Singapore)

அனேக வேலை செய்யும் பெற்றோர்களின் வேண்டுதலுக்கு இணங்க காலை 7.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை எம் முன்பள்ளியில் குழந்தைகள் காப்பகம் இயங்குகின்றது. உங்கள் குழந்தைகள் உண்டு, உறங்கி, விளையாடி - கற்க ரம்மியமான சூழலில்....... (32495)(5.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட, கிழக்கைச் சேர்ந்த 44 பேருக்குப் பிணை

கொழும்பு.ஒக்.10

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் அனுப்புவதற்காக அழைத்துவந்து ஒரு மாதகாலமாக பல இடங்களில் தங்கவைக் கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 44 பேருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

சந்தேகத்தின்பேரில் அண்மையில் கைது செய்யப்பட்ட 44 பேரும் களுத்துறை நீதிவான் அயேஷா ஆபதீன் முன்னிலையில் செவ்வாய்க் கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டபோதே நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

**ஒரு மாதகாலமாக பல இடங்களில் தங்கவைக் கப்பட்டிருந்தவர்களுக்கே பிணை வழங்கப்பட்டுள்ளது.**

கொச்சிக்கடையைச் சேர்ந்த மொஹமட் பாரூக் பைசில் (வயது-29), மொஹமட் சமின் அஜிலான்(வயது-27) இருவரையும் தடுத்து வைத்து விசாரிப்பதற்கும் நீதிமன்றத்தினால் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (ச)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
09 . 06 . 1934

விண்ணில்
21 . 09 . 2012

### அமரர் சின்னத்துரை தங்கரத்தினம்

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

64, குகன் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (32566)(3.6.4)

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## அரச பொது ஊழியர் சங்க பொதுக்கூட்டம்

அம்பாறை, ஒக்.10

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையின் புனரமைப்புப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.


இந்தக் கூட்டம் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாவட்டக் கிளைப் புனரமைப்புப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி கேதீஸ்வரன் ரூபவதி கலந்து கொள்ளவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் வடமாகாணத்திலுள்ள சங்க மாவட்ட, பிரதேச இணைப்பாளர்கள் கலந்துகொள்வர். (ச-30)

## மரண அறிவித்தல்

### கந்தையா சின்னத்தம்பி



வடமராட்சி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி, கோயில் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்தம்பி கடந்த (08.10.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-லக்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், வினோதா (லண்டன்), லலிதா (ஜேர்மனி), சிலோசினி (சுவீடன்), வனிதா (நோர்வே), விஜிதரன் (விஜி- பிரான்ஸ்), தயாபரன் (தயா-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, ஐயாத்துரை, தம்பையா மற்றும் சரஸ்வதி பாஸ்கரன் (கனடா), தர்மலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் நாகேந்திரராசா (ஜப்பான்-இந்தியா), அருந்தவநாதன் (சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவகுமார் (லண்டன்), சிறிஸ்கந்தராசா (ஜேர்மனி), சற்குருநாதன் (சுவீடன்), தயாபரன் (நோர்வே), மதிகலா (பிரான்ஸ்), பிரதிபா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெயப்பிரதாஸ், நிருஷாலினி (லண்டன்), கிரிஜனா(லண்டன்), கஜன், கீர்த்தனா, சஜீத் (ஜேர்மனி),யுனதன், யனுசா (சுவீடன்), கர்ஷா, ஹரினி (நோர்வே), வர்ஷா, தர்னீஸ், ஹாசினி (பிரான்ஸ்), சந்தோஷ், சஞ்யை (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாத்தாவும் நிரோன், ஜெரோன் (லண்டன்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (13.10.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10 மணியளவில் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் றோட்,
சாவகச்சேரி. (29658)(3.6.4)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## ஆத்மசாந்தி அழைப்பும் நன்றி நவிலலும்



உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த

### அமரர் சண்முகம் ஏகாம்பரநாதன்

[சமாதான நீதிவான், வலிகாமம் கிழக்கு மத்தியஸ்தர் சபை உறுப்பினர்,
கற்பகப் பிள்ளையார் கோவில் பொருளாளர், கணேசா வாசிகசாலை தலைவர்,
ராசாட்டி அண்ணமார் கோவில் தலைவர்]

அகம் மகிழ
21.09.1941

அகம் நெகிழ
11.09.2013

ஏகாம்பரத்தைப் போல இனி ஒருவர் இங்குளரோ
எனும் வண்ணம் ஓடையம்பதியானுக்கும் ஒப்பற்ற இந்துவுக்கும்
அண்ணமாருடன் அரியகணேசா நிறுவனத்திற்கும்
அருமையாய் உழைத்து அவனிவிட்டுச் சென்று
மூன்றுபத்தொருநாள் சென்ற இவ்வஞ்சலியில்
அன்போடு கலந்து அருவிருந்தில் மகிழ
அன்புள்ளம் அனைத்தையும் ஆராமையுடன் அழைக்கின்றோம்.

11.09.2013 புதன்கிழமை காலை 7 மணியளவில் இவ்வுலக வாழ்வை நீத்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு உடன்வந்து எமக்கு ஆறுதல்கூறி தேற்றியோருக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும், அனைத்து வைத்தியர்களுக்கும், மலர்வளையம் வைத்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும், கணேசா வாசிகசாலை நிர்வாகத்தினருக்கும், கற்பகப் பிள்ளையார் கோவில் நிர்வாகத்திற்கும், ராசாட்டி அண்ணமார் கோவில் பரிபாலன சபைக்கும் எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகள் தொடர்பாகப் பல்வேறு வகைகளிலும் உதவி, ஒத்தாசை நல்கியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நாளை (11.10.2013) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு : அன்னாரின் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களில் எமது தனிப்பட்ட அழைப்புக் கிடைக்காதவர்கள் தயவுசெய்து இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் பங்குபற்றுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இந்துக் கல்லூரி ஒழுங்கை,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர்.
தொ.பே: 021 321 9734

(32500) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் றோட்டில்
அமைந்துள்ள பிள்ளையார் கிறேசர்
(சகல வசதிகளுடன்) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 048 9674

(சி/11998)(4.6.3)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் - மிருசுவில்



க.கஸ்தூரியா
168 புள்ளிகள்



சி.ஜனகன்
165 புள்ளிகள்



இ.செருஜா
156 புள்ளிகள்

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மேற்படி மாணவர்களையும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களாகிய ஜெ.நிருசனா - 138, அ.பிரதீபா-127, ர.வக்ஷனா-122, மோ.சிந்துஜா-121, யோ.யஜித்-119, ஞா.திலக்ஷன்-104, ஆ.பினோகாஸ்-101 ஆகிய மாணவர்களையும், இவர்களை நெறிப்படுத்திய அதிபர் வி.கணபதிப்பிள்ளை அவர்களையும், ஆசிரியர்கள் பா..விக்கினேஸ்வரன், இ.நாகேந்திரன், ஆகியோரையும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்!

CONGRATULATIONS!

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்
மிருசுவில்.

(32578)(10,14)

## செயற்கைக் கடற்கரை உருவாக்க நடவடிக்கை

கொழும்பு.ஒக்.10

நீர்கொழும்பு, வென்னப் புவையிலிருந்து நத்தாண்டி வரை செயற்கைக்கடற்கரையைஉருவாக்க கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மாரவில பகுதியில் ஏற்படும் கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம் என்று திணைக்களத்தின் பணிப்பாளர் அனில் பிரேமரத்ன தெரிவித்தார். ஆழ்கடலிருந்து பம்பிகள் மூலம் மணலைப் பெற்று செயற்கைக் கடற்கரையை உருவாக்குவதற்கு கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. (ச)


## உலக நாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

தீபாவளியை முன்னிட்டு
விசேட சலுகை



* 220 ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
* சகல நாடுகளுக்கும் 3 - 5 வேலைநாட்களில் சேவை
* மிக குறைந்த கட்டணம் மிக விரைவான சேவை.

வாடிக்கையாளர்களுக்கான
விசேட சலுகை U.K. 3Kg
பொதிக்கு 2700/= ரூபா மட்டுமே

பல நாடுகளுக்கு
கட்டணங்கள்
குறைக்கப்பட்டுள்ளன



கிரிஷான்
Worldwide Courier Service
499/1, பருத்துறை வீதி, நல்லூர், (நல்லூர் கோவில் முன்பாக)
Hot Line: +94770569642, +94770166746


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த
**தவசீலன் ஜெயந்தினி** தம்பதியரின் செல்வப் புதல்
வியும் யா/யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவியுமான

### தவசீலன் அபிநயா

அவர்கள் 2013 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில்
பரீட்சையில் 181 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்தமையை மனமகிழ்வோடு பாராட்டு
வதுடன் அவர் கல்வியில் மேலும் பல சாதனைகள்
படைத்து நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

ஞான வைரவர் கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்

வாழ்த்துவோர்: அம்மப்பா, அம்மம்மா,
சி.சிவகுமார்(பெரியமாமா) குடும்பம்-சுவிஸ்,
சி.ஜெயக்குமார் (சின்னமாமா) குடும்பம்-லண்டன்),
சி.ரதீஸ்குமார் (குட்டிமாமா) குடும்பம்


## கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை
## மானிப்பாய்

**Opening Ceremony of**
**Oral and Dental Clinic and Capping Ceremony**

ஒக்ரோபர் 12ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு
**வாய், பல் சிகிச்சை நிலைய திறப்பு விழாவும்** அதைத் தொடர்ந்து
**தாதிய உத்தியோகஸ்தர்கள் Capping Ceremony**யும் நடைபெறும்.
தென்னிந்திய திருச்சபை பேராயர்
அதி.வணக்கத்துக்குரிய
**Daniel S.Thiragarajah, Ph.D** அவர்களும்
அவர்தம் பாரியார், Dr.Mrs.தயாளினி தியாகராஜா
அவர்களும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இவ்வைபவத்தைச்
சிறப்பித்து ஆசீர்வதிப்பார்கள்.

அன்பர்கள்,நலன்விரும்பிகள் யாவரும் வருகை தந்து
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

Dr.V.David Retnanathan
Medical Superintendent,
Green Memorial Hospital and Mc Leod Hospital.
T.P. 077 617 1451

(32579)(5.6)


# சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

### மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்க வாழ்த்துக்கள்



மாதகல் மண்ணின் மைந்தனும் எமது நிர்வாக உறுப்பினரும் அதிபருமாகிய தி.வி.நடராசா அவர்களை சங்கம் சார்பாக வாழ்த்துகின்றேன்.

இவர் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் உதவியுடன் விளையாட்டு மைதானம் உட்பட பௌதீக வளங்களையும் ஏற்படுத்தி மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற சூழலை ஏற்படுத்தினார். மாணவர்கள் பல்கலைக்கழகம் வரை சாதனை படைக்கச் செய்தார். விளையாட்டுதுறையில் தேசிய மட்டம் வரை சாதனை படைக்கச் செய்தார். எமது சங்கம் சார்பாக சமூக பணிகளில் ஈடுபட்டு கிராம அபிவிருத்தியிலும் தன்னை ஈடுபடுத்தியவர். இவர் தனது ஓய்வுக் காலத்திலும் எமது கிராம அபிவிருத்திக்கு உழைப்பார் என்றும் அவரது ஓய்வுகாலத்தில் உள உடல் ஆரோக்கியத்துடன் சிறப்பாக வாழ எல்வாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சா.அருள்ஞானானந்தன்
செயலாளர். மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கம்.

### வாழ்த்துச் செய்தி

யா/மாதகல் சென். யோசப் ம.வி அதிபர் திரு.வி.நடராசா மணி விழா காண்பதையிட்டு வாழ்த்துகின்றேன்.ஆசிரியராக அதிபராக வழிகாட்டியாக மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் அளப்பரிய சேவைகளை செய்தவர் .பாடசாலையின் கல்வி மேம்பாட்டிற்காக கடினமாக உழைத்தார். நற்பண்புடன் கூடிய இவர் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு உட்பட பலவற்றிலும் ஈடுபடுத்துவதில் பின்நின்றதில்லை.மாணவருக்கு சிறந்த அத்திவாரத்தினை இட்டமையால் சிறந்த கல்வி மான்கள் உருவாகியுள்ளனர். தனது சேவையை திருப்தியுடன் நிறைவேற்றி அறுபதாவது வயதிலே இளைப்பாறும் திரு.வி.நடராசா அவர்கள் ஓய்வுக் காலத்தில் குடும்பத்துடன் இன்பமாக சகல வளங்களையும் பெற்று வாழ ஆசிக்கின்றேன்.

செ.சந்திரராஜா
வலயக் கல்விப் பணிப்பாளர்,வலிகாமம்.

### வாழ்த்துச் செய்தி



மாதகல் சென் யோசப் மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி 10.10.2013 அன்று ஓய்வு பெறும் அதிபர் திரு.வி .நடராசா அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றேன். இவர் பாடசாலையின் வளர்ச்சிக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்து பல தடைகளைக் கடந்து அயராது உழைத்தார். இவரது பணிக் காலத்தில் சென். யோசப் மகா வித்தியாலயம் பல சாதனைகளையும் பல உயர் நிலைகளையும் வளர்ச்சியையும் கண்டுள்ளது என்று சொல்வதில் ஐயம் இல்லை. எனவே இந் நன்னாளில் ஓய்வு பெறுகின்ற வேளையில் அவரது சேவைக்காலத்தை பாராட்டி வாழ்த்தி நிற்கின்றேன். இவரது ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக நீண்ட காலம் வாழ்ந்து இன்னும் பல சமூகப் பணிகளை ஆற்ற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பரார்த்திக்கின் றேன்.

*அருட்திரு.கை.பீ.கனிசியஸ் ருஜ் - பங்குத்தந்தை, மாதகல்.*

### ஆசிச் செய்தி

கல்வியே மானிட வாழ்வின் முதன்மைச் சொத்தாகும்.இதனை காத்து வளர்த்து நிற்கின்ற கல்வியாளர் என்ற வகையில் மாதகல் சென்யோசப் மகா வித்தியாலயத்தின் அதிபராக அர்ப்பணிப்பான தன் பணிகளால் உயர்ந்த திரு. வி. நடராசா அவர்களின் சேவை நலத்தினை பாராட்டும் இவ்வேளை மகத்தானது. இப் பாடசாலையின் அதிபராக கடந்த ஆறு வருடங்களாக தனது வாழ்வையே கல்விச் சமூகத்திற்கு அர்ப்பணித்து அறிவிற்கும், திறமைக்கும், ஆளுமைக்கும் விருட்சமாக நின்று பல விழுதுகளை உருவாக்கியவர். இவரது ஓய்வுக்காலம். சீரும் சிறப்புமாக அமைய எனது வாழ்த்துக்களையும், இறையாசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பரகாசம்
குருமுதல்வர், ஆயர் இல்லம் யாழ்ப்பாணம்.

### மகத்தான சேவை செய்த மாமனிதர்

எமது பாடசாலையின் மாணவர்களும், ஆசிரியர்களும், மாதகல் கிராமத்தவர்களும் மறக்க முடியாதவகையில் எமது பாடசாலையை வளம்மிக்கதாகவும், அறிவுத்திறன் மிக்கதாகவும் மாற்றியமைத்த பெருமைக்குரியவர் நம் அதிபர் திரு.வி.நடராஜா அவர்கள். இவர் எம் பாடசாலையைவிட்டு இளைப்பாறிச்செல்வது கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பு எனினும் அவரது ஓய்வுக்காலத்திலும் நற்பணிகள் தொடரவும், உடல் உள சுகம்வேண்டி நல்லாசிகள் வேண்டிநிற்கின்றேன்.

ஆசிரியர்கள் சார்பில்
திருமதி. கார்மெலா ஜெயகாந்தன், யா/ மாதகல் சென்ஜோசப் ம.வி.



### அதிபர். திரு.விசுவநாதர் நடராசா
(B.A., DIP IN Edu, S.L.P. S 2 I)

*அவர்களின் சேவைக்கால விபரம்*

மன்.புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி
ஆசிரியர் -26.12.1985-28.02.1992
யா/இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி
ஆசிரியர்- 01.03.1992-17.05.1992
யா/சங்கனை சிவப்பரகாச ம.வி.
ஆசிரியர்- 18.05.1992-28.02.1998
யா/மாதகல் சென். யோசப் ம.வி.
ஆசிரியர்- 01.03.1998-31.12.1998
யா/வடலியடைப்பு சைவபரகாச வித்தியாலயம்
அதிபர் - 01.01.1999-31.12.2003
யா/பண்ணாகம் மெய் கண்டான் ம.வி.
அதிபர்- 01.01.2004-25.11.2007
யா/மாதகல் சென் யோசப் ம.வி.
அதிபர்-26.11.2007-09.10.2013.

### ஓய்வு பெறும் அதிபருக்கு கனடா நலன்புரிச் சங்கத்தின் ஆசி



யா/மாதகல் சென் யோசப் மகா வித்தியாலயம் மாதகல் சுற்றுவட்டத்தில் தலைநிமிர்ந்து நின்ற பாடசாலையாகும். இப் பாடசாலையில் அதிபராக பொறுப்பேற்ற மதிப்புக்குரிய அதிபர் திரு.வி.நடராசா அவர்கள் கல்வி வளர்ச்சியில் காட்டிய அக்கறை ஊரறிந்த உண்மையாகும். தேசிய மட்டம் வரை பாடசாலையின் பெயரை கொண்டு சென்றது.ஊரிலும் படித்து பல்கலைக்கழகம் செல்லலாம் என்ற பல சாதனைகளை நிலைநிறுத்தினார். ஊரபிமானத்தோடு கோடிப் பெறுமதி கொண்ட விளையாட்டுத் திடலை நாம் அளிப்பதற்கு வழிகாட்டிய வரை பாராட்டாமல் இருக்க முடியாது. அதிபர் ஓய்வு பெறுவது மாதகலின் கல்வி வளர்ச்சியில் ஓர் பாரிய வீழ்ச்சியாக அமைந்திடுமோ [illegible] இணைந்து செயற்பட வேண்டும் என சங்கம் சார்பாக கேட்[illegible] ஆற்ற வேண்டும் என அன்புடன் வேண்டுகின்றோம்.

*கனடா மாதகல் நலன்புரிச் சங்கம்*
*சபா.அருள் சுப்பிரமணியம் (செயலாளர்)*

### ஆசிச் செய்தி



மருதமும் நெய்தலும் ஒருங்கே அழகு சேர்க்க அறிவுசார் கல்விமான்களை மாதகலில் உருவாக்க ஊரின் நுழைவாயிலிலே எழில் மிகு தோற்றத்துடனே வீற்றிருக்கும் யா/மாதகல் சென். யோசப் மகா வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் அதிபர் திரு.வி.நடராசா அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்வுறுகின்றேன்.

வேதம் ஓதிடும் வேதியர்க்கு ஓர்மழை
நீதிமன்னர் நெறிமுறைக்கு ஓர் மழை
மாதர் கற்புடை மங்கையர்க்கு ஓர் மழை
மாதம் மூன்றும் மழையெனப் பெய்யுமே

என்பதற்கேற்ப தனது ஆட்சி முறையும் நாட்டு நிலையும் நல்ல படி உள்ளது என்பதை இளைப்பாறும் வரை உறுதிப்படுத்தி எனது ஊர். எனது பாடசாலை. எனது மக்கள் என சாதி மத பொருளாதார வேறுபாடின்றி செயற்பட்டமைக்கு இப் பாடசாலையின் வளர்ச்சி ஓர் எடுத்துக்காட்டாகும் இங்கிலீஸ் பள்ளிக்கூடம் .எமது மூதாதையர் உருவாக்கிய அறிவுக்கூடம் 1968-1988 காலப்பகுதி வரை இந்தப் பள்ளிகூடத்தில் எங்கட பிள்ளைகளைச் சேர்கின்றதோ எனப் பெற்றோரால் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இள வாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எனத் தம் பள்ளைகளைச் சேர்த்த காலத்தினை யும் மறப்பதற்கில்லை. இதற்கு முடிவு கட்டியது புதிய ஆசிரிய நியமனங்கள் புதிய அதிபர் நியமனம் அதுவா இங்கிலீஸ் பள்ளிக்கூடம் என வியக்க வைப்பதற்கு தாங்களும் தான் காரணம் என்பதால் மாதகல் மண்ணும் பெருமையடைகின்றது. தாங்களும் பெருமையடைகிறீர்கள்.

மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர் நீப்பர் மானம் ஒரின்.

என்ற வள்ளுவர் வாக்குக்கொப்ப தாங்கள் கவரிமானாகவே இளைப்பாறுதல் ஏனைய அதிபர்களுக்கும் முன்னுதாரணமாகும். அகவை அறுபதிலும் இளமைத்துடிப்புடன் ஓய்வு பெறும் உங்களின் ஓய்வுக்காலம் ஏழைச்சிறார்களின் கல்விக்கு உரமிடவும் உடல் உள நலத்துடன் குடும்பத்தாருடன் இன்புற்றிருக்கவும் இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

திருமதி.செலின் சுகந்தி செபஸ்ரியன்
*உதவிச் செயலாளார், கல்வி அமைச்சு, வடமாகாணம்.*

### சரித்திரம் படைத்த சாதனையாளர்


யா/ மாதகல் சென். யோசப் மகாவித்தியாலயத்தின் நன் மாணாக்கனாய், ஆசிரியராய், அதிபராய் சரித்திரம் படைத்து 10.10.2013 அன்று ஓய்வுபெறும் எங்கள் அதிபர் திரு. வி. நடராசா அவர்கள் நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் திறம்பட சேவையாற்றிய சாதனையாளர். ஓய்வுக் காலத்திலும் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு பெருவாழ்வு வாழ எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். செ. ஈஸ்வரன்

*உப அதிபர், யா/ மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயம்*

### நினைத்ததை நிறைவேற்றும் புரட்சியாளர்

குறுகிய காலத்தில் பாடசாலையின் அபவிருத்தியில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்திய மாமனிதர் எங்கள் அதிபர் திரு.வி. நடராஜா அவர்கள். எமது கிராம சமூகத்தின் மத்தியில் நீங்காத இடம்படித்துள்ளார். சமூக உறவுகளை வளர்த்துக்கொள்வதில் வல்லவர். அவரது ஓய்வுக்காலத்திலும் பொதுநலத்தைக் கருத்தில்கொண்டு சிறப்பாக வாழ வாழ்த்துகின்றேன். திருமதி. பு.சிவநேசன் பகுதித்தலைவர்,யா/மாதகல் சென்ஜோசப் ம.வி

### பெரும் பங்காற்றிய மகத்தான அதிபர்



2007 ஆம் ஆண்டு மாதகல் சென்ஜோசப் மகாவித்தியாலயத்தின் அதிபராக கடமையேற்று இன்று வரை தனது பணியினை சிறப்பாக ஆற்றி ஓய்வுபெறும் அதிபர் திரு.வி.நடராசா அவர்களின் பணியை அகமகிழ்ந்து வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடை கின்றேன். கடமையுணர்வு கட்டுப்பாடு அன்பு பணிவு போன் றவை இவர் அதிபராக வகித்த பதவிக்கு மேலும் மெருகூட்டி நின்றதுடன், பாடசாலையின் வளர்ச்சிக்காக இவரால் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்களின் இவரது பணி வாழ்வில் பல பதிவுகளை ஏற்படுத்தியுள்ளது. இவர் தனது பணியிலிருந்து ஓய்வு பெறுவது எமக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தினாலும் கூட இன்றைய நாளில் இவரது பணிசிறக்க வாழ்த்தி இவர் புகழ் பரவ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன். மா.ஜெரூட்(றெஜி)

*செயலாளர், பாடசாலை அபவிருத்திச்சங்கம், யா/மாதகல் சென். யோசப் ம.வி.*

### மணிவிழாக் காணும் நாயகனை வாழ்த்துகின்றோம்



பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது அரும்பாடுபட்டார்.இவர் மாணவர்களின் கல்வியில் மட்டுமல்ல நற்பண்புகளிலும் பல்லைக்கழகம் வரை மாணவர்கள் செல்வதற்கு வித்திட்டார். இவரது சேவையின் சான்றாக விளையாட்டு மைதானம் சான்றுபகர்கின்றது. இவருக்கு எனது உள்ளம் கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்து அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற எல்லாம் வல்ல அரசடி சித்தி விநாயகரின் திருவடிகளைப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

செ.மங்களேஸ்வரக்குருக்கள்-
*மாதகல் அரசடி சித்தி விநாயகர் கோவில், மாதகல்.*

**பாடசாலைச் சமூகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**யா/மாதகல் சென்.ஜோசப் மா.வி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிவேரியாவுக்கு ராணுவத்தை அழைத்தது பொலிஸ்மா அதிபரே

## பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியம்

கொழும்பு.ஒக் 10

வெலிவேரிய நகரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸ்மா அதிபரே இராணுவத்தை அங்கு அழைத்ததாக கம்பஹா பிராந்தியத்துக்கான பொலிஸ் அத்தியட்சகர் விஜித டி கொமசாரு தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு கம்பஹா நீதவான் டிக்ரி கே.ஜயதிலக்க முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அதில் சாட்சியமளித்த பொலிஸ் அத்தியட்சகர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கடந்த ஒகஸ்ட் முதலாம் திகதி வெலிவேரிய நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இராணுவத்தினரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் நெவில் டி சில்வாவின் நெறிப்படுத்தலின் கீழ் கம்பஹா பொலிஸ் அத்தியட்சகர் சாட்சியமளித்தார். வெலிவேரியவுக்கு தான் இராணுவத்தை அழைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் அத்தியட்சகர் இராணுவத்தை அழைக்காவிட்டால் இராணுவத்தை அழைத்தது யார் என்பதை நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனப் பாதிக்கப்பட்ட தரப்பின் சட்டத்தரணி கோரினார்.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் அத்தியட்சகர், வெலிவேரிய நிலைமை தொடர்பாகத் தான் பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்கு அறிவித்ததாகக் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில் பொலிஸ் மா அதிபரே இராணுவத்தை வெலிவேரிய பிரதேசத்துக்கு அழைத்ததாகத் தனக்கு கிடைத்துள்ள அறிக்கைகள் மூலம் அறியக் கிடைத்ததாகவும் அவர் கூறினார்.

எனினும் இதற்கு முன்னர் கம்பஹா நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்திருந்த கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர், கம்பஹா பொலிஸ் அத்தியட்சகரே இராணுவத்தை அழைத்திருந்தாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# ரூ.10 கோடி வரி வருவாய் இழப்பு

கொழும்பு.ஒக்.10

இறக்குமதி செய்யப்பட்டுள்ள ரூபா 270 கோடிகளுக்கு மேற்பட்ட பெறுமதிகொண்ட 300 சொகுசு வாகனங்களுக்கு முழுமையான சுங்கப் பரிசோதனை மேற்கொள்ளப்படாது அவை விடுவிக்கப்பட்டுள்ளன.

இதனால் அரசுக்குக் கிடைக்க வேண்டியிருந்த 10 கோடி ரூபா வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை சுங்கத் திணைக்களத்தின் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமைச் செயலர் டபிள்யூ. எம். ஆர்.பீ.விஜேகோன் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து பக்கச் சார்பற்ற விசாரணை மேற்கொள்ளுமாறு அவர் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பிரபல வர்த்தக நிறுவனமொன்றினால் பிரிட்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 300 சொகுசு வாகனங்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன.

10 கோடி ரூபா குறைத்து நூற்றுக்கு எழுபது வீதம் என்றவாறே சுங்கத் திணைக்களத்துக்கு அவற்றின் பெறுமதி காட்டப்பட்டுள்ளது.

300 வாகனங்கள் மீதான சம்பந்தப்பட்ட சுங்கப் பரிசோதனை பிரதி சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த வேளையில், அந்த வாகனங்களை விடுவிக்குமாறு சுங்கப்பிரிவின் பணிப்பாளர் நாயகத்தினால் எழுத்து மூல உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது- எனத் தெரிவித்தார். (ச-22)

# கமலேஷ் சர்மாவை சாடுகின்றது கனடா

ஒட்டாவா.ஒக் 10

மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள இலங்கைக்கு உடந்தையாகச் செயற்படுவதாக, பொதுநலவாயச் செயலர் கமலேஷ் சர்மாவை கனடா கடுமையாக விமர்சித்துள்ளது.

> “ கமலேஷ் சர்மா தலைமையிலான பொதுநலவாயச் செயலகத்துக்கு ஆண்டு தோறும் அளித்து வரும் 12 மில்லியன் பவுண்ட்ஸ் நிதியுதவியை மீளாய்வு செய்யப் போவதாக கனடா அறிவித்துள்ளது.

இலங்கைத் தலைமையையும், அதன் எல்லா தவறுகளையும் தற்காத்துக் கொள்ள உடந்தையாக இருப்பவர் கமலேஷ் சர்மா என பொது நலவாயத்துக்கான கனேடிய சிறப்புத் தூதுவர் ஹியூ சீகல் விமர்சித்துள்ளார்.

இலங்கை அரசு மனித உரிமை மீறல்களுக்குப் பதிலளிக்கத் தவறிவிட்டதால், கொழும்பில் அடுத்த மாதம் நடக்கவுள்ள பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிப்பதாக, கனேடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹாப்பர் கடந்த திங்கட்கிழமை அறிவித்திருந்தார்.

அத்துடன், பொது நலவாயத்துக்கு நிதியுதவி வழங்கும் இரண்டாவது பெரிய நாடான கனடா, கமலேஷ் சர்மா தலைமையிலான பொதுநலவாயச் செயலகத்துக்கு ஆண்டுதோறும் அளித்து வரும் 12 மில்லியன் பவுண்ட்ஸ் நிதியுதவியை மீளாய்வு செய்யப் போவதாகவும் அறிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள, பொதுநலவாயப் பேச்சாளர் றிச்சர்ட் உக்கு, கனடாவின் முடிவை மதிப்பதாகவும், ஆனாலும், 2009 ஆம் ஆண்டில் பொதுநலவாயத் தலைவர்கள் ஒருமனதாக எடுத்த, 2011 ஆம் ஆண்டில் உறுதிப்படுத்திய முடிவுக்கமையவே கொழும்பில் மாநாடு நடத்தப்படவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாகவும், அரசமைப்புக்கு முரணாகவும், அனைத்துலகச் சட்டத்தை மீறும் வகையிலும், இலங்கையின் பிரதம நீதியரசரைப் பதவி நீக்கிய ராஜபக்ஷவுக்கு, மறைமுகமாக முக்கியமான சட்டஆலோசனையை இந்திய இராஜதந்திரியான கமலேஷ் சர்மா வழங்கியதாக, ஹியூ சீகல் குற்றம்சாட்டியுள்ளார்.

பொதுநலவாய மாநாட்டை இலங்கை நடத்தக் கூடாது என்றும், அதனைப் பொதுநலவாய அமைப்பில் இருந்து இடைநிறுத்த வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஏப்ரலில் கனேடிய வெளிவிவகார அமைச்சரின் சார்பில், இலங்கைக்கான உண்மை கண்டறியும் பயணத்தை மேற்கொண்டிருந்தேன்.

றொறன்றோவுடன் போட்டியிடும் அளவுக்கு அதிசயமான புதிய நெடுஞ்சாலைகளையும் கட்டடங்களையும் கொழும்பில் பார்த்தேன். யாழ்ப்பாணத்தில், தமிழ் நாளிதழ் ஒன்றின் ஆசிரியரின் பணியகத்தில், குண்டு துளைத்த ஆசனத்தையும் நான் பார்த்தேன். என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# இலங்கையர் உட்பட ஆறு பேர் பிரிட்டன் பொலிஸாரால் கைது

பிரிட்டனில் இலங்கையர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பிரிட்டன் தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையைச் சேர்ந்த 38 வயதுடைய நபர் விசா அனுமதிக் காலம் முடிவடைந்த நிலையில் மேலதிக காலம் தங்கியிருந்துள்ளார்.

குறித்த நபர் கடையொன்றில் சட்டவிரோதமாக வேலைசெய்து கொண்டிருந்தவேளை குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் ஏனையோர் இந்தியா மற்றும் பங்களாதேஸைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட 6 பேரும் நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படும் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகப் பிரிட்டன் குடிவரவு தடுப்பு நடைமுறைப்படுத்தல் குழுவின் உதவி இயக்குநர் கொலின் போரிங்டொன் தெரிவித்துள்ளார்.

இந்த கைது நடவடிக்கையானது பிரிட்டனில் சட்டவிரோதமாகத் தங்கியிருப்போருக்கான எச்சரிக்கை எனவும் அவர் குறிப்பிட்டார்.

சட்டவிரோதமாக வியாபார நிலையங்களில் வேலை செய்யும் தொழிலாளிகள் கைது செய்யப்படும் பட்சத்தில் 10 ஆயிரம் பவுண்ட்ஸ் அபராதம் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. (த)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கடமைகளை

நல்லூர் கோயில் பின் வீதியில் இல -124 இல் உள்ள வடக்கு மாகாண முதலமைச்சரின் இல்லத்தில் வைத்தே அவர் கடமையைப் பொறுப் பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5)

### இணுவிலில்

கப்பட்டதாகவும் அப்பகுதிச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். அத்துடன் இணுவில் துரை வீதிப் பகுதியில் நேற்று மாலை புகை விசிறும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் இன்று அப்பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.(த-86)

### கனடாவின்

யளித்துள்ளனர். பொதுநலவாய நாடுகளின் தலை வர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டை இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு பயன்படுத்த கூடாது என்றும் பீரிஸ் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அதேவேளை, கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டின் வர்த்தக பொதுமன்றக் கூட்டத்தில் கனடா பிரதிநிதிகள் கலந்து கொள்வார்கள் என பொதுநலவாய அமைப்பின் வர்த்தக பேரவையின் பிரதான நிறைவேற்று அதிகாரிகலாநிதி மோகன் கவுல் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அமைப்பின் செயலகத்திற்கு கனடா, தனது நிதியை கடந்த 5 வருடங்களாக வழங்கி வருகிறது. அந்த நாடு அதனை தொடர்ந்தும் வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

### டில்லியின்

படுத்தி அர்த்த முள்ள அதிகாரப் பகிர்வு ஊடாக இனப் பிரச்சினைக்கு வெகு விரைவில் தீர்வைக் காணவேண்டும் என்றும், இந்திய அரசு இதில் உறுதியாக இருக் கின்றது என்றும் வலியுறுத்தினார்.

இதற்கு ஜனாதிபதி மஹிந்த பதிலளித்த போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசு நியமித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்றால் மட்டுமே இனப் பிரச்சினைக்கு வெகுவிரைவில் தீர்வைக் காணலாம் என்று குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதியின் இந்தப் பதில் தொடர்பில் நேற்று கருத்துத் தெரிவித்த போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கை அரசு நியமித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் தமிழ் மக்களுக்குத் தீர்வுகிடைக்காது என்பதை இந்தியா உட்பட சர்வதேச நாடுகளிடம் நாம் ஏற்கனவே கூறிவிட் டோம். இந்நிலையில், இந்திய வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை இலங்கை ஜனாதிபதி சந்தித்துப் பேசும் போது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்றால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணலாம் என்று கூறியுள்ளார்.

இந்தக் கருத்தின் ஊடாக இலங்கைத் தமிழருக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்பதால் தீர்வு கிடைக்கும் என்று கூறுவது நடை முறைச் சாத்தியமற்ற விடயமாகும்.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு 31 உறுப்பினர்களைக் கொண்டது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் மூவருக்கே இடமளிக்கப்பட்டுள்ளது. ஏனையோரில் மிகப் பெரும்பாலானோர் ஆளும்கட்சியினரைச் சார்ந்தவர்கள். எனவே, ஆளுந்தரப்பினர் எம்முடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தால்தான் தெரிவுக்குழுவில் நாம் பங்கேற்பது சாத்தியமாகும்.

நாம் நேரடியாகத் தெரி வுக்குழுவுக்குச் சென்றால் எமக்கு மொட்டை யடித்துத்தான் திருப்பி அனுப்புவார்கள்.

எனவே, இந்தத் தெரிவுக்குழுவில் எமக்கு நம்பிக்கை இல்லை. இதை இந்தியா உணர வேண்டும். இந்தியாவின் வேண்டுகோளின்படி 13 ஆவது திருத்தம் மற்றும் இனப் பிரச்சினை தொடர்பில் பேசுவ தற்கு நாம் தெரிவுக்குழுவுக்குப் போனால் எமக்கு எந்தப் பயனும் ஏற்படாது. எனவே, இலங்கை தொடர்பான தனது கொள்கையில் இந்தியா உடனடியாக மாற் றத்தை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (த-தி)

### இந்தியத்

வேற்றவில்லை.

இந்த நிலையில் தன்னால் மீறப்பட்ட ஒப்பந்தம் தொடர்பாக இந்தியா தலையிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. சம்பூர் அனல் மின் நிலைய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவந்த குர்ஷித் 13 ஆவது திருத்தம் தொடர்பாக பேசுவது மக்களை ஏமாற்றும் ஒரு நடவடிக்கை.

இதேவேளை, அதிகாரப் பகிர்வு தொடர்பாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளுக்கு செல்வது பிரயோசனமற்ற ஒன்று. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்று தீர்வொன்றைக் காண்பதே சிறந்தது. ஏனெனில் இலங்கை ஒரு இறையாண்மையுள்ள நாடு. அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே போன்ற நாடுகள் நேரடி அழுத்தத்தை இலங்கை மீது திணிக்க முடியாது - என்றார். (த-10)

### வடமாகாண

முதலமைச்சராக க.வி.விக்னேஸ்வரனைத் தெரிவு செய்தது. முதலமைச்சர் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்பாகச் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றிருந்தார்.

இந்த நிலையில் ஏனைய 29 உறுப்பினர்களும் நாளை வெள்ளிக்கிழமை பதவியேற்கவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் முன்பாகவே இவர்கள் பதவியேற்கவுள்ளனர்.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். நகரிலுள்ள தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்திய பின்னர் அவர்கள் யாழ். வீரசிங்கம் மண்டபத்துக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

இதன் பின்னர் மாகாண சபை உறுப்பினர்கள் 29 பேரும் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டு தமது மாகாண சபை உறுப்பினர் பதவியை ஏற்கவுள்ளனர்.

அடுத்து அமைச்சர்கள் நான்கு பேரும் தமக்கான பதவிப் பிரமாணத்தை செய்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-5)

### டில்லி

படக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

13ஆவது திருத்தத்துக்கு அப்பாற் செல்லும் தீர்வுக்கு இந்தியா தொடர்ந்தும் வலியு றுத்தும் என இந்திய வெளி விவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித் துள்ளமை குறித்து கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் சர்வதேச நாடுகளும், இந்தியாவும் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுப்பதை நாம் எதிர்க்கிறோம். இது விடயத்தில் இலங்கை அரசுக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்கத் தேவையில்லை.

இனப்பிரச்சினைத் தீர்வு என்ற பெயரில் அரசு முன்னெடுக்கும் முட்டாள்தனமான நடவடிக்கைகளுக்கு நாம்தான் எதிர்ப்புத் தெரிவிக்க வேண் டும்.

இனப்பிரச்சினை என்று கூறிக் கொண்டு சிறுபான்மையின சமூகம் முன்னெடுக்கும் தேவையற்ற நடவடிக்கைகளால் வரலாற்றுத் தொன்மைமிக்க பெரும்பான்மை இனமான எமது பௌத்த இனமே பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இதற்கு நாம் இனிமேலும் இடமளிக்க மாட்டோம்.

13ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிரான பௌத்த. சிங்கள அமைப்பினூடாக நாம் எமது நடவடிக்கைகளை ஆரம்பித்து ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிலை ஏற்படும் - என்றார்.

### மஹிந்தவுக்குத்

மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி மஹிந்தவை எச்சரித்து 13 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தைச் செயல்படுத்தச் சம்மதிக்க வைப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி மஹிந்தவைச் சந்தித்தபோது அவர் எதனையும் வலியுறுத்தவில்லை. மாறாக 13 ஆவது திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவே முடிவெடுக்கும் என்று ஜனாதிபதி மஹிந்த தெரிவித்ததற்குத் தலையசைத்து ஏற்றுக்கொண்டுள்ளார்.

13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் நேரடியாக அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இலங்கையை குர்ஷித் பணிய வைத்திருக்க வேண்டும். ஆனால் அவரோ ராஜபக்ஷ கூறியதற்குத் தலையாட்டிவிட்டு வந்திருக்கிறார்.

இதன் மூலம் ஈழத் தமிழர்களுக்கு மட்டுமன்றி இந்தியாவின் இறையாண்மைக்கும் குர்ஷித் துரோகமிழைத்திருக்கின்றார்.

தமிழர்களின் உணர்வுகளை மதிக்காத சல்மான் குர்ஷித்துக்கும் மத்திய அரசுக்கும் தமிழக மக்கள் சரியான நேரத்தில் பாடம் புகட்டுவார்கள் - என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 வயது அணிகளின் இறுதியாட்டம் இன்று

யாழ்ப்பாணம் ஒக். 10
யாழ்.கோட்ட பாடசாலைகளின் 18வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இதில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (23)

## கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 10
கரப்பந்தாட்ட தேசிய மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெற இருப்பதால் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் இலங்கைக் கரப்பந் தாட்ட மத்தியஸ் தர் சிங்கத்தில் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளல் வேண்டும்.
எனவே அதற்கான விண்ணப்பப் படிவங்களை 20 ஆம் திகதிக்கு முன்பாக பூரணப் படுத்தி கையளிக்குமாறு யாழ். மாவட்ட கரப் பந்தாட்டச் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (து)

## அரையிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், ஒக்
யாழ்.கோட்ட பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை சென்.ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணி மோதவுள்ளது.
2ஆவது அரையிறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியைஎதிர்த்து நாவாந்துறை ஆர்.சி. அணி மோதவுள்ளது. (து-23)

# சண்டிலிப்பாய் இந்துவை வீழ்த்தி கிண்ணம் வென்றது சோமஸ்கந்தா



வலி.வடக்கு, ஒக். 10
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நவமகாஜனன் சிற்பி தெ.து. ஜயரத்தினத்தின் 100 ஆவது பிறந்தநாளையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி சம்பிய னாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.
இரு அணிகளும் பலம் மிக்க அணிகளாகக் காணப்பட்ட போதிலும் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி பலத்த போட்டியின் மத்தியில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.
மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்றை சோமஸ்கந்தாக் கல்லூரி 25:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற இரண்டாம் சுற்றை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 25:20 புள்ளிகள் என்ற அடிப்ப டையில் வெற்றி பெற்றது.
மூன்றாம் சுற்று இரு அணிகளுக்கும் முக்கியமானதாக அமைந்தது. சோமஸ்கந்தாக் கல்லூரி மிகவும் நிதானமாக விளையாடி இறுதிச் சுற்றை 25:20 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (து-86)

# ஹாட்லி, வல்வை மகளிர் ஆசிரியர்கள் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 10
உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கிடையில் நடத்தப்பட்ட பெருவிளையாட்டுக்களில் ஆண்களுக்கான கிரிக்கெட்டில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஆசிரியர்கள் அணியும், பெண்களுக்கான எறிபந்து போட்டியில் வல்வை மகளிர் கல்லூரி ஆசிரியர் அணியும் சம்பியன்களாகின.
வடமராட்சி கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் யாழ். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்றது.
முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான எறிபந்து சுற்றுப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும், வல்வை மகளிர் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.
மூன்று செற்களைக் கொண்ட இந்தச் சுற்றுப் போட்டியில் போட்டியின் 25: 21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வல்வை மகளிர் கல்லூரி அணி வெற்றி பெற்றது. இதனை அடுத்து தம்மைச் சுதாகரித்துக் கொண்ட நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வல்வை மகளிர் அணியைத் தோற்கடித்தது.
இரு அணிகளும் 1:1 என்ற சமநிலையில் காணப்பட்டமையால் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக நடத்தப்பட்ட மூன்றாவது செற்றில் 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வல்வை மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் அணி வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.
இதேவேளை ஆண்களுக்கான எறிபந்து சுற்றுப் போட்டிகள் இன்று இடம் பெறவுள்ளன.
ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆசியர்கள் அணி சம்பியனாகியது. இதில் இரண்டாமிடத்தினை வல்வை சிதம்பராக் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தினை நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் பெற்றுக் கொண்டன. (து-400)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 10
யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டுமைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (து-23)

* * *

மாலுச் சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
**பி.ப 3.30 மணி**
அல்வாய் பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் சென். சேவியர் விளையாட்டுக்கழகம்.
**மாலை 4.30 மணி**
கலைமதி விளையாட்டுக் கழகம் எதிர் றெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்.(து-23)

## நாவாந்துறை சென்.மேரிஸ் அசத்தல்



யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு தைானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.
நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன்விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.
இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (து -23)

## திருமலை லீக் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 10
திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்கள், பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் 5 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 18 ஆம், 19 ஆம், 20 ஆம் திகதிகளில் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
18 ஆம் திகதி கழகங்களுக்கு இடையிலான போட்டியும் 19 ஆம் திகதி பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியும் இடம்பெறவுள்ளன.
20 ஆம் திகதி இறுதியாட்டங்கள் திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (து-23)

## ஆஸி அணியை இலகுவாக எடுத்துக் கொள்ளக் கூடாது



இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணியை இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது என இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் றோகித் சர்மா தெரிவித்துள்ளார். ஆஸ்திரேலிய வீரர்கள் இந்தியாவில் விளையாடிய அனுபவமுடைய வர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
ஒரு 20/20 சர்வதேசப் போட்டி, 7 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்காக ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு வந்துள்ளது. வழக்கமான ஆஸ்திரேலிய அணிகளை விட இந்த அணி அனுபவத்தில் குறைவான அணியாகக் காணப்படுகிறது.
இந்நிலையில் கருத்துத் தெரிவித்த றோகித் சர்மா, ஆஸ்திரேலிய அணி போட்டித் தன்மையான ஓர் அணி எனவும், அவ்வணியிலுள்ள அனேகமான வீரர்கள் இந்தியன் பிறீமியர் லீக் தொடரிலும், சம்பியன்ஸ் லீக் தொடரிலும் பங்குபற்றியுள்ளார்கள் எனக் குறிப்பிட்டார்.
ஆஸ்திரேலிய வீரர்கள் இந்திய ஆடுகள நிலைமைகளை நன்கறிவார்கள் எனக் குறிப்பிட்ட றோகித் சர்மா, ஆஸ்திரேலிய அணியை இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாது எனவும் அந்த அணி மிகவும் ஆபத்தானது எனவும் குறிப்பிட்டார். ஆஸ்திரேலிய அணியில் ஷேன் வொட்சன், மிச்சல் ஜோண்சன் மாத்திரம் 100 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளுக்கு அதிகமாக விளையாடியவர்களாக உள்ள போதிலும், அந்த அணி பலமான அணியெனக் [illegible] அவர், அவ்வணியின் துடுப்பாட்ட வீரர்கள் போட்டிகளை வென்று கொடுக்கக் கூடியவர்கள் எனவும் கூறினார். (து)

# காலிறுதி ஆட்டத்தில் வெற்றிபெற்ற அணிகள்

யாழ்ப்பாணம் ஒக்
யாழ்.கோட்ட பாடசாலைகளின் 14 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற அணிகளின் விவரம் வருமாறு.
முதலாவது காலிறுதியாட்டத்தில் சென்.சாள்ஸ் மகாவித்தியாலய அணியை எதிர்த்து குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் மகாவித்தியாலய அணிமோதிக் கொண்டது
இதில் குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் மகாவித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
2ஆவது காலிறுதியாட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்



புத்துறை இந்து மகாவித்தியாலய அணிமோதிக் கொண்டது.
இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
3ஆவது காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை ஆர். சி. அணியை எதிர்த்து சென்.ஜோண்ஸ் கல்லூரி அணிமோதிக் கொண்டது.
இரு அணியினரும் ஆட்டநேர முடிவில் எந்தவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றிதோல்வியைக் காண்பதற் காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் நாவாந்துறை ஆர்.சி. அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
4 ஆவது காலிறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியும் ஒஸ்மானியாக் கல்லூரி அணியும் மோதவிருந்தன.
ஒஸ்மானியாக் கல்லூரி அணி போட்டிக்கு சமுகம் கொடுக்காமையால யாழ். மத்தியகல்லூரி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (து-23)

## அரையிறுதி ஆட்டங்கள் இன்று

யாழ். கோட்ட பாடசாலைகளின் 16வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதியாட்டங்கள் இன்று வியாழக் கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
முதலாவது அரையிறுதி யாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து குருநகர் சென்.ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை அணிமோதவுள்ளது.
2ஆவது அரையிறுதியாட்டத்தில் சென்.ஜோண்ஸ் கல்லூரி அணியைஎதிர்த்து நாவாந்துறை ஆர். சி. அணி மோதவுள்ளது. (து-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# டில்சானின் முடிவு இன்று

டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவது குறித்து ரி.எம். டில்சான் இன்று அறிவிப்பார் என ஸ்ரீலங்கா கிரிக்கெட் தெரிவித்தது.

இலங்கை அணியின் சகலதுறை வீரர் திலகரட்ண டில்ஷான் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவுள்ளார். அவர் தனது ஓய்வினை இன்று இடம்பெறவுள்ள ஊடகவிய லாளர் சந்திப்பில்வெளிப்படுத்தவுள்ளார்.

இது தொடர்பாக இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், இதுதொடர்பான விளக்கமளிப்பு இன்றைய ஊடக சந்திப்பில் வழங்கப்படுமெனக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அணி தனது அடுத்த டெஸ்ட் தொடராகப் பாகிஸ்தான் அணியுடன் எதிர்வரும் டிசெம்பரில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ள நிலையிலேயே டில்ஷானின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதுவரை 87 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியுள்ள திலகரட்ண டில்ஷான், 40.98 என்ற சராசரியில் 5492 ஓட்டங்களையும், 16 சதங்கள், 23 அரைச் சதங்களையும் பெற்றுள்ளார். அத்தோடு அவர் 39 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

திலகரட்ண டில்ஷான் 11 டெஸ்ட் போட்டிகளில் அணித்தலைவராகவும் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)



# ஷரபோவா திடீர் விலகல்

உலக தரவரிசையில் முன்னணியில் உள்ள வீராங் கனைகள் மட்டும் பங்கேற்கும் ரென்னிஸ் போட்டியிலிருந்து மரியா ஷரபோவா விலகியுள்ளார். உலக தரவரிசையில் முதல் 8 இடங்களை வகிக்கும் வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்கும் டபிள்யூ.டி.ஏ. பெண்கள் சம்பியன்ஷிப் ரென்னிஸ் போட்டி ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

இதன்படி இந்த ஆண்டுக்கான 43ஆவது பெண்கள் சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை துருக்கியின் இஸ்தான்புல் நகரில் நடைபெற உள்ளது.இந்த போட்டியில் விளையாட தரவரிசையில் 3ஆவது இடம் வகிக்கும் ரஷ்யப் புயல் மரியா ஷரபோவா தகுதி பெற்றிருந்தார். இந்த நிலையில் அவர் இந்த போட்டியில் இருந்து திடீரென விலகியுள்ளார். தோள்பட்டை காயத்தால் அவதிப்பட்டு வருவதால், இந்தப் போட்டியில் தன்னால் பங்கேற்க இயலாது என்று ஷரபோவா தெரிவித்துள்ளார். மேலும் இதனால் தான் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

முதல் தர வீராங்கனைகளான செரீனா வில்லியம்ஸ்(அமெரிக்கா), விக்டோரியா அஸரென்கா(பெலாரஸ்), அக்னீஸ்கா ராட்வன்ஸ்கா(போலந்து), லீ நா(சீனா) ஆகியோர் இந்தப் போட்டியில் களம் காணும் வாய்ப்பை ஏற்கனவே உறுதி செய்து விட்டனர். ஷரபோவாவின் விலகல் மூலம் செக்குடியரசின் பெட்ரா கிவிடோவா, இத்தாலியின் சாரா எர்ரானி, செர்பியாவின் ஜெலினா ஜான்கோவிச் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர். இன்னும் மீதமுள்ள ஒரு இடத்துக்கு ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பருக்கு வாய்ப்பு கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)

# வொட்சன் அறிவிப்பு

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம்மேற் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட தொடரில் -பங்குபற்றவுள்ள ஆஸ்திரேலிய அணியின் இளம் வீரர்களுக்கு அவ்வணியின் சிரேஷ்ட சகலதுறை வீரரான ஷேன் வொட்சன் அறிவுரைகளை வழங்கியுள்ளார்.


ஒரு 20/20 சர்வதேசப் போட்டி, 7 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் அடங்கிய இந்தத் தொடர் நாளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தத்தொடருக்கான குழாமில் இடம்பெற்றிருந்த மைக்கல் கிளார்க் தொடரிலிருந்து விலகியுள்ள நிலையில், இந்தக் குழாமின் அனுபவ வீரராக ஷேன் வொட்சனே காணப்படுகிறார்.

இதன்காரணமாக இளம் வீரர்களுக்கு அவர் இந்திய ஆடுகள நிலைமைகள், எவ்வாறு சிறப்பாக விளையாடுவது போன்ற அறிவுரைகளை வழங்கி வருகிறார். விக்கெட் காப்பாளரான பிரட் ஹடினுடன் இணைந்து ஷேன் வொட்சன் இந்தக் குழாமின் வழிகாட்டியாக செயற்படுவதாக அவ்வணியின் வீரர் அடம் வோகஸ் குறிப்பிட்டார்.

ஷேன் வொட்சன் ஒரு சிரேஷ்ட வீரர் எனக் குறிப்பிட்ட அடம் வோகஸ், அவர் இந்தியாவில் அதிகளவிலான போட்டிகளில் பங்குபற்றிய அனுபவம் கொண்டவர் எனவும், அதன் காரணமாக அவர் ஏனைய வீரர்களுடன் தனது அனுபவங்களைப்பகிர்ந்துகொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார். (த)






# தென்னாபிரிக்காவுக்கு இந்தியா அழைப்பு

தென்னாபிரிக்கா- இந்தியா அணிகள் பங்கேற்கும் போட்டிகளுக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா செல்லும்(நவம்பர் 21- ஜனவரி 19) இந்திய அணி இரண்டு 20/20, 7 ஒருநாள் மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கிறது. இந்தப் போட்டிகளுக்கான அட்டவணை தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு தென்னாபிரிக்க கிரிக்கெட் தலைமை அதிகாரியாக ஹாருண் லார்கட் தெரிவு செய்யப்பட்டதால், இந்திய கிரிக்கெட் சபை அதிருப்தியில் இருந்தது. இதனால் இந்தத் தொடர் நடைபெறுவது உறுதியில்லாமல் இருந்தது.

இந்நிலையில் இந்தத் தொடர் குறித்து விவாதிக்க தென்னாபிரிக்க கிரிக்கெட் தலைவர் கிறிஸ் நென்ஜானி அழைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை செயலர் சஞ்சய் படேல், இரு அணிகள் பங்கேற்கும் தொடர் குறித்து விவாதிக்க இந்தியா வருமாறு நென்ஜானியை அழைத்துள்ளோம். இந்தக் கூட்டம் சென்னை அல்லது மும்பையில் நடக்கலாம், இன்னும் இதற்கான திகதியை முடிவு செய்யவில்லை.

தென்னாபிரிக்க கிரிக்கெட்டின் தலைவரை மட்டும்தான் வரச் சொல்லியுள்ளோம், ஹாருண் லார்கட் இதில் பங்கேற்க மாட்டார்.

தொடர் அட்டவணையை தென்னாபிரிக்க கிரிக்கெட் தன்னிச்சையாக அறிவித்தமை பற்றி எங்களின் அதிருப்தியை அவர்களிடம் தெரிவித்து விட்டோம்.

இது தொடர்பான ஒப்பந்தத்தில் நாங்கள் கையெழுத்துப் போடவில்லை. எனவே, சட்டச் சிக்கல் வர வாய்ப்பில்லை. இந்தத் தொடரை நடத்தவே நாங்கள் விரும்புகிறோம், அதேநேரம் எங்களது உரிமையை விட்டுக் கொடுக்கவும் மாட்டோம் என்று தெரிவித்துள்ளார். (த)

தென்னாபிரிக்க கிரிக்கெட்டின் தலைவரை மட்டும்தான் வரச் சொல்லியுள்ளோம், ஹாருண் லார்கட் இதில் பங்கேற்க மாட்டார்.

# சச்சினும் டிராவிட்டும் சிறந்த மாணவர்கள்



கிரிக்கெட் ஜாம்பவான்கள் சச்சின் டெண்டுல்கர் மற்றும் ராகுல் டிராவிட் இருவருமே எனது சிறந்த மாணவர்கள் என சுனில் கவாஸ்கர் கூறியுள்ளார். 20/20 போட்டியிலிருந்து சச்சின், டிராவிட் ஆகியோர் ஓய்வுபெற்றுவிட்டனர். இது குறித்து சுனில் கவாஸ்கர் கூறுகையில், டிராவிட்டும், சச்சினும் இந்திய கிரிக்கெட்டுக்கு அளித்துள்ள அர்ப்பணிப்பு அளவிட முடியாதது. இரண்டு [illegible] சிறந்த மாணவர்கள், இரு [illegible] பெரியவர்? யார் சிறியவர்? என்று வேறுபடுத்த முடியாது. சச்சின் இடது கை என்றால் டிராவிட் வலது கை, இரு கைகளுமே நமக்கு வேண்டும். மூன்றாவது வீரராக களமிறங்கிய டிராவிட்டும், நான்காவதாக களமிறங்கிய சச்சினும் இந்திய அணியை பலமுறை சரிவில் இருந்து மீட்டுள்ளனர். இருவரும் சேர்ந்து பலமுறை 100 ஓட்டங்களுக்கு மேல் எடுத்துள்ளனர். அது உலக சாதனையாகவும் உள்ளது.

டிராவிட்டுக்குத் தலைமைத்துவப் பண்பு சிறப்பாக உள்ளது. ஸ்பொட் பிக்சிங்கில் சிக்கிய ராஜஸ்தான் அணியை மீண்டும் புத்துணர்வு பெறச் செய்து இறுதிப் போட்டி வரை அழைத்து வந்த பெருமை அவருக்கு உண்டு என்று தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. தான் முதலிடம்

இந்தியாவுக்கெதிரான தொடரின் முடிவில் ஆஸ்திரேலிய அணி முதலிடம் பிடிக்கும் வாய்ப்பு உள்ளது என்று ஆஸ்திரேலிய பயிற்சியாளர் ஸ்டீவ் ரிக்சன் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியா சென்றுள்ள ஆஸ்திரேலிய அணி, ஒரே ஒரு சர்வதேச 20/20 மற்றும் ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

20/20 போட்டி இன்று ராஜ்கோட்டில் நடக்கிறது. ஒருநாள் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி புனேயில் நடக்கிறது.

சர்வதேச கிரிக்கெட் சபை தரவரிசையில் இந்திய அணி 123 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. ஆஸ்திரேலிய அணி 115 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. ஒருநாள் தொடரை ஆஸ்திரேலிய அணி முழுமையாக கைப்பற்றும் பட்சத்தில் முதலிடத்துக்கு முன்னேறலாம்.

ஆஸ்திரேலிய பயிற்சியாளர் ஸ்டீவ் ரிக்சன் கூறுகையில், இந்தியாவுக்கெதிரான ஒருநாள் தொடரின் மூலம் ஆஸ்திரேலிய அணிக்கு முதலிடம் பிடிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே வீரர்கள் மிகுந்த கவனமுடன் விளையாட வேண்டும். இத்தொடரின் முடிவில்முதல் தர அணி என்று பெருமை பெற முயற்சிக்க



வேண்டும்.

எங்கள் அணியில் உள்ள ஒரு சில வீரர்கள். இந்தியாவில் நடக்கும் ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் பங்கேற்றுள்ளனர். இதனால் இந்திய வீரர்களின் பலம், பலவீனம் குறித்து நன்கு அறிந்திருக்க வாய்ப்பு உள்ளது. தவிர, இந்திய ஆடுகளம் குறித்த அனுபவம் எங்கள் அணி வீரர்களுக்கு கிடைத்துள்ளது.

சமீபத்தில் முடிந்த சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் இறுதிச் சுற்றில் விளையாடிய ராஜஸ்தான் மற்றும் மும்பை அணிகளுக்காக எங்கள் அணியை சேர்ந்த ஐந்து வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். இது. ஆஸ்திரேலிய அணிக்கு கூடுதல் பலமாக அமையலாம். முதுகு வலி காரணமாக அணித் தலைவர் மைக்கல் கிளார்க் இல்லாதது பின்னடைவான விடயம். அணித்தலைவர் பொறுப்பில் ஜார்ஜ் பெய்லி சிறப்பாக செயல்படுவார் என்று நம்புகிறேன்-என்றார். (த)

# சச்சினின் ஓய்வு நெருங்குகிறது



உலக சாதனையாளரான சச்சின் டெண்டுல்கரின் ஓய்வுக்கு நீண்ட காலங்கள் இல்லையென இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார். அத்தோடு, சிறப்பான இனிங்ஸொன்றை ஆடிய பின்னரே சச்சின் டெண்டுல்கர் ஓய்வு பெற வேண்டுமெனவும் சௌரவ் கங்குலி குறிப்பிட்டுள்ளார்.

ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 20/20 போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ள சச்சின் டெண்டுல்கர், டெஸ்ட் போட்டிகளில் மாத்திரம் தற்போது பங்குபற்றி வருகிறார்.

இந்நிலையில், சச்சின் டெண்டுல்கரின் ஓய்வுக்கான நாள்கள் அதிகமாக இல்லை என சௌரவ் கங்குலி குறிப்பிட்டுள்ளார்.

சச்சின் டெண்டுல்கரின் ஓய்வு குறித்து அதிக ஊகங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட சௌரவ் கங்குலி, அவை சச்சின் டெண்டுல்கர் மீது அழுத்தங்களை ஏற்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

சச்சின் டெண்டுல்கரின் ஓய்வு மிகவும் அதிக தூரத்தில் இல்லையென தான் கருதுவதாகவும், ஆனால் அவர் ஓய்வுபெறும் போது அணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கும் இனிங்ஸை ஆடிய பின்னரே ஓய்வு பெற வேண்டுமென கங்குலி குறிப்பிட்டுள்ளார். (த)

# ஆட்டத்தில் மாற்றம்

தனது துடுப்பாட்ட நுட்பத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் சுரேஷ் ரெய்னா குறிப்பிட்டுள்ளார். ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாடும் போது தன்னால் சிறப்பாக உணர முடிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட அணிகளின் முக்கிய வீரரான சுரேஷ் ரெய்னா, சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முக்கிய வீரராகவும் காணப்படுகிறார்.

அண்மைக்காலத்தில் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வரும் அவர், சர்வதேசப் போட்டிகளில் தொடர்ச்சியாக



மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமெனவும், கடுமையாக உழைக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு, சர்வதேசப் போட்டிகள் முன்னேற் றங்களை ஏற்படுத்துவதிலேயே தங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரிலும், இந்தியன் பிறீமியர் லீக் தொடரிலும் சிறப்பான ஆட்டத்தைவெளிப்படுத்தியதாகக் குறிப்பிட்ட சுரேஷ் ரெய்னா, சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டதால் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பு அதிகமாகக் கிடைத்திருக்கவில்லை எனக் குறிப்பிட்டார்.

புதிய பந்தினை எதிர் கொள்வதற்கான பயிற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்ட சுரேஷ் ரெய்னா, அதனைத் தவிர, தனது துடுப்பாட்டத்திலும் நுட்ப மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார். இவையனைத்தும் தனக்கு உதவி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த)

**FOR SALE**

**Used Solar Panels (BP Australia) For Sale**

19, சிறாம்பியடி ஒழுங்கை, ஸ்ரான்லி வீதி, யாழ்ப் பாணம்.

**ஓட்டோ விற்பனைக்கு**

NP YG xxxx புத்தகம் உட்பட அனைத்து ஆவணங்களுடனும்.

தொடர்பு:- 077 6487264

**Accounting புதிய பிரிவு**

A/L 2014 = பங்குடமை Sat,Sun 4 – 5Pm

A/L 2015 = வங்கி இணக்கக் கூற்று Sat,Sun 2 – 3Pm

Paper Class = Sat,Sun 3 - 4 Pm

Mr.K.பாலகஜன் B.Com(Jaf),H.N.Dip.inAcc

NEC மானிக்கூட்டு வீதி. யாழ்நகர். (பெருமாள் கோவில் அருகாமை)

**Free HARDWARE & NETWORKING WORK SHOP** (with certificate) தமிழ் மொழி விளக்கங்களுடன்

நாளை 11 / 10 / 2013 காலை 9.30 முதல் 2 மணி வரை (வெள்ளிக்கிழமை)

இடம் - DMI COMPUTER EDUCATION No. 113 கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் (சயன்ஸ் ஹோல் அருகாமை)

பயிற்சிப்பட்டறையில் பங்கு பற்றுவதன் மூலம்....



நமது கணினிகளில் பிழைகளைக் கண்டறிந்து திருத்தம் செய்து-பராமரித்துக் கொள்வதற்கு கணினியை அசம்பிள் செய்து கொள்வதற்கு OS installation, Software installation Laptop சேவிஸ் செய்தல் போன்ற விடயங்கள்.

பதிவுகளுக்கு: உங்கள் பெயரை 0777240707 க்கு SMS செய்யுங்கள்

DMI COMPUTER EDUCATION

**வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்**

வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிகிறி. G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுதிகதி 12Oct.

மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)

புலமைப்பரிசிலிற்கு: Type <BIT><your name> & send to 772395895

**அறிவூட்டல் செயலமர்வு**

விடயம் : தூய உற்பத்தி நடைமுறைகள்(CLEANER PRODUCTION PRACTICES)

காலம் : 29.10.2013

இடம் : வர்த்தக தொழிற்துறை மன்றம், 124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்

எமது மன்றத்தினால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களது வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும், விரயங்களை தவிர்ப்பதனூடாக உற்பத்தி செயற்பாடுகள் மற்றும் உற்பத்தி சேவைகளை மேம்படுத்துகின்ற சிறந்தவொரு நிகழ்வாகவும், காலத்தின் தேவை கருதியும் மேற்படி செயலமர்வு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

எனவே மேற்படி செயலமர்வில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 26.10.2013ம் திகதிக்கு முன்னர் தங்களது பதிவுகளை உறுதிசெய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் 0212226609.

**தேவை**

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வைத்திய சாலைக்கு பின்வரும் ஆள்கள் உடனடியாகத் தேவை.

வைத்தியர்கள் - RMO, RMP, MBBS, MD (RUSSIA)

தாதிமார்கள் - (தங்கி வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்)

சாரதிகள் - (சாரதி அனுமதிப்பத்திரம் எடுத்து 5வருடங்கள் அனுபவம் மற்றும் தங்கி வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.)

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:- 0777 721768

**Study in Latvia ( Europe)**

**Schengen Visa( Valid for 25 Countries)**

* Bachelors / Master / Doctoral level
* Government Approved University
* English Medium
* IELTS Not Required
* Easy Visa procedures
* One day old funds acceptable
* Very low course fee
* Low cost of living
* 20 Hours part time Allowed
* Dependant can work full time

iCS Study Overseas

தொடர்புகளுக்கு

77, Clock Tower Road, Jaffna.

021 7306000, 077 3013060

www.icssrilanka.com

## மரண அறிவித்தல்

**அருட்சகோதரி புளோரினா பத்திநாதர் (தி.சி)**



அலுக்கை, அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருச்சிலுவை கன்னியர் சபை அருட்சகோதரி புளோரினா (நேசரட்ணம்) பத்திநாதர் நேற்று (09.10.2013) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் பத்திநாதர்-மரியம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற ஜெயரட்ணம் மற்றும் ஞானரட்ணம், தேவரட்ணம், யோகரட்ணம், பாலரட்ணம், ஜீவரட்ணம், நவரட்ணம், குணரட்ணம், தவரட்ணம், தனரட்ணம், அருட்தந்தை ஜெபரட்ணம், விமலரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராசேந்திரம், காலஞ்சென்ற இராசநாயகம், மரியதாசன், நவமணி, ஜசிந்தா காலஞ்சென்றவர்களான பபா மரியற்றா, ஆனந்தராஜா மற்றும் அருள்தாசன், ஜெகசோதி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ் கடற்கரை வீதியிலுள்ள திருச்சிலுவைக் கன்னியர் மடத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று (10.10.2013) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியிலிருந்து யாழ்.மரியன்னை பேராலயத்தில் அவரது பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அருட்தந்தை ப.யோ.ஜெபரட்ணம் அடிகளாரும்,

திருச்சிலுவை கன்னியர் சபை மாகாணத் தலைவியும்.

(32568) (7.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.